16

# சமூக மஞ்சரி

(The Journal of Social Sciences)
(சமூக விஞ்ஞானச் சஞ்சிகை)

மலர் 1 | ஆடி — மார்கழி 1960 | இதழ் 2

o வரலாறு என்றால் என்ன?
கலாநிதி சிரிமா கிரிபமுன

o ஈழத்தின் சாசனங்கள் கூறும் வரலாறு
கலாநிதி லக்ஷ்மன் பெரேரா

o வங்கிகள் தேசியமயமாக்கப்படல் கூடாது
சி. லோகநாதன் அவர்கள்

o இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாறு
கலாநிதி ஐ. எச். வன்டன்டிரிசன்

o இலங்கை அரசியல் வளர்ச்சியின் பொருளாதாரப்பின்னணி
ம. இராசநாயகம் அவர்கள்

o அமைச்சர்களும் பொதுசனச் சேவையாளர்களும்
கலாநிதி ஏ. ஜெ. வில்சன்

o முதிர்ந்தோர் கல்வியின் விரிவு
கலாநிதி சே. தனிநாயகம் அடிகள்

o யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம்
வ. மகாதேவன் அவர்கள்

o இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி
செ. மனோகரன் அவர்கள்

o வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம்
கலாநிதி ஜி. ஜி. ஆர். தம்பையாப்பிள்ளை

ஆசிரியர்:

அ. தவராஜன் பெனடிக்ற்
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை.

விலை
ரூபாய்
ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரையிடவிருக்கும் தமிழ் திரைப்படங்கள்

ஸிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தார்
இவ்வருடத்தில் திரையிடப் பதிவு செய்துள்ள
திரைப்படங்களில் சில பின்வருமாறு :-

**சகோதரி**
பாலாஜி, ராஜசுலோசனா.

**பாவை விளக்கு**
சிவாஜி கணேசன்,
எம். என். ராஜம்.

**பாக்தாத் திருடன்**
எம். ஜி. இராமச்சந்திரன்,
வைஜந்திமாலா.

**பார்த்திபன் கனவு**
ஜெமினி கணேசன்,
வைஜந்திமாலா.

**ராஜ பக்தி**
சிவாஜிகணேசன், பானுமதி

**குமாரதேவன்**
எம். ஜி. இராமச்சந்திரன்,
ஜமுனா, ராஜசுலோசனா.

**கொஞ்சும் சலங்கை**
ஜெமினி கணேசன்,
சாவித்திரி.

**தாய் மகளுக்கு கட்டிய தாலி**
எம். ஜி. இராமச்சந்திரன்
ஜமுனா, ராஜசுலோசனா,

**பவானி**
எம். ஜி. இராமச்சந்திரன்,
எஸ். எஸ். ஆர், பானுமதி.

**மானம் காத்த மனைவி**
எம். ஜி. இராமச்சந்திரன்,
அஞ்சலி தேவி, கண்ணம்பா.

**...லோரும் இந்நாட்டு மன்னர்**
ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி.

**தெய்வப் பிறவி**
சிவாஜி கணேசன், பத்மினி.

**சகுந்தலை**
வைஜந்திமாலா,
ஜெமினி கணேசன்.

**அரசிளங்குமரி**
எம். ஜி. இரமச்சந்திரன்,
பத்மினி, இராஜசுலோசனா.

**கண் திறந்தது**
மாஸ்டர் வைஷ், மைனாவதி.

**மணி மண்டபம்**
ஜெமினி கணேசன்,
சாவித்திரி.

**மருதநாட்டு வீரன்**
சிவாஜி கணேசன், ஜமுனா

**தாய்நாடு காத்த தனயன்**
என். டி. ராமராவ்,
சாவித்திரி, சரோஜாதேவி.

**நடமாடும் தெய்வம்**
சிவாஜி கணேசன், ஜமுனா.

**வடிவுக்கு வளைகாப்பு**
சிவாஜி கணேசன்,
சாவித்திரி.

**வீரக் கனல்**
ஜெமினி கணேசன்,
அஞ்சலி தேவி.

"ஏவிஎம்மின்"

**களத்தூர் கண்ணம்பா**
ஜெமினி கணேசன்,
சாவித்திரி, பாலையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*To be a Man Among Men*

**USE**

# OLD SPICE

**Men's Toilet Preparation**

*AVAILABLE AT ALL LEADING STORES*

*Sole Agents & Distributors*

**STERLING PRODUCTS LTD.**

MAIN STREET,
COLOMBO-11

*Telephone No.* — 2984

# ஈழநாடு

வாரம் இரு முறை

★

மகிழ்ச்சி தரும்
ஒரு நற்செய்தியை
வாசகர்களுக்குத்
தெரிவிக்கவிரும்புகிறோம்

★

வழக்கமான கட்டுரைகள்,
சிறுகதை, அரசியற் குறிப்புகள்,
சிறுவர் பகுதி, சினிமா உலகம்
முதலிய அம்சங்களுடன்

ஒவ்வொரு

**புதன்கிழமையும்
சனிக்கிழமையும்**

வெளிவருகின்றது.

★

— விலை சதம் 10 —

★

உங்கள் பிரதிக்கு
விற்பனையாளரிடம் இன்றே
பதிவு செய்யுங்கள்.

*சிறந்ததையே வாங்குங்கள்!*

**பிலிப்ஸை வாங்குங்கள்**

PHILIPS

பெரிய அகங்களுக்கும் சிறியனவிற்கும்
— பாரமான பணப்பைகளுக்கும் பாரமற்றவைக்கும்
— மின்சாரப் பாவனைக்கும் பாட்டரிப் பாவனைக்கும்
— பிலிப்ஸே சிறந்தது.

ROCHE

**மொரிஸ் ரோச் லிமிட்டெட்**

*பாங்ஷால் வீதி, — கொழும்பு.*

*இன்றே விஜயம் செய்யுங்கள்!*

அறிவியல், பொருளாதாரம், சட்டம், வைத்தியம்
சரித்திரம், தத்துவம், சமயம், இலக்கியம்,
விஞ்ஞானம் சம்பந்தமான நூல்கள்

மற்றும்

வார – மாத சஞ்சிகைகள்

யாவும் எங்களிடம் கிடைக்கும்.

# லேக்ஹவுஸ் புத்தகசாலை

யாழ்ப்பாணம் – கொழும்பு – கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமூக மஞ்சரி

வருடத்திற்கு இருமுறை வெளியிடப்படும்

**— சமூக விஞ்ஞானச் சஞ்சிகை —**

வரலாறு, புவியியல், பொருளியல், அரசியல், சமூகவியல், சட்டம், கல்வி, தத்துவம்.


ஆசிரியர்:

அ. தவராஜன் பெனடிக்ற்,

மார்ஸ் மண்டபம்,

இலங்கைப் பல்கலைக் கழகம்,

பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஒத்துழைப்பு வேண்டும் (ஆசிரியவுரை) | |
| வரலாறு என்றால் என்ன? | 1 |
| கலாநிதி (திருவாட்டி) சிரிமா கிரிபமுன | |
| ஈழத்தின் சாசனங்கள் கூறும் வரலாறு | 4 |
| கலாநிதி லக்ஷ்மன் எஸ். பெரேரா | |
| வங்கிகள் தேசியமயமாக்கப்படல் கூடாது | 16 |
| சி. லோகநாதன் அவர்கள் | |
| இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாறு | 25 |
| கலாநிதி ஐ. எச் வன்டன்டிரிசன் | |
| இலங்கை அரசியல் வளர்ச்சியின் பொருளாதாரப் பின்னணி | 44 |
| ம. இராசநாயகம் அவர்கள் | |
| அமைச்சர்களும் பொதுசனச் சேவையாளர்களும் | 54 |
| கலாநிதி ஏ. ஜெ. வில்சன் | |
| முதிர்ந்தோர் கல்வியின் விரிவு | 60 |
| கலாநிதி சேவியர் எஸ். தனிநாயக அடிகள் | |
| யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம் | 78 |
| வ. மகாதேவன் அவர்கள் | |
| இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி | 85 |
| செ. மனோகரன் அவர்கள் | |
| வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம் | |
| கலாநிதி ஜி. ஜி. ஆர். தம்பையாப்பிள்ளை | 95 |
| நன்றியுரை | — |
| சமூக மஞ்சரி செயற்குழு | (கடைசி உட்புற அட்டை) |


இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் வெளியிடும் கருத்துக்கள் யாவும் அவ்வக் கட்டுரையாளர்களுக்கே உரியன. தரமான கட்டுரைகள் வரவேற்கப்படும்.

ஆசிரியர்.

# சமூக மஞ்சரி


| மலர் 1<br>இதழ் 2 | தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத் தூறு மறிவு — குறள் 396 | ஆடி—மார்கழி<br>1960 |
|---|---|---|


## —ஒத்துழைப்பு வேண்டும்—

சீந்திவிடப்பட்ட விகடத்துணுக்குகள் இடையிடையே மின்னச், சுவையான கதைகளையும், திரைப்படச் செய்திகளையும், தம் மகத்திற் கொண்ட சஞ்சிகைகளே இன்று பொதுமக்களது உள்ளங்களை வசீகரிக்கின்றன. நாளாந்த அலுவல்களாற் சலிப்படைந்தோர் அத்தனைபேரும் தமது ஓய்வு வேளைகளைப் போக்குவதற்குகந்த சாதனங்களாக இவற்றையே தெரிந்தெடுப்பதில் அதிசயமேதுமில்லை. இதற்கு மாறாகக், கல்வியறிவூட்டும் பெருநோக்குடன் எழுதப்படும் கட்டுரைகள் பொழுதுபோக்கிற்காகப் படிப்பதற்கு ஏற்றனவல்ல. இவை அறிவிற்கு விருந்தளிக்கும் ஆற்றல் மிக்கனவேயானாலும், அலுத்துப்போன மனங்களைத் தம்மால் இழுத்தெடுக்கும் வல்லமை இவற்றிற்கு இல்லை. ஆகையால் "சமூக மஞ்சரி" போன்ற சஞ்சிகைகளை விரும்பிப் படிக்கக்கூடியோரது எண்ணிக்கை அதிகமானதல்ல. இத்தகைய காரணங்கள் பற்றியே பயனுள்ள சஞ்சிகைகள் எளிதில் தோன்றுவதில்லை; தோன்றினாலும் நெடுங்காலம் வாழ்வதில்லை.

சமூக விஞ்ஞானக் கல்வியறிவைத் தமிழ்மொழி வாயிலாகப் பெறவுதவும் நோக்குடன் வெளியிடப்படும் இச்சஞ்சிகையின் வளர்ச்சிப்பாதையை இன்னோரன்ன தடைக்கற்கள் பல முற்றுகையிடுகின்றன என்பதை வாசகர்கள் உணர்வார்கள். இந்நிலையில் நாம் யாவரும் ஒன்றுபட்டு ஒத்துழைத்தாலன்றி எமது முயற்சியில் வெற்றியீட்டுவது அரிதாகும். எனவே, நாம் ஈடுபட்டுள்ள துறைகளில் அக்கறையுள்ள சகலரும் எம்முடன் தொடர்புகொண்டு, எமது பணிக்கு உற்ற துணையாக நிற்கவேண்டுமென அன்பாக அழைக்கின்றோம்.

ஏற்கனவே பலர் எமக்கு ஆக்கமிகு ஆலோசனைகள் தந்து தக்க துணைபுரிவது எம்மைப் பெரிதும் ஊக்குவிக்கின்றது. எமது கட்டுரைகளின் தரத்தைத், தமிழ் உரைநடையை, விற்பனவு முறையை எல்லாம் முன்னேற்றுவதற்காக வாசகர்கள் வகுத்துத் தரும் வழிவகைகள் எமக்கு நற்பயன் நல்குகின்றன. முக்கியமாகத் தத்தம் கலாசாலைகளிலே சமூக மஞ்சரியைப் பரப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை ஏற்றுத் தமிழ்ப் பணிபுரியும் ஆசிரியர் யாவரும் எமது நன்றிக்கு உரியவர்கள். இவர்களைப் போன்று மேலும் பலர் முன் வரல் வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறோம்.

* * *

சமூக மஞ்சரியின் முதலாவது மலரினது இரண்டாவது இதழை வாசகப் பெருமக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இவ்விதழின் நிறத்திலே பேதமுண்டாயினும், தரத்திலே குறைவு இருக்காது எனவும், இம்முறை நாம் வெளியிடும் கட்டுரைகளும் பயனுளவாக அமையும் எனவும், எதிர்பார்க்கின்றோம்.

கலாநிதி லக்ஷ்மன் எஸ். பெரேரா விவரிக்கும் "ஈழத்தின் சாசனங்கள் கூறும் வரலாற்றி"னது முதலாவது பாகம் இவ்விதழில் வெளிவருகின்றது. ஏனைய பாகங்கள் அடுத்தடுத்த இதழ்களிற் பிரசுரிக்கப்படும்.

இலங்கை வங்கிகளின் தேசியமயமாக்கத்திற்குச் சாதகமாகக் கலாநிதி குணசேகரா சென்ற இதழில் தீட்டிய கட்டுரைக்குப், பதிலளிக்கும் முகமாக, இலங்கை வங்கியின் பிரதம அதிபர் சி. லோகநாதன் அவர்கள் இவ்விதழில் எழுதுகின்றார். இன்று அரசியல் வட்டாரங்களில் விவாதிக்கப்படும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாகிய "தேசியமயமாக்கம்" பற்றிய வாசகர்களது கருத்துக்களையும் பெற விழைகின்றோம்.

ம. இராசநாயகம் அவர்களது "இலங்கை அரசியல் வளர்ச்சியின் பொருளாதாரப் பின்னணி" என்னும் கட்டுரை, இதே தலைப்பில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்தவொரு கருத்தரங்கிற் பரிமாறப்பட்ட கருத்துக்களைத் தழுவியதாகும். மேற்படி கருத்தரங்கில் வரலாற்றுத் துறைத் தலைவர் டபிள்யூ. ஜே. எவ். லப்ரோய், பொருளியல் விரிவுரையாளர்கள் கலாநிதி ஐ. எச். வன்டன்டிரீசன், திருவாளர் எஸ். இராசரத்தினம், அரசியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ஏ. ஜெ. வில்சன் ஆகியோர் பங்குபற்றினர்கள்.

எமது கட்டுரைகள் யாவையும் மதிப்பிடும் பொறுப்பைக், காய்தல் உவத்தலகற்றிக் கல்வித் திருவையே நாடும் வாசகப் பெருமக்களுக்கே விடுத்து, அவை ஒவ்வொன்றினைப் பற்றியும் சிறுகுறிப்புக்களெழுதிப் பக்கங்களை விரயமாக்கா தொழிகின்றோம்.



# *வரலாறு என்றால் என்ன ?

— கலாநிதி (திருவாட்டி) சிரிமா கிரிபமுன —

**ப**ண்டைக்காலந்தொட்டே வரலாற்றுக் கல்வி மக்கள் கவனத்தை ஈர்த்துவருகின்றது. எனினும் வரலாறு பற்றிய பண்டைக்காலக் கருத்துக்கள் இன்று நாம் வரலாறெனக் கொள்வனவற்றினும் ஓரளவு வேறுபாடுடையன. சமயக் கல்வியின் ஒரு கூறாகவே வரலாறு கருதப்பட்டது. சமய வரலாற்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மனிதன் தன் வாழ்விற்காணும் தனிப்பட்டதும், பொதுவானதுமாகிய பிரச்சனைகள் யாவற்றையும் தீர்க்கும் வழிமுறைகளை வரலாற்றுக் கல்வியின் மூலம் பெறலாம் எனப் பெருமளவில் நம்பப்பட்டது. பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பராக்கிரமமும், பிறநற் பண்புகளும் கொண்ட தலைவர்களின் கதைகள், பண்டைய இலக்கியங்கள் யாவிலும் நிறைந்துள்ளன.

வரலாற்றுணர்வு தற்காலப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவும் எனவும், நல்ல வரலாற்றுணர்வு இருந்திருப்பின் உலகின் பல பேராபத்துக்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாமெனவும், இன்றும் சில வரலாற்றறிஞர்கள் நம்புகிறார்கள். வரலாறு பயனளிப்பதையும் நன்னடத்தை கற்பிப்பதையும் நோக்கமாக உடையது எனும் நம்பிக்கைக்கு நெருங்கியதே "வரலாறு ஓர் அமைப்புடைத்து" எனும் நம்பிக்கை. இதனை நிரூபித்தல் கடினமாகும். கடந்தகால நிகழ்ச்சித் தொடரிலிருந்து பொதுப் பிரயோகத்திற்குரிய காரண விதியெதுவும் அனுமானிக்க முடியாது. சந்தர்ப்பங்களின் கூட்டாகிய ஒரு நிகழ்ச்சி திரும்பவும் சம்பவிக்காது. பல வேளைகளில் முக்கிய நிகழ்ச்சிகள் அற்ப காரணங்களினால் நிகழ்கின்றன. தற்செயலான சம்பவங்கள் வரலாற்றை நிர்ணயிக்குமோர் அம்சமாகவிருப்பதனைத் தவிர்க்க முடியாது. எந்தவொரு வரலாற்று நிகழ்ச்சியையும், அது நிகழ்ந்த சிக்கலான சந்தர்ப்பத்திலிருந்து பிரித்துத் தனிப்படுத்த முடியாது. இந்நிகழ்ச்சிக்குக் காரணமான சம்பவங்கள் பல குறிக்கப்படாமல் விடுபட்டும் இருக்கலாம். சில சமயங்களில் ஒரே தன்மையவான நிகழ்ச்சிப் போக்குகள் காணப்படினும், வரலாறு ஓர் அமைப்புடைத்து என்னும் கோட்பாட்டைப் பொதுவான விதியாக நிரூபித்தல் சாத்தியமன்று.

* What is history?
Sirima Kiribamuna M. A. Ph. D. (London)
Lecturer in History–University of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், வரலாற்றுக் கல்வி ஒரு விஞ்ஞானமா அல்லது கலையா என்ற கேள்வியே வரலாற்றறிஞர் கவனத்தை முக்கியமாகக் கவர்ந்தது. உண்மை நிகழ்ச்சிகளின் சேர்க்கையும், அவற்றின் விளக்கமும், பொது மக்களது மனத்தைக் கவரும் விதத்தில் வெளியிடலுமே வரலாறாகும். விஞ்ஞானம் கலை ஆகிய இரண்டினது அம்சங்களும் இதனுள் அமைந்துள்ளன. பிற பௌதீக இயல்களை விஞ்ஞானமென்று அழைக்கும் அதே பாணியில் வரலாற்றுக் கல்வியையும் விஞ்ஞானமென முடியாது. முன்பே கூறியதுபோல் வரலாற்றுக் கல்வியின் கண்ணின்று பொதுவான விதிகளை அனுமானிக்க முடியாது. கடந்த கால மக்களது சமுதாய வளர்ச்சியில், தனிப்பட்ட தலைவர்களும், பிரதான நிகழ்ச்சிகளும் மட்டுமன்றிப் பெருந்திரளான பெயர் குறிக்கப்படாத மக்களும், அற்ப நிகழ்ச்சிகளுங்கூடக் கருதற்குரியவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தேசத்தினரது நோக்கங்களையும் அவாக்களையும் சரியாக நிர்ணயித்தல் மிகவும் கடினமாகும். எனவே வரலாற்றின் விளக்கம் விஞ்ஞான ரீதியானதாகாது. வரலாற்றறிஞர்கள் தவறிழைக்காதவர்கள் அல்லர். பல முறைகளில் அவர்களது தீர்ப்புக்கள் வேறுபடுகின்றன; அடிக்கடி மாற்றமுமடைகின்றன. வாதங்களாலும் எதிர்வாதங்களாலும் பெரும்பான்மையான தவறுகள் நீக்கப்படுகின்றன. உண்மை நிகழ்வுகளின் சேர்க்கையும், அத்தாட்சிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதும் வரலாற்றுக் கல்விக்கு விஞ்ஞான அம்சத்தைத் தருகின்றன. எனவே வரலாற்றறிஞன், "என்ன நடந்தது" "ஏன் நடந்தது" என்பவற்றைத் தெளிய விழையும் விஞ்ஞானியாகவும், வெறும் வரலாற்று விடயங்களை வாசகர்களுக்கு மகிழ்வும் உற்சாகமுமூட்டும் விதமாக எடுத்துரைக்கும் கலைஞனாகவும் திகழ்கின்றான்.

தனதும், தன் வாசகர்களினதும் நூதன அறிவு ஆவலைத் தீர்த்து வைப்பதே வரலாற்றறிஞரின் முக்கிய நோக்கமாகும். வரலாற்றுக் கல்வி மகிழ்வளிப்பது. ஒருவன் தன் மனத்திலே கடந்த காலத்தைத் திரும்பவும் நிர்மாணித்து அதனூடே வாழ்வதாற் பெரிதும் திருப்தியடைகின்றான். கடந்த கால மனித சமுதாயத்தினையும், அது கண்ட மாற்றங்களையும், அதனது நடவடிக்கைகளை நிர்ணயித்த கருத்துக்களையும், அதனுடைய வளர்ச்சிக்கு உதவிய அல்லது அதனைப்பாதித்த சடப் பொருட் சூழலையும் (Material-Condition) பற்றிய கல்வியே வரலாறாகும். வரலாறு, அரசியல், அரசியலமைப்பியல், பொருளியல், சமூகவியல், சமயவியல் ஆகிய அதன் பல அம்சங்களிலும் பரக்கப் பயிலப்படல் வேண்டும். பண்டைக்காலத்தில் சமய வரலாறே வரலாற்றின் அதி முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. இந்த உண்மையை இலங்கையின் பண்



டைய வரலாற்று நூல்கள் வாயிலாய் அறிய முடிகின்றது. அண்மிய காலப்பகுதியில் அரசியல் வரலாற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால் நவீன வரலாற்றறிஞர்கள், வரலாற்று முறைகளைச் செவ்வனே விளங்குவதற்கு, அதனைப் பரக்கக் கற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளார்கள்.

வரலாற்றை எழுதும் ஒருவர் உண்மை நிகழ்ச்சிகளின் வழியில் செல்லவேண்டும். உண்மை நிகழ்ச்சிகளின் சேர்க்கையொன்றை ஆராயும் ஒருவன், ஓர் உத்தேசத்தினை உருப்படுத்தி, அதன்மேல் விரிவான மேல்க்கட்டிடத்தை எழுப்புவான். எந்த வரலாற்றறிஞனும் உண்மை நிகழ்ச்சிகளிலிருந்து சிறிதேனும் திரம்பாது அவற்றைக் கட்டாயமாகப் பேணல் வேண்டும். இறந்த காலத்தைத் திரும்பவும் நிர்மாணிக்கையில், உண்மை நிகழ்ச்சிகள் காட்டும் வழியின்கண் செல்லல் வேண்டும். ஏற்கனவே ஓர் உத்தேசத்தை நிர்மாணித்துக்கொண்டு, அதனை நிலை நிறுத்தும் நோக்குடன் உண்மை நிகழ்வுகளைச் சேகரித்தால் வரலாறு அதன் விஞ்ஞானத் தன்மையை இழந்துவிடும். சிறியதொரு விவரம் பற்றிய புதிய அறிவின் தோற்றத்தால், பலத்த சிந்தனையும், பெரும் பிரயாசையும் ஈன்றதொரு கோட்பாட்டைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது, வரலாற்றறிஞர் பலமுறை பெறும் அனுபவமாகும். வரலாற்று ஆராய்ச்சியில் எந்தவொரு உண்மை நிகழ்வும் புறக்கணிக்கப்பட முடியாது. புதிய சாட்சியங்கள் தோன்றுங் காலைத் தனது பழைய கோட்பாடுகளைக் கைவிடும் மனப்பண்பு வரலாற்றறிஞனிடம் இருத்தல் வேண்டும்.

நாம் எம்மைச் சுற்றிக் காண்பனவற்றிற்கெல்லாம் விளக்கம் தருவது வரலாற்றுக் கல்வி. கல்மேடுகளும் கல்லறைகளும் பழங்கால ஞாபகங்களை மீட்டுவருவன. ஊமைக்கட்டிடங்கள் உடனடியாகப் புத்துருப் பெறுவன. இங்ஙனமாக வரலாறு சிந்தனையைத் தூண்டுகின்றது. வரலாற்று ஆராய்ச்சியாகிய விஞ்ஞானம் உண்மை நிகழ்ச்சிகளைக் கண்டுபிடிக்க வரலாற்றறிஞனின் கற்பனைக்கண்கள் அவற்றின் முக்கியத்துவத்தைச் சிறந்த முறையிற் சித்திரித்துக் காட்டுவன.

FOR UPTODATE PHOTOGRAPHY IN
ALL ITS BRANCHES CONSULT
**Studio - Phoenix - Kandy**
**Dial: 633**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *ஈழத்தின் சாசனங்கள் கூறும் வரலாறு

## I பிராமிக் குகைக் கல்வெட்டுக்கள்

கி. மு 3-ம் நூற்றுண்டு தொடக்கம் கி. பி. 5-ம் நூற்றுண்டு வரை.

— கலாநிதி லக்ஷ்மன் எஸ். பெரேரா —

வரலாற்று நூலென்ருல் அது ஒரு கட்டுக்கதை நூலன்று. அது உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டே எழுதப் பட்டதாகும். அதனுற் சரித்திரம் எழுதுவோர் நிகழ்ச்சிகளை நிகழ்ந்த வாறு எழுதுவதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள் எனினும், இந் நூல்களில் ஓரளவு சற்பனைக்கும் இடம் இருக்கத்தான் செய்யும். அத்துடன் வரலாறு எழுதுபவன் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய தனது சொந்த அபிப்பிராயத்தையுந் தெரிவித்துக்கொள்வான் ஆனுலும், அவன் எழுதும் வரலாற்றின் உட்பொருள் உண்மை நிகழ்ச்சிகளேயாகும்.. அஃதெவ்வாறெனின், பிறர் எழுதும் வரலாற்று நூல்களை ஓரளவு அக்கறையுடன் வாசிப்போமாஞல் அந் நூல்களின் மூலங்கள் பற்றிய பிரச்சனை கட்டாயமாக எழும். ஓர் ஆசிரியர் தான் கூறும் வரலாற்றுத் துணுக்குகளை எங்கிருந்து பெற்ருர் என்பது ஒரு விசித்திரமான கதையாகும். அவ்வாசிரியருடைய வேலையைத், தான் பெறுஞ் சான்றுகளின் சரி பிழைகளை யாராய்ந்து பார்க்கும் துப்பறிபவனுடைய வேலைக்கு ஒப்பிடலாம். நாம் எடுத்துக்கொண்ட நூல் இலங்கையின் வரலாற்று நூலொன்றெனில், அந்நூலாசிரியர் மஹாவம்சத்தினையுஞ் சூளவம்சத்தினையும் பயன்படுத்தியுள்ளாரெனஊகித்தறியலாம். பூஜாவலிய (Pujavaliya), ராஜாவலிய (Rajavaliya), நிகாய ஸங்க்ரஹ (N.kaya-

---

இக்கட்டுரையில் வருஞ் சிறப்புப்பெயர்கள் யாவுஞ் சாசனங்களிற் காணப்படுவது போலவே முடியுமான அளவிற்கு மாற்றமின்றித் தமிழெழுத்தாக்கம் (Transliteration) செய்யப்பட்டுள்ளன. சிங்களத்திலுள்ள බ (Ba) என்பதற்குப் பகரமும், ග (Ga) என்பதற்குக் ககரமும், ද (Da) என்பதற்குத் தகரமும் பயன்படுத்தப் பட்டுள்ளன. ரோமன் எழுத்தாக்கமும் அடைப்புக் குறிகளுட் தரப்பட்டுள்ளன.

---

* " History From Inscriptions — I Brahmi Cave Inscriptions from the 3rd century B. C. to the 5th century A. D."
By Lakshman S. Perera, B. A., Ph. D.
Lecturer in History, University of Ceylon.



Sangraha) முதலிய பிற நூல்களும் இவ்வர்க்கத்தினைச் சேர்ந்தவையே. இவை சரித்திரப் பாடப் புத்தகங்கள் அல்ல; சரித்திரம் எழுதுவதற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய சான்றுகளையுடைய நூல்களாகும். வரலாற்று மூலங்கள் இவை மட்டுமல்ல. சரித்திரச் சான்றுகள் பெற வேறு மூலங்களுமுள. இடிந்துள்ள பழைய மாளிகைகளும் விஹாரைகளும், பழைய குளங்களும், சிற்பங்கள் சித்திரங்கள் நாணயங்கள் முதலியவைகளும், பழைய காலத்தில் மக்களுபயோகித்த பொருட்களும், சாசனங்களும், பிற மூலங்களாகும். இவற்றுள் மிகப் பயனுள்ளவை சாசனங்கள். ஏனெனில், அவை சொற்கள் மூலம் எதையாவது எமக்கு எடுத்துரைக்கின்றன என்க. இச்சாசனங்கள், கற்களில், அல்லது பொன், செம்பு போன்ற வேறு கடினமான பொருட்களிற் பொறிக்கப்பட்டு நெடுங் காலத்திற்கு எழுதப்பட்ட படியே பாதுகாக்கப்பட்டுள்ளதனுல், இலக்கிய மூலங்களினின்றும் (Literary Sources) வேறுபட்டவை.

சாசனங்கள் பலவகைப்படும். அவை பொறிக்கப்பட்டுள்ள பொருட்களைக்கொண்டு அவற்றைப் பலவாக வகுக்கலாம். குகைகளிலுள்ள சாசனங்கள் குகைக் கல்வெட்டுக்கள் (Cave inscriptions) எனப்படும். வெறும் பாறைமேற் பொறிக்கப்பட்டிருப்பின் அவை பாறைக் கல்வெட்டுக்கள் (Rock - inscriptions) எனப்படும். செதுக்கிச் செம்மைப்படுத்திய கற்பலகைகளிற் (Stone - Slabs) பொறிக்கப்பட்டவை கற்பலகைச் சாசனங்கள் (Slab-inscriptions). தூண் கல்வெட்டுக்கள் (Pillar-inscriptions) செம்மைப்படுத்திய கற்றூண்களின் நான்கு பக்கங்களிலும் பொறிக்கப்பட்டிருக்கும். ஒரேயொரு அரிய பொன்னேடு வல்லிபுரத்திற் கண்டெடுக்கப்பட்டது; அது தற்போது காணுமற் போய்விட்டது. தானங்களைக் குறிப்பிடுஞ் செப்பேடுகளும் பலவுள. இவை அதிகம் பழையனவல்ல. இதே போன்ற தானங்களைக் குறிக்கும் ஓலை ஏடுகள், தாம் கூறும் விஷயமளவில் ஒற்றுமையுடையனவெனினும், சரியான முறையிற் சாசனங்களெனக் கொள்ளப்படமாட்டா. சாசனங்கள், பொறிக்கப் பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை இன்னுெரு வகையாகவும் வகுக்கலாம். அவை, குகைத்தானங்களைக் குறிப்பவை (Cave - grants), நிலத்தானங்கள் குளத்தானங்கள் ஆகியவற்றைக் குறிப்பவை (Land-grants and tank-grants), அரச கட்டளை அல்லது கோனோலைகள் (Royal proclamations), நிபந்த நீக்கத்தைக் குறிக்கும் பிரகடனங்கள் (Proclamations of immunities), விஹாரைகள் அல்லது அங்காடிகள் முதலியவற்றிற்குச் செய்யப் படும் ஒழுங்குகள் பற்றியவை (issue of regulations for viharas or market-towns) போன்ற பலவகைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனங்கள் பயனுள்ளவையெனக் கொள்வதற்குப் பல காரணங்களுள. இவற்றுள் மிக முக்கிய காரணம் என்னவெனில், சாசனங்கள் பெரும்பாலும் அவை குறிப்பிடுஞ் சம்பவங்களின் காலத்தைச் சேர்ந்தவையென்பதேஎன்க. சாசனமெழுதுவோன் எழுதியபடியே அவை நமக்குக் கிடைத்துள்ளன. பழைய பத்திரங்கள் அல்லது நூல்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவை தத்தம் மூலங்களினின்றும் மாறுதலடைவதற்குப் பிரதி செய்வோரும் (Copyists), பிற ஆசிரியர்களும் (Editors) தமது பிழைகளாலும், இடைச்சொருகல்களாலும், சிலவேளைகளிற் சில பாகங்களைக் குறைத்து விடுவதாலும் பெரிதும் பொறுப்பாளிகளாகியுள்ளனர். ஆனாற் சாசனங்களோ இக்கதியினின்றுந் தப்பியுள்ளன. இரண்டாவதாகப், பெரும்பான்மையான சாசனங்கள் தானங்கள், ஒழுங்குகள் (Regulations), அல்லது கட்டளைகள் போன்ற விஷயங்களை அப்படியே எடுத்துக் கூறுவதால், இலக்கிய வர்ணனைகளினால் உண்மை மறைபட்டுப் போவதற்கு இடமில்லாது போகின்றது. எனினும், சில சாசனங்கள் கொண்டுள்ள பிரஷஸ்தி (மெய்க்கீர்த்தி) எனப்படும் முன்னுரைகளைப்பற்றிக் கவனமுடன் இருக்கவேண்டும். ஏனெனில், இவற்றின் நோக்கம் அரசனுடைய புகழைப்பாடுவதே. மூன்றாவதாகச், சாசனங்கள் தருந் தகவல்கள் பொதுவாக நூல்களிலிருந்து பெறக்கூடிய தகவல்களல்ல. இதனால் நூல்கள் தருந்தகவல்களுடன் சேர்த்துப் பயன்படுத்தக் கூடிய பிற தகவல்களைச் சாசனங்கள் தருகின்றன. இத்தகவல்கள் மக்களின் சாதாரண அன்றாட வாழ்க்கையைப்பற்றியனவாதலால், நூல்களின் சான்று கொண்டு தொடர்பான வரலாறு எழுதுவது போன்று, இவற்றைக் கொண்டு எழுத முடியாது. என்றாலும், மக்கள் எப்படி வாழ்ந்தனரென்றும் எங்ஙனம் ஆளப்பட்டனரென்றும் அவர்களுடைய வாழ்க்கை பற்றிய சிற்சில காட்சிகளை இவற்றின் உதவிகொண்டு நாம் காணக்கூடியவர்களாகவிருக்கின்றோம்.

சாசனவாராய்ச்சியில் வேறு வகையான பிரச்சனை ஒன்றுண்டு. காற்றும் மழையும் வெயிலும் பல நூற்றாண்டுகளாகப் பயன் நிறைந்த சாசனங்களைப் பாதித்துள்ளன. சில முற்றாக அழிக்கப்பட்டும் உள்ளன. மிகுந்த கஷ்டத்துடன் தான் சிலவற்றை இப்போ வாசிக்கமுடிகின்றது. ஆழமாகப் பொறிக்கப்படாத சாசனங்களே இவ்விதத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவை. சமீப காலத்தில் திரவியந் தேடுவோர், கற்களிலுள்ள அபூர்வ எழுத்துக்கள் கற்களின் கீழ்த் திரவியம் இருப்பதைக் குறிக்கின்றனவென எண்ணிச், சில சாசனங்களைப் பாழ்படுத்தியும் உள்ளனர். இக் கஷ்டத்தினைத் தாண்டியதும், வேறிரு கஷ்டங்கள் இருக்கின்றன. இச்சாசனங்கள் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்து தற்காலத்திலுபயோகிக்கப்படுஞ் சிங்கள எழுத்தன்று. தற்காலத்து எழுத்து இவ்வெழுத்திலிருந்தே தான் வளர்ச்சியடைந்துள்ளதென்பதை, இத் தகைய வேலையிற் புதிதாக ஈடுபடுபவர்கள் உண்மையில் நம்ப மாட்டார்கள். ஒரு பெரும் அறிஞர் பரம்பரை இச்சாசன வெழுத்துக்களை வாசிப்பதிலீடுபட்டு, அவற்றை நாமும் வாசிப்பதற்கும் வழி வகுத்துள்ளது. எழுத்துக்களிற் சிறிதாக ஏற்படும் மாற்றங்களை ஆராய்வதால், ஒரு சாசனம் எந்த நூற்றாண்டைச் சேர்ந்ததென அதன் எழுத்தினுதவியாற் கூறிவிடமுடிகின்றது. ஒரு சாசனத்தின் காலத்தினை வேறெவ்விதமாகவும் நிர்ணயிக்க முடியாதபோது, இம்முறை மிகவும் பயனுள்ளதாகின்றது. சாசனத்தை நமக்குத் தெரிந்த தற்காலத்து எழுத்தில் மாற்றியெழுதியபின், இன்னொரு பிரச்சனை கிளம்புகின்றது. அச்சாசனத்தின் மொழியும் தற்காலத்துச் சிங்களமல்லாதிருப்பதே அப்பிரச்சனையாகும். அதன் மொழியுங் காலப் போக்கில் வேறுபட்டுள்ளது. சொற்கள் பொருள்மாற்றம் அடைந்தன; சில சொற்கள் வழக்கற்றுப்போயுள்ளன. குறிப்பிட்ட சில கலைச்சொற்களின் பொருளை அவை பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலிருந்தே கண்டுபிடிக்க முடியும். இச்சாசனங்களின் பழைய எழுத்து 'பிராமி' (Brahmi) எனப்படும். அசோகப் பெருமன்னனுடைய சாசனங்களும் இவ்வெழுத்திற்றான் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சாசனங்களின் மொழி சிங்ஹள-பிராக்ருதம் (Sinhalese-Prakrit) எனப்படும். இது ஆதிச்சமஸ்கிருதத்துடன் தொடர்புள்ளது; இலங்கைக்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டது. இங்கு கூறப்பட்ட தடைகளை நீக்கியபின் வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்தக் கூடிய நிலையை இச் சாசனங்கள் அடையும்.



இக்கட்டுரை, பிராமிக் குகைக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படும் ஈழத்தின் மிகப்பழைய சாசனங்கள் பற்றிய சிறு ஆராய்ச்சியாகும். இச்சாசனங்கள் கி. மு. 3-ம் நூற்றாண்டிற்கும் கி. பி. 3-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. அதற்குப் பிற்பட்ட காலத்திற் பிராமிக் கல்வெட்டுக்கள் இல்லாது போயின. இவை நூற்றுக் கணக்காகத் தீவு முற்றிலும் பரந்து காணப்படுகின்றன. இச்சாசனங்கள் குகைகளின் மேல் முகப்புகளில், பெரும்பான்மையாக ஒரே வரியில் எழுதப்பட்டுள்ளன. இன்றால் " இக்குகை (பௌத்த) சங்கத்தாருக்குத் தானஞ் செய்யப்பட்டது ", என்று இவற்றிற் குறிப்பிடப்பட்டிருக்கும். குடியிருப்பதற்காகச் செம்மைப் படுத்தப்பட்ட குகைகளைப் பௌத்த குருமாருக்குத் தானஞ் செய்யும் வழக்கம் புத்த சமயம் இலங்கைக்கு வந்ததையடுத்து உண்டானதொன்றாகும். குகையைத் தானஞ் செய்வோர், பாறையில் விழும் மழை நீரானது குகைக்குள்ளே வழிந்து செல்லாவண்ணம் குகையின் மேல்வாயில் புருவம் வெட்டிப்

பின்னர் கதவு பலகணிகளுடன் சுவர்களையுங்கட்டிச், சிலவேளைகளில், சுகமாகக் குகைக்குள் ஏறிச் செல்வதற்குப் பாறையிற் படிகளும் வெட்டுவிப்பர். சுவர்கள் செங்கற்களால் அல்லது மண்ணினாலுந் தடிகளினாலுங் கட்டப்பட்டன. தானஞ்செய்பவர் கல்வெட்டிலே தமது பெயரையும், தமது பரம்பரை, விருதுப் பெயர்கள் அல்லது பட்டங்கள் (Titles) போன்ற வேறு சில விஷயங்களையும் பொறித்துக்கொள்வார். இத்தானங்கள் " முன்னிருந்தும் இப்போதிருப்பதுமான நாலு திக்குகளையுஞ் சேர்ந்த சங்கத்திற்கு "[1]க் கொடுக்கப்பட்டன.

இச்சிறு சாசனங்கள் எமக்கு எவ்விதத்தில் வரலாற்றுச் சான்றுகளைத் தருகின்றனவென்னுங் கேள்வியை யெழுப்புவதாலேயே எமது வேலை ஆரம்பமாகின்றது. பழைய வரலாற்று நூல்கள் (chronicles) அநுராதபுரத்திலுள்ள விஹாரைகளைப் பற்றியே பெரிதுங் கூறுகின்றபோதும், தீவு முற்றிலும் பல சிறு விஹாரைகள் பரந்திருந்தனவென்றும் அவற்றிற்குப் பொது மக்கள் பெரும் ஆதரவளித்தனரெனவும் சாசனங்கள் சான்று பகருகின்றன. இச்சாசனங்களை ஆராயும்போதும் முதலில் நம் மனதிற் படுவது இதுவே. புத்த சமயம் இங்கு கொண்டுவரப்பட்ட பின், மிகுவிரைவில் அது எங்கும் பரவியது; மக்கள் பெருந்தொகையாக அச்சமயத்தைத் தழுவினர். மேலும், இங்கு முதலில் வந்த பிக்குகள் ' வனவாசிகள் ' என அழைக்கப்பட்ட, காட்டில் வாழும் பிக்குகளேயென்பதும் நம்மால் ஊகித்தறிய முடிகின்றது. ஏனெனில், குகைகள் பொதுவாக ஊர்களுக்கும் நகரங்களுக்கும் அண்மையில் இருப்பதில்லை. மேலும், வனவாசிப் பிக்குகள் குகைகளிலேதான் வசிப்பவர்கள். மஹாவம்சத்திலே கூட **கிரி** (Giri-மலை), **பப்பத** (Pabbata - பர்வதம் - மலை), **லேன** (Lena – குகை), **கல்லக** (Gallaka - பாறை) என்று முடியும் பெயர்களையுடைய விஹாரைகள் இத்தகைய குகை விஹாரைகளென்றே கொள்ளலாம். மிஹிந்தலை (Mihintale), வெஸ்ஸகிரி (Vessagiri) போன்ற இடங்களிலுள்ள விஹாரைகளைப் போல இவற்றிற் சில காலப்போக்கிற் பெரும் விஹாரைகளாக மாறின. குகைத்தானங்களைக் குறிக்குஞ் சாசனங்கள் விஹாரைகளின் பெயர்களைத் தருவதில்லை. இருப்பினும், சிலவற்றில், **மனபதஸனே** (Manapadasane,) **சிதகுஹே** (Sitaguhe) **மஹஸுதஸனே** (Mahasudasane) என்பன போன்ற குகைப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்குப் பிற்பட்ட காலத்திற்றான் விஹாரைகள் கிராமங்களோடு நெருங்கிய தொடர்புடையனவாகவிருந்தன. குகைக் கல்வெட்டுக்கள் இல்-

1 " to the sangha of the four guarters, past and present "
" AGATA ANAGATA CATUDISA SAGASA DINE ".



லாமற் போனமை வனவாசிப் பிக்குகளின் எண்ணிக்கை குறைந்து, கிராமவாசிப் பிக்குகளின் (Gramavasi Monks) தொகை பெருகி வந்ததைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

சில சாசனங்களிற் பிக்குகளே தானஞ் செய்வோராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களைக் குறிக்கும் பொதுப் (பட்டப்)பெயர் (title) ' தேர ' (Tera) என்பதாகும். அவர்கள் குகைத்தானங்கள் செய்வதற்கு வேண்டிய வழிவகைகள் அவர்களுக்கு இருந்திருக்கலாம். சாசனமுள்ள குகை குறிப்பிட்ட ஒரு பிக்குவிற்குச் சொந்தமானதென்று மட்டுமே சில சாசனங்கள் கூறும். இப்படியான சாசனங்கள் அங்கு குறிப்பிடப்பட்ட பிக்குகள் அக்குகைகளில் வசித்தார்கள் என்பதைக் குறிப்பதற்கே பொறிக்கப்பட்டனவாயிருக்கலாம். பௌத்த விநய (Vinaya - ஒழுக்கங்கள்)த்தின்படி பிக்குகள் குகைகளையோ அல்லது வேறுவகையான சொத்துக்களையோ சொந்தமாக வைத்திருக்க முடியாது. இச்சாசனங்களிற் பிக்குகள் கொண்டுள்ள இன்னொரு (பட்டப்) பெயர் (title) ' **பத** ' (Bata) என்பதாகும். இதன் பொருள் விளங்கவில்லை. இப்பெயர் சில சாசனங்களில் ' **அதேவஸிக** ' (Atevasika) என்னும் பெயருடன் சேர்ந்து காணப்படுகின்றது. இச்சொல் ' மாணாக்கன் ' என்னும் பொருளுள்ள ' அந்தேவாஸிக ' (Antevasika) என்னுஞ் சொல்லாகும். சில சாசனங்களிற் பிக்குவின் பெயருடன் ' **ஸதிவிஹரிய** ' (Sadivihariya) என்னுஞ் சொல் காணப்படுகின்றது. இதன் பொருள் ' கூடிவாழ்பவன் ' என்பதாகும்; ' மாணாக்கன் ' என்ற பொருளையுங்கொள்ளும். குருவுடன் மாணாக்கன் கூடிவாழ்ந்து கல்வி கற்கும் முறை பிக்குகளால் மேற்கொள்ளக்கூடியதெனப் பௌத்த விநயத்திற் கூறப்பட்டுள்ளது. சாசனங்களிற் காணப்படும் இன்னொரு சொற்றொடர் ' **மஜிம பனக** ' (Majima Banaka) என்பதாகும். இதன் பொருள் " மஜிம நிகாயத்தை வாசிப்பவர் "[2] என்பதாகும். இச்சாசனங்களின் காலத்திற் பிக்குமாரைக்கொண்டு பௌத்த திரிபிடகத்தின் (Tri Pitaka) பல்வேறு பாகங்களை மனப்பாடஞ் செய்விக்கும் வழக்கம் இருந்ததெனப் பிற மூலங்களாலும் நாம் அறிவோம்[3]. இந்நூல்கள் எழுத்திலில்லாத காலத்தில், இப்பிக்குமார் "உயிருள்ள நூல்களாக" (living books) விளங்கினர். மேற்கூறிய பெயர்களை விட, " **உபஸக** " (Upasaka), " **உபஸிக** " (Upasika) என்னும் இருபதங்களும் பல முறை காணப்படுகின்றன. இவை, இன்றுபோல் அன்றும், "பௌத்த சங்கத்தின் சாதாரண பக்தர்கள்'' (lay-devotees of the Sangha) என்னும் பொருளைக் கொண்டிருந்தன.

2. மஜிமநிகாய (Majjhima Nikaya) என்பது பௌத்த மத விதிகளடங்கிய நூல்களிலொன்றாகும். 3. இதனால், ' மஜிம பனக ' என்பது இவ்வழக்கத்தினைத் தெரிவிக்கின்றது என்பதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த சமயம் இங்கு வரமுன்னரும் வந்த பின்பும் பிராமண சமயம் 4 (Brahmanism) இங்கு இருந்ததென்பதற்கு மஹா வம்சத்தில் அதிக சான்றுகளுள. இம்முடிபினைச் சாசனங்களும் ஆதரிக்கின்றன. ஏனெனில், இச்சாசனங்கள் பலவற்றில் " பமணர்கள் " (Bamanas-பிராமணர்கள்) தானஞ் செய்வோராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிக்குகளுக்கும் பிராமணர்களுக்குமிடையேயிருந்த நல்லுறவிற்கு இவை சான்று பகருகின்றன. இப்பிராமணர்களுட் சிலர் பௌத்தர்களாக மதம் மாறியும் இருப்பார்கள். ஒரு சாசனத்தில், பிராமணனொருவன் அரசனுடைய குருவும் வைத்தியனுமாக இருந்தானெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமனையில் நடைபெற்ற பல்வேறு கிரியைகளுக்கும் விழாக்களுக்கும் இப்பிராமணர்கள் தேவைப்பட்டிருக்கலாம். அவர்கள் அமைச்சர் போன்ற பெரும் பதவிகளும் வகித்தனரெனச் சாசனங்களாலறிகிறோம். ஒரு பிராமணனுடைய சகோதரன் ' தேர ' (Tera) ஆக இருந்ததாகவும், இன்னொரு பிராமணனுடைய மகள் **' உபஸிக '** (Upasika) ஆக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வளவு தூரம் பிராமணர்கள் பௌத்த சமயத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக இருந்தனரென இவ்வுறவுகளிலிருந்து நமக்குத் தோன்றுகின்றது.

மக்களுடைய பொருளாதார வாழ்வைப்பற்றி (economic life) நேராக இக்குகைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடாதபோதும், அதனைப் பற்றிய சில தகவல்களை நமக்குத் தருகின்றன. இக்குகைகளைத் தானஞ்செய்தோர் அக்குகைகளிலே ஆரம்பத்தில் வசித்தனரெனவும், பின்னர் பௌத்த சங்கத்திற்கு அவற்றைக் கொடுத்துவிட்டு வேறிடத்திற்குச் சென்றனரெனவுஞ் சிலர் முன்பு எண்ணினர். பல காரணங்களுக்காக இது ஒரு தப்பான எண்ணமென்றே கொள்ள வேண்டும். ஏனெனில், அக்குகைச் சொந்தக்காரர் தானஞ்செய்த பின் எங்கு சென்றனர் என்பதற்கு விளக்கம் வேண்டும். மேலும், அம் மக்கள் விவசாயிகளாகவிருந்தபடியால், வயல்கள் இருந்த இடங்களிலேயே குடியிருக்க வேண்டியவர்களாகவிருந்தனர். அவர்கள் தொழில் புரியும் இடங்களுக்கு அண்மையில் எப்பொழுதும் வசதியாகக் குகைகள் கிடைக்கவில்லை.

இச்சாசனங்களில் மக்களுடைய தொழில்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சாசனங்களில் வரும் **' மணிகர '** (Manikara-இரத்தினத் தொழிலாளி), **' ருபதக '** (Rupadaka-சிற்பி) ஆகியோருடைய தொழில்கள் நுட்பமானவை (specialised). அரசனுக்கு வைத்தியனாகவிருந்த பிராமணனை முன்பு குறிப்பிட்டோம். வேறு பல தொழிலாளிகளுங் குறிப்பிடப்பட்டுள்ளனர். அக்காலத்திலும், சோதிடர்கள் மிகுந்து காணப்பட்டனர் போலும், ஏனெனில், **' நகதிக '** (Nakatika) ஒருவன் குகைத்தானஞ் செய்தவனாகக் குறிப்பிடப்பட்டுள்ளான். **' ஓர்திக '** (Ordika) என்ற சொல் ஒரு கல்வெட்டிற் காணப்படுகின்றது. இதனை ' அந்தப்புரக் காவலன் ' என மொழிபெயர்த்துள்ளனர். யாருடைய அந்தப்புரம் என்று குறிப்பாகக் கூறப்படவில்லை. அது அரசனுடைய அந்தப்புரமாகவிருக்கலாம். இச் சாசனங்களிற் காணப்படும் " **கொடகர** " (Kotakara) என்னுஞ் சொல் ' பண்டசாலைக் காவலன் ' என்னும் பொருளுடையது. ஆனால் இவன் காவல் செய்த பண்டசாலையைப்பற்றி யாம் அதிகம் அறியோம். இன்னொரு சொல் **' கஹபதி '** (Gahapati) என்பது. இது பாளி இலக்கியத்தில் அடிக்கடி காணப்படும். ' வீட்டுத்தலைவன் ' என்னும் பொருளுடையது. பொருளுடைய கனவான்களுடைய பட்டமாக இருந்திருக்கலாம்.

4. பிராமண சமயம் என்பது இந்து சமயத்தைக் குறிக்கும்



தென்னிலங்கையிலுள்ள சில சாசனங்களிலே தானஞ் செய்தோர் **' வபிஹமிக '** (Vapi Hamika) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனைக் ' குளங்களின் சொந்தக்காரர் ' என மொழி பெயர்த்துள்ளனர். இது நம் கவனத்தை ஈர்க்கும் ஒரு தகவலாகும். ஏனெனில், குளங்களைத் தனியாட்கள் சொந்தமாக வைத்திருந்து அவற்றின் வருமானத்தைப் பெற்றனரென்பதை இதனால் அறிகின்றோம். இத்தகைய விஷயமொன்றைக் கூறியிருப்பதே குறிப்பிடத் தக்கதாகும். குளங்கட்டும் முயற்சியில் ஈடுபட்டு, பின்னர் சொந்தக்காரர் என்ற முறையில் அக்குளங்களின் வருமானத்தை அவர்கள் பெற்றனர் என்பதையே இச்சொல் கருதுகின்றதுபோலும்.

குகைகளைத் தானஞ் செய்வதிற் பெண்கள் எடுத்த பெரும் பங்கு அக் காலச் சமூக வாழ்க்கையின் ஒரு கவர்ச்சியான அம்சமாகும். இச்சாசனங்களிற் பெருந் தொகையான பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுட் சிலர் **' பருமக '** (Parumaka) என்னும் பட்டத்தினையுடையவர்களாகவுங் காணப்படுகின்றனர். (இப் பட்டத்தின் விளக்கம் பின்னர் கூறுவாம்). ஆனால் எவராவது **' கமிக '** (Gamika) அல்லது **' கஹபதி '** (Gahapati) என்னும் பட்டத்துடன் குறிப்பிடப்படவில்லை. அரச குடும்பத்து இளவரசியர் பலர், பல குகைகளைத் தானஞ் செய்தோராகக் கூறப்பட்டுள்ளனர். மேலும் இச் சந்தர்ப்பத்திற் பொது உறவுகளைக் குறித்து நிற்கும் சில சொற்களும் நமக்குக் கிடைக்கின்றன. மனைவியைக் குறிக்கும் **' பரிய '** (Bariya - பாரியார்), மகளைக் குறிக்கும் **' ஜய '** (Jaya) வும் **' ஜித '** (Jita) வும், தாயைக் குறிக்கும் **' மதய '** (Mataya - மாதா), சகோதரியென்னும் பொருளுடைய **' பகினிய '** (Baginiya)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவை சில. இவற்றுளெல்லாம் மிகப் பொதுவாகக் காணப்படுஞ் சொல் மகன் என்னும் பொருளுடைய '**புத**' (Puta - புத்திரன்) என்பதாகும். இவ்வுறவுகள் பன்முறை கூறப்பட்டிருப்பதை நோக்கின், நெருங்கிய குடும்பத் தொடர்புகள் (family ties) அக்காலத்தில் இருந்தனவெனத் தோன்றுகின்றது.

இச்சாசனங்களிற் காணப்படும் விருதுக்கள் அல்லது பட்டங்களுள் மிகவும் புதிராகவிருப்பது '**பருமுக**' (Parumaka) என்பதாகும். இது சாசனங்களிற் பல்முறை காணப்படுகின்றது. இதன் பொருளும் ஓரளவிற்குத் தெளிவாகவிருக்கிறது. ஏனெனில் இச்சொல், தலைவன் என்னும் பொருளுள்ள வடமொழிச் சொல்லாகிய '**ப்ரமுக**' (Pramukha) 5 என்பதனோடு தொடர்புடையது. எனினும், ஈண்டு அதன் சரியான பொருள் விளங்கவில்லை. அது உயர்குலத்தோருடைய (nobility) பட்டமாகவிருந்திருக்கலாம். அன்றேல், வணிகச் சங்கம் அல்லது குழு (corporation) ஒன்றின் தலைவராகவும் இருக்கலாம். இப்பட்டத்தினைக் கொண்டோர் இச்சாசனங்களில் அரசனுடைய உறவினராகவும், அமைச்சர்களாகவும், அரசனுடைய பொருளாளராகவும் (treasurers), குளச்சொந்தக்காரராகவும், கிராம வருமானம் பெறுவோராகவுங் காணப்படுகின்றனர். அது ஒரு பரம்பரைப் பட்டமாகும் (hereditary title). பெண்களுக்கும் இப்பட்டம் சாசனங்களிற் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பட்டம் பிறருக்கும் வழங்கக்கூடியதொன்றாக இருந்திருக்கக் கூடுமெனவுந் தோன்றுகிறது. இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கின், அதன் ஆரம்பத்தை அறிய முடியாதபோதிலும், அது ஓர் உயர்குலத்தைக் குறித்து நிற்பதாகவே தோன்றுகின்றது.

குகைகளைத் தானஞ் செய்தோரிற் சிலர் அரசர்களாவர். இவர்களிற் சிலர் மஹாவம்சத்திற் கூறப்பட்டுள்ள அரசர்களுட் சிலரெனக் கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வரசர்களுடைய சாசனங்கட்கும், இவர்களுடைய ஏழைப் பிரஜைகளுடைய சாசனங்களுக்கும் எவ்வித வேற்றுமையுமில்லை. இவையுங் குகைத்தானங்களைக் குறிப்பவை. இவற்றிற் கூறப்படும் விஷயம் ஒருவரியில் எழுதப்பட்டுள்ளது. வட்டகாமணியின் (Vattagamani) ஆட்சிக்குப் பின், அதாவது மிக முந்திய சாசனங்களின் காலத்திலிருந்து இரண்டொரு நூற்றாண்டுகளில், அரசர்கள் இத்தகைய தானங்கள் செய்வதை நிறுத்தி, நிலங்களையுங் குளங்களையுந் தானஞ் செய்தனர். சாசனங்களிற் கூறப்பட்டிருக்கும் அரசர்களுள் காலத்தால் மிக முந்தியவரென நிச்சயமாகக் கொள்ளக்கூடியவர், தேவா நம்பிய

5. தமிழில் இச்சொல் பிரமுகர் என மருவியுள்ளது.



திஸ்ஸ மன்னனின் தம்பியாகிய '**உத்திய**' (Uttiya) என்பவராகும். ஆகையால் இவரைக் குறிப்பிடும் மிஹிந்தலைக் கல்வெட்டு, காலங் கணிக்கக்கூடிய மிக முந்திய (earliest dateable கல்வெட்டாகும். இதில் அம்மன்னர் '**ரஜஉதி**' (Raja Uti) எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மஹாவம்சத்திற் கூறப்பட்டுள்ள அரசர்களில், எவரெவர் சாசனங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளனரெனக் கண்டு பிடித்தல் சுலபமானதன்று. ஏனெனிற் சாசனங்களில் அவர்கள் கொண்டுள்ள பெயர்கள் வேறாகும். லன்ஜி திஸ்ஸ (Lanji Tissa) என்பதற்கு '**லஜக**' (Lajaka) என்பது போன்று சிறப்பாக ஒற்றுமை காணக்கூடிய பெயர்களைக் கொண்டிருந்தால், அல்லது '**உதி**' (Uti) போன்று பலர் கொள்ளாத பெயராகவிருந்தால் சாசனங்களிற் கூறப்பட்டிருக்கும் மஹாவம்ச அரசர்கள் யார்யாரெனக் கண்டு பிடித்தல் சுலபமாகும். ஆனால் '**அப** (Aba) அல்லது '**திஸ**' (Tisa) போன்ற பெயர்களைக்கொண்ட அரசர்கள் யாரெனக் கண்டுபிடித்தல் கஷ்டமாகும். ஏனெனில் மஹாவம்சத்து அரசர்களுட் பலர் அபய (Abaya) அல்லது திஸ்ஸ (Tissa) என்னும் பெயர்களையுடையவர்கள். உதாரணமாகச், சாசனங்களில் '**தேவநபிய திஸ**' (Devanapiya Tisa) என்பது மஹாவம்சத்துத் தேவாநம்பிய திஸ்ஸ மன்னனை அல்லது ஸத்தா திஸ்ஸ (Saddha Tissa) மன்னனை என்றும், '**கமணி அப**' (Gamani Aba) என்பது வட்டகாமணி அபய மன்னனை அல்லது துட்ட காமணி அபய மன்னனை என்றுந் தெரியாது பெயர் மயக்கம் ஏற்படலாம். அவர்களுடைய ஆட்சிக் காலங்கள் கிட்டக்கிட்ட இருப்பதால் அவர்களுடைய சாசனங்களின் எழுத்து வேற்றுமைகளைக் கொண்டும் அவர்கள் யார்யாரெனக் கண்டு பிடிக்க முடியாது. 6

மேற்கூறிய இரு உதாரணங்களிலிருந்து அரசமுறை (Kingship) பற்றிய இரு கவர்ச்சியான அம்சங்களை அறியக்கூடியதாகவிருக்கின்றோம். 'தேவநபிய', 'கமணி' ஆகிய இருவிருதுகளில், முதலாவதை ஆராயின், இது தேவா நம்பிய திஸ்ஸ மன்னனால் மட்டுமே கொள்ளப்பட்ட விருதுவென எண்ணுவதற்கு, மஹாவம்சத்தைப் பற்றிய நமது அறிவு இடமளிக்கின்றது. ஆனால் சாசனங்களில் அநேக அரசர்கள் இவ்விருதினையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். மஹாவம்சத்தில் இவ்விருதினையுடைய மன்னன் அசோகப் பெருமன்னனோடு விசேஷமான தொடர்புகள் கொண்டிருந்தான். இவ்விரு மன்னர்களும் ஒருவருக்கொருவர் தூதுகளும் பரிசுகளும் அனுப்பினரெனவும் அறிகிறோம் அசோக மன்னனே தன்னுடைய சாசனங்களில் இவ்விருதினைக் கொண்டுள்ளான். தேவா நம்பிய திஸ்ஸ மன்னன் தனது இரண்டாவது பட்டாபிஷேகத்தின்போது

6 ஏழாவது பக்கத்தைப் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விருதினை மேற்கொண்டிருக்கலாம்; அல்லது அத்தருணத்தில் அவ்விருது அசோகனால் அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கலாம். அவனுக்குப் பின் ஆண்ட இக்குடும்பத்தைச் சேர்ந்த மன்னர்களெல்லாரும் இவ்விருதினைக் கொண்டிருந்தனரெனத் தோன்றுகிறது. 'மீன்வில' (Minvila) என்னுமிடத்திலுள்ள சாசனமொன்றில் '**தேவநபிய குல**' (Devanapiya Kula - தேவநபிய குடும்பம்) என்னுஞ் சொற்றொடர் காணப்படுகின்றது.

'**கமணி**' என்னும் விருதும் நமது கவனத்தை ஈர்ப்பதாகும். இது, அரசர்கள் கிராமத் தலைவர்களாக இருந்த காலத்திலிருந்து உபயோகிக்கப்பட்ட ஒரு விருதென முன்னர் எண்ணப்பட்டது. ஏனெனில், 'கிராமத் தலைவர்' எனபதே இதன் பொருளாகும். ஆனால் இலங்கையிற் கிராமத்தலைவர்கள் '**கமிக**' (Gamika) என அழைக்கப்பட்டனர். எனினும், இப்பெயர், ஆதி ஆரியருடைய காலந்தொட்டு இந்தியாவிற் பழங்குடித்தலைவர்களாற் (tribal chiefs) கொள்ளப்பட்டு, பின்னரும், அரசபதவியெய்திய ஒருவனுடைய விருதுவாகப் பயன்படுத்தப்பட்டது. இதுவே இவ்விருதுவின் ஆரம்பமாகவிருக்கலாம். இது துட்டகாமணி (Dutthagamani), வட்டகாமணி (Vattagamani) ஆமண்டகாமணி (Amandagamani) ஆகிய அரசர்களுடைய விருதுவாக மட்டுமன்றி, பல அரசர்களுடைய பொது விருதுவாகக் காணப்படுகின்றது.

இச்சாசங்களின் காலத்தில் அரசர்கள் '**ரஜ**' (Raja) அல்லது '**மஹரஜ**' (Maharaja) என்னும் விருதுகளைக் கொண்டிருந்தனர். 'மஹரஜ' என்பது அநுராதபுரத்திலாண்ட முக்கிய அரசவம்சத்தினரால் (Main line) மட்டுமே கொள்ளப்பட்டது, 'ரஜ' என்பது வேறுபாடின்றி எல்லாராலுங் கொள்ளப்பட்டது. இந்தியாவின் பெரும்பாகத்தையாண்ட அசோகனே தனது சாசனங்களில் 'ரஜ' என்னும் விருதை மட்டுமே கொண்டுள்ளான் என்பது ஈண்டுநோக்கற்பாலது. அநுராதபுரத்து முக்கிய அரசவம்சத்து மன்னர்களை விட, மஹாவம்சத்திற் கூறப்பட்டுள்ள அரசர்களெனக் கண்டுபிடிக்க முடியாத பல சிற்றரசர்களும் இருந்தனர். இவர்களுட் பலருடைய பெயர்கள், தென்னிலங்கையிலுள்ள 'போவத்தேகல' (Bowattegala), 'ஹென்னனேகல' (Hennanegala) ஆகிய இடங்களிலுள்ள சாசனங்களிற் காணப்படுகின்றன. இவர்களுள் ஒருவன் துட்டகாமணியின் தந்தையாகிய 'காகவண்ணதிஸ்ஸ' (Kakavanna Tissa) மன்னனெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான். இவர்கள் பூரண சுதந்திரத்துடன் அல்லது பேரரசர்களின் கீழ் ஓரளவு சுதந்திரத்துடன் ஆண்ட சிற்றரசர்களாகவிருக்கலாம். இப்படியான அரசர்கள் இலங்கையின் மத்திய பகுதியிலுங் கேகாலைப்



பகுதியிலும் இருந்தனரெனத் தோன்றுகிறது. காலப்போக்கில், அநுரதபுரி அரசர்கள் தங்கள் ஆதிக்கத்தை இப்பகுதிகளிலும் பரப்பிக் கொண்டனர். மஹாவம்சத்திற் கூறப்படாத அநேக அரச குடும்பத்தினர் குகைகளைத் தானஞ் செய்வோர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இளவரசர்களுடைய பட்டமாகிய '**அய**' (Aya) என்பதாலும், இளவரசிகளுடைய பட்டமாகிய '**அபி**' (Abi) என்பதாலும் இவர்களை நாம் அறிவோம். சில சாசனங்களில், தாங்கள் அரசர்களுடைய மக்கள் அல்லது மனைவிமார் என்று தங்களுக்கும் அரசர்களுக்குமிடையேயிருந்த உறவினைக் கூறியுள்ளனர். '**அயஸுரதிஸ**' (Aya Sura Tisa), 'அய ஸிவ' (Aya Siva), 'திஸ அய' (Tisa Aya) என்பவர்கள் முறையே ஸுர திஸ்ஸ (Sura Tissa) மஹா ஸிவ (Maha Siva), லன்ஜி திஸ்ஸ (Lanji Tissa) ஆகியோராவர். அவர்கள் அரசர்களாகு முன் இப்படி அழைக்கப்பட்டனர்.

இவ்வாறாக இச்சிறு சாசனங்கள் மக்களுடைய சமய, சமூக, அரசியல் வாழ்வு பற்றியறிய நல்லொளி வீசுகின்றன. மஹாவம்சத்திற்றரப்பட்டிருக்குஞ் சான்றுகளோடு பயன்படுத்த, மேலதிகமான சான்றுகளைத்தருவதோடு, பழைய நூல்களிற்றரப்பட்டிருக்குஞ் சான்றுகளை இவை உறுதிப்படுத்துகின்றன. ஆட்சி முறை பற்றி இச்சாசனங்களிலிருந்து பெறப்படுஞ் சில விஷயங்கள் அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்.

(அடுத்த இதழில் தொடரும்)

FOR BUILDING MATERIALS AND
ESTATE SUPPLIES

**S. B. M. IBRAMSA**

343; 349, Oldmoor Street,

**Ph: 79522.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# * வங்கிகள் தேசியமயமாக்கப்படல் கூடாது

**(சென்ற இதழில் வெளியான கட்டுரைக்கொரு மறுப்புரை)**

**— சி. லோகநாதன் அவர்கள் —**

ஒரு சனநாயக அரசியல் அமைப்பில், அந்நாட்டின் உற்பத்திப் பெருக்கத்தை அதிகப்படுத்துவதற்கு, அல்லது தேசீய நலனையோ, சமூக நீதியையோ நிலைநிறுத்துவதற்குத் தேசியமயமாக்கம் ஒரு பிரத்தியேகவிதத்தில் உபயோகப்படும் என எதிர்பார்க்கப்படுங் காலை மட்டுமே, அதிலும் இம்மார்க்கம் தவிர்ந்த வேறெவ்விதத்திலும் மேற்படி நலன்கள் கைகூடுவது அசாத்தியம் என்பது தெளிவுபட்ட பின்னரே, அக்கொள்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். சனநாயகம் தற்காக்கப்படல் வேண்டுமாயின் சில குறிப்பிட்ட பொருளியல் விவகாரங்களில் அரசாங்கம் தனியுரிமைஉடைமையோ, கட்டுப்பாடோ பரிபாலித்தல் கூடாது. ஆனல் அவசிய மேற்படின் இத்துறைகளில் அரசாங்கம் தனியார் துறையோடு வெளிப்படையாக நியாயமான போட்டியில் ஈடுபடலாம். இத்தகைய நடவடிக்கை தனியார் துறையின் பொருளாதார வாழ்விற்கு இன்றியமையாததாகவும் அடிப்படையாகவும் அமைகின்றது. தனியார் துறையின் இப்பொருளாதார வாழ்வை நடாத்துவதற்கு, நிர்வாக அல்லது பரிபாலன அதிகாரிகள் நியாயமான தீர்ப்பளிக்கவும் நிலைமைக்கேற்ப முடிவு கூறவும் தேவையான ஆற்றல் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். அதனலேயே தமது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்யவும், சிலருக்கோ பலருக்கோ சாதகமாகவும் பாதகமாகவும் பேதங்கள் காட்டவும் அவர்களுக்குப் பெரும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. இதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டாக, வங்கித் தொழில் (மத்திய வங்கித் தொழிலல்ல)—அதிலும் குறிப்பாகக் கடன் அல்லது நாணய விநியோகம்—அமைகிறது.

இக்காரணம் பற்றியே, உலகில் சர்வாதிகார ஆட்சியற்ற எந்த ஒரு நாட்டிலேனும் வங்கித்தொழில் முற்றாக அரசாங்கத்தின் தனியுரிமையாக அமைந்திருக்கவில்லை. வங்கித்தொழிலில் அரசாங்கத் தனியுரிமை நிலவுவது, தனியார் தனியுரிமையிலும் பார்க்கச் சனநாயகத்திற்கு அபாயகரமானது. ஏனெனில், தனியார் தனியுரிமை, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற அச்சத்தாலும்

* The case against Nationalisation of Banks
C. LOGANATHAN Esq. General Manager, Bank of Ceylon.



(அல்லது உண்மையாகவே நடவடிக்கை எடுப்பதாலும்) தனியார் துறைகளின் போட்டிப் பயத்தாலும், வினைத்திறனையும் நேர்மையையும் பேணக்கூடும். ஆனல் அரசாங்கத் தனியுரிமை திறமை குன்றி நியாயம் தவறி நடக்குமாயின் அதற்கேற்ற பரிகாரம் பலனளிக்காது, கிடைக்கவும் மாட்டாது.

அவுஸ்திரேலியாவின் தகமைசார்ந்த அறிஞர் மென்சீஸ் (R. G. Menzies) ஒருமுறை கூறியதுபோல வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டால் ஆளுங்கட்சியினர் கரங்களில் பணத்துறையின் தனியுரிமை கொடுக்கப்பட்டுவிடும். அத்தோடு தனிமனிதருக்கோ, சங்கங்களுக்கோ வங்கித் தொழில் வசதிகளையும், உதவிகளையும் கொடுக்கவும் மறுக்கவும் இயலுமான தடையற்ற அதிகாரத்தையும் பெறுவர். எத்தகைய பெரிய அல்லது சிறிய ஆக்க முயற்சியேனும் பணமின்றி நடாத்தவியலாதாகையால், பணத்தின்மீதுள்ள அரசியற்றனியுரிமை ஆக்கவியாபார முயற்சிகளைச் சர்வாதிகார முறையில் கட்டுப்படுத்த முயலும். இத்தகைய கட்டுப்பாடுகள் வழமையான அரசியலமைப்பின் வரையறைவுகளாற் பாதிக்கப்படாது பிரயோகிக்கப்படலாம். ஏனெனில் அரசாங்கத் தனியுரிமைக்குள்ளடங்கிய ஒரு வங்கியானது, தனது வாடிக்கைக்காரர் அல்லது வருங்கால வாடிக்கைக்காரர்களுக்கிடையே, அவர்களது அரசியல், சாதி, சமயம், கொள்கை, தொழிலின் தன்மை முதலான எண்ணற்ற அடிப்படைகளிற் பேதங்கள் காட்டுவதை எந்த அரசியலமைப்பும் தடுக்க முடியாது என்க. எனவே போட்டியின் வாயிலாக நாம் பெறும் தெரிவுரிமையை அது பறிமுதல் செய்து, ஜனநாயகத்திற்கு முரணன அரசாங்கத்தின் ஆதிக்கத்தை வலியுறுத்தித், தேசமக்களையெல்லாம் அடிமைத்தளையில் மாட்ட அடிகோலுகின்றது.

ஒரு ஜனநாயக அரசாங்கம், பல நூற்றாண்டுகள் நிலைத்திருக்கக்கூடிய பலாபலன்களையுடைய தீர்மானங்களைச் செய்யும்போது, (வங்கித் தேசிய மயமாக்கம் அத்தகைய தொன்றாகும்) வருங்காலச் சந்ததியினரின் நலனையும், ஒருவேளை தனது பிற்காலத்தையும், இன்னும் தான்செய்த தவறைச் சரிப்படுத்தும் அதிகாரத்தை இழந்திருக்கும் ஒரு காலத்தையும் கருத்திற்கொண்டிருத்தல் வேண்டும். சம உடைமைக் கொள்கைகளையுடைய ஜனநாயகம், பொதுமக்கள் கவனத்தை ஈர்த்தல், அதிகாரத்திலுள்ளவர்களுக்கு வலிமையளித்தல் போன்ற காரணங்களுக்காகப் புகழ் பெற்ற பாரதூர நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது. தந்தையருடைய பாவங்கள் அவர்கள்தம் பிள்ளைகளையும், பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் பாதிக்காமல் இருப்பதாக. அரசாங்கங்களும், அதிகாரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவர்களும் சடுதியாகக் கவிழ்வது ஆச்சரியமானதொன்றன்று. ஆகவே இவர்கள் தம்மால் ஆக்கப்பட்டவைகளுக்கே பலியாகாமல் இருப்பார்களாக.

மேன்மை தங்கிய மென்சீஸ் அவர்கள் மேலும் கூறியதுபோலத் தேசத்தின் சட்டங்களுக்கும் பரிபாலனத்திற்கும் ஊற்றாகிய பாராளுமன்றத்தின் உண்மையான பிரதிநிதித்துவத்தன்மை ஜனநாயகத்திற்கு முக்கியமானது. இதுவே குடிமக்களின் தரத்திற்கு மதிப்பளித்து, அவரது ஒழுங்கான சுதந்திரத்திற்கும் உறுதியளிக்கும் விலைமதிப்பற்ற ஒரே அம்சமாகும். குடிமக்களுக்குரியதொரு சட்டம், பாராளுமன்ற விதிமூலம் பிறப்பிக்கப்படும்போது, அவ்விதி முறியுருவிலிருக்கும்போதே பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதால், அது பிரசித்தப்படுத்தப்படுவதோடு அதன்பால் பொதுமக்களுக்குள்ள கருத்தும் பெறப்படுகின்றது. பாராளுமன்ற அதிகாரத்தின் கீழ்ப் பிரமாணப்படி சட்டமியற்றப்படும்போது கூட, அப்பிரமாணம் பாராளுமன்றத்தாற் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அத்தோடு எந்தவொரு பாராளுமன்றச் சபையினலும் அது நிராகரிக்கப்படலாம்.

ஆனல், குடிமக்களுக்குரிய சட்டமானது, அதிகாரிகளால் பல தனித் தனிச் சந்தர்ப்பங்களில் முழு உரிமையுடனும், கட்டுத் திட்டங்களுக்கமையாமலும் செய்யப்பட்ட முடிவுகளாக, நியதிச் சட்ட முறையிற் பதியப்படாதனவாகப், பாராளுமன்றத்தால் புனராலோசனை செய்யப்பட முடியாதனவாக, நீதிமன்றத்தில் எதிர்க்க முடியாதனவாக அமையுமாயின், அப்போது சுதந்திரம் முடிவடைந்து சர்வாதிகாரம் தொடங்கிவிடும். அரசாங்க வங்கித் தனியுரிமை, தன் இயல்பாலேயே இத்தகைய சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்து சேர்க்கும் வாகனமாக அமையும்.

தனியார் துறையொன்று இருக்கும்வரை வாணிக வங்கிகள் அரசாங்கத்தின் தனியுரிமையாக முடியாது. தனியார் துறையொன்று இல்லாத நிலையில் வங்கித் தொழிலில் தனியார் போட்டிக்கு இடமோ தேவையோ இருக்காது.

திருவாளர் மென்சீஸ் அவர்களின் கருத்தை நான் திரும்பவும் கூறுவேனுகில், ' பணக்கொள்கையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை, மக்களுக்கு நேரடியாகப் பொறுப்பாகவுள்ள பாராளுமன்றத்தினிடத்திலேயே விட்டுவைக்க வேண்டும் என்பது ஒன்றே வங்கிகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்பதற்குச் சாதகமாகவுள்ள வாதமாகும். சமூகத்திற்குச் சேவை செய்யும் சகல தாபனங்களும் அரசாங்கத்தின் உடைமைகளாக்கப்படல் வேண்டுமென்பது பூரண சர்வாதிகார மனநிலையையே எடுத்துக்காட்டுகின்றது.



மக்கள் நலனுக்குச் சிறப்பாகப் பணி புரிவதற்கேற்றதொரு சமூகச் சூழலைத் தனியார் முயற்சிகளுக்கேற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடன் என்பது ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆனல் இதற்காகச் சகலமும் தேசிய உடைமைகளாக்கப்படல் வேண்டும் என்பதில்லை. பொதுப்பிரமாணங்கள், தடைகள், தூண்டுதல்கள் முதலியனவற்றுல், தேசிய நலனுக்கு முரணுன நடவடிக்கைகளையும் மிகைபாடுகளையும் தடுப்பதற்கேற்ற அதிகாரம் பொதுமக்கள் கையிலிருப்பது போதுமானது. வங்கிகளைப் பொறுத்தவரை ஏற்கனவே இத்தகையதோர் வரம்பு இருந்து, போதுமான கட்டுப்பாட்டைச் செய்து வருகிறது. இலங்கையில் அரசாங்கம் மத்திய வங்கியின் ஊடாக கையாளும் அதிகாரங்கள் இவ்விடத்திற் கவனித்தற்பாலது.

வாணிக வங்கிகளின் நடவடிக்கைகளை நேர்முகமாகப் பாதிக்கக்கூடிய மத்திய வங்கியினது அதிகாரங்களையும், செயல்களையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(1) மத்திய வங்கி இலங்கையிலுள்ள சகல வங்கி நிலையங்களையும் மேற்பார்வை செய்து தவணை தோறும் பரிசீலனை நடாத்தும்.

(2) வாணிக வங்கிகளின் ஒதுக்கல் விகிதங்களை (Reserve Ratio) அது நிர்ணயிக்கும். ஒதுக்கல் விகிதங்கள் மாற்றப்படக்கூடிய முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவை வைப்புக்களுக்கு (demand deposits) 10 சத விகிதமும், தவணை வைப்புக்களுக்கு (time deposits) 5 சத விகிதமும் குறைந்த பட்ச ஒதுக்கல் விகிதங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கவலைக்கிடமான விலை வீக்கமேற்பட்டால், எவ்விதத் தேவை வைப்புப் பெருக்கத்திற்கும் ஈடாக 100 விகிதமான ஒதுக்கல் விகிதம் வைத்துக்கொள்ளல் வேண்டுமென மத்திய வங்கி ஆணை பிறப்பிக்கலாம்.

(3) வாணிக வங்கிகளது பிறநாட்டு நாணயம் சம்பந்தமான அலுவல்களைக் கட்டுப்படுத்தும் பூரண அதிகாரம் மத்தியவங்கிக்கு உண்டு. அவசியமேற்படின் ஒரு குறிப்பிட்ட நாணயம் சம்பந்தமாகச் சரிசமான நிலையைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தலாம்.

(4) தனது வட்டி விகிதத்தையும் (Interest rate) கழிவு விகிதத்தையும் (Discount rate. தானே நிறுவும்.

(5) கடன் விநியோகங்களின்போது வங்கிகள் அநுட்டிக்க வேண்டிய கடனின் நோக்கம், வட்டி விகிதம் போன்ற பலவற்றையும் மத்திய வங்கியே நிர்ணயிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) அது பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளிலும் (Open market operation) ஈடுபடலாம். தேவையேற்படுங்காலை, தன்னுடைய சொந்த ஆவணங்களை (Securities) விநியோகிக்கும் உரிமையும் இதற்கு இருப்பதனுல், அது பகிரங்கச் சந்தையில் நடாத்தும் விற்பனவு, அதன் வசமிருக்கும் அரசாங்கப் பத்திரிகைகளின் தொகையில் தங்கியிராது.

(7) வாணிக வங்கிகள் தமது கடன் விநியோகங்களிலும் முதலீடு களிலும் ஆகக்கூடியது எத்தனைகாலப் பக்குவ நிலையை அனுமதிக்கலாம் என்பதையும் மத்திய வங்கியே நிர்ணயிக்க லாம்.

8) வாணிக வங்கிகள் பல்வேறு விதமான பற்றுக்களை விநியோ கிப்பதற்குத் தேவையான ஆவணங்களின் தன்மையையும் தொகையையும் மத்திய வங்கி நிர்ணயிக்கலாம்.

(9) வாணிக வங்கிகளது கடன்களையும் முதலீடுகளையும் பெருக விடாமல் தடுத்து அவற்றிற்கு வரம்பு ஏற்படுத்தலாம்.

(10) வாணிக வங்கிகளின் மூலதனமும், மிகைகளும் அவர்களது மொத்தச் சொத்துக்களுக்கு அல்லது ஒரு பிரத்தியேக வகை யைச் சார்ந்த சொத்துக்களுக்குக் குறைந்த பட்சம் எத்தனை விகிதமாகவாவது அமைய வேண்டுமென்பதையும் அது நிர்ண யிக்கலாம்,

(11) வாணிக வங்கிகள் விநியோகிக்கும் நாணயக் கடிதங்களுக் குரிய (Letters of Credit) குறைந்த பட்சக் காசெல்லைகளையும் அது குறிக்கும். வெவ்வேறுவித விவகாரங்களுக்கு வெவ்வேறு காசெல்லைகள் குறிக்கப்படலாம்.

(12) வாணிக வங்கிகள் வெவ்வேறுவித வைப்புக்களுக்குச் செலுத் தும் வட்டியினதும், வெவ்வேறுவிதக் கடன்களுக்குப் பெறும் வட்டியினதும் ஆகக்கூடிய தொகையையும் அது குறிக்கலாம்.

(13) மத்திய வங்கி "தகுதி வாய்ந்த" ஆவணங்களுக்கீடாகக் (eligible securities) கடன் கொடுக்கும் அதிகாரம் உடையது. மாற்றுண்டியல்கள் (Bills of exchange), வாக்குறுதிப் பத்திரங் கள் (promissory note), பொருளாக்கம், அசைவு வைப்பு முதலியவைக்குச் சான்று பகரும் உரிமைப் பத்திரங்கள், அர சாங்க ஆவணங்கள் ஆகியன "தகுதி வாய்ந்த" ஆவணங்களின் இலக்கணத்துட்சாரும். அவசர காலத்தில் தற்காலிக வசதிக்



காக இந்த இலக்கணத்தை விரித்து, மற்றும் பலவற்றையும் இதனுள் அடங்கச் செய்யும் அதிகாரமும் மத்திய வங்கிக்கு உண்டு.

(14) (அ) தனது செயல்களையும் பொறுப்புக்களையும் சரிவர ஆற்று வதற்குத் தேவையெனக்கருதப்படும் தகவல்களைச் சமர்ப்பிக் கும்படி எவரையும் கேட்கவும்,
(ஆ) இத்தகைய தகவல்களுள்ள நூல்களையும், பதிவு அட்ட வணைகளையும் வைத்திருப்பவர்களை, அவற்றைப் பரிசீலனைக் குச் சமர்ப்பிக்கும்படி கேட்கவும் மத்திய வங்கிக்கு அதிகாரம் உண்டு.

மத்திய வங்கியானது தன் வசமிருக்கும் சாதனங்களைப் போதிய அளவிலோ தேவையான முறையிலோ பிரயோகிக்கத் தவறினுல் அதற்குப் பரிகாரம் வங்கிகளைத் தேசியமயமாக்கு வதல்ல—அதன் பிழைகளைத் திருத்தி, அதனது அமைப்புப் பரிபாலனம் ஆகியவற்றின் கண்ணுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதே பொருத்தமானதாகும்.

'வங்கித் தேசிய மயமாக்கம்' என்பதின் தாற்பரியம் பற்றிச் சில தவருன கருத்துக்கள் காணப்படலாம். ஒரு வரவு செலவுத் திட்ட வாக்குவாதத்தின்போது, இந்தியாவில் வங்கித் தொழில் தேசிய மயமாக்கப்பட்டு விட்டது எனப் பல பாராளுமன்ற உறுப் பினர் கூறினர். ஆனுல் இந்தியாவில் நடந்துள்ள தென்னவெனில் இந்தியப் பேரரசு வங்கியும் (Imperial Bank of India) வேறு சில வங்கிகளும் இந்திய அரச வங்கி (State Bank of India) என்ற புதுப் பெயருடன் அரசாங்கத்தின் உடைமையாக்கப்பட்டுள்ளன. அதே சமயம் ஏனைய இந்தியப் பிறநாட்டு வங்கிகள் யாவும் தனியார் உடைமைகளாகவே இருந்து வருகின்றன. எனவே இந்தியாவில் வங்கித் தொழில் தேசிய மயமாக்கப்பட்டுள்ளது எனக்கூறுதல் சரியாகாது. வாடிக்கைக்காரர் ஒருவர் தான் விரும்பிய வங்கி யொன்றைத் தேர்ந்தெடுக்கக் கூடியதாய்ப் பல வங்கிகள் இந்தியா வில் உள.

இலங்கை வங்கியைத் தேசியமயமாக்குவதன் உசிதம் பற்றிய கேள்வி எழலாம். இதன் பலனைப் உண்டாகக் கூடிய விளைவுகளை நுணுகி ஆராயின், இவ்வாராய்ச்சியின் பலாபலன்கள் கட்டாய மாகத் தேசிய மயமாக்கத்தை எதிர்த்து நிற்கும். இலங்கையில் தொழிற்படும் வங்கிகளில் மிகப் பெரியது இலங்கை வங்கியே யாகும். பொருட்படுத்தக் கூடிய ஒரே உள்நாட்டு வங்கியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே. அத்தோடு நாணய விநியோகத்தில் இலங்கையர் நலனையே பிரத்தியேகமாகக் கருத்திற் கொண்டு இயங்கும் ஒரே வங்கியும் இதுவே. ஆகவே இந்நிலையில் இலங்கை வங்கியைத் தேசியமயமாக்குவது வங்கித் தொழிலையே தேசிய மயமாக்குவதாகும். இது சனநாயகத்திற்கும் ஒரு பேரிடியாகும். இந்திய அரச வங்கியின் உதாரணத்தை இலங்கை வங்கியுடன் ஒப்பிடமுடியாது. ஏனெனில் இந்திய அரச வங்கியுடன் போட்டியாக அந்நாட்டவருக்குப் பரிமாறும் உள்நாட்டு வங்கிகள் பல இந்தியாவில் உள. இலங்கையிலோ மேலும் பல உள்நாட்டு வங்கிகளுக்கு இடமுண்டு.

விஞ்ஞானத் திறன், தொழில் நுட்பம் ஆகியவற்றைத் தேசிய மயமாக்கம் எங்ஙனம் பாதிக்கும், என்பதைப் பரிசீலனை செய்ய இதுவரை முயற்சிகள் ஏதும் எடுக்கப்படவில்லை. குடியேற்ற நாட்டின் நிலையிலிருந்து இப்பொழுதுதான் மீண்ட எமது நாட்டிலே, தமது இயல்பினாலேயே அரசாங்கத்தின் தனியுரிமைகளாகவமைந்து அதனது முழுக்கவனத்தையும் ஈர்க்கவேண்டிய, போக்குவரத்து, நீர்ப்பாசனம், சுகாதாரம், மின்சாரம் போன்ற பல பொருளியல் நடவடிக்கைகள், எத்தகையதரமான அரசாங்கத்திற்கும் முழு நேர வேலை கொடுத்துக்கொண்டேயிருக்குமென்பதை இவ்விடத்தில் அவதானித்தல் நலம். குறிப்பிடப்பட்ட இந்நடவடிக்கைகள் தனியார் துறையைக் கவர இயலாதவை; அல்லது அவர்களாற் சமாளிக்க முடியாதவை. எனவே தன்முயற்சி ஏற்கனவே திறமையாகச் செயலாற்றும் துறைகளிலும், தேசியமயமாக்கமல்லாத பிறவழிகளால் திறமையாக நடாத்தப்படக்கூடிய துறைகளிலும், அரசாங்கம் தலையிடுதல் மிகவும் மதியீனமாகும்.

மேற்கூறிய பரிசீலனையினின்று புலப்படும் குறைந்தபட்ச எச்சரிக்கை யாதெனில், வங்கித்தொழில் தேசியமயமாக்கப்படத்தான் வேண்டுமாயின், தனியார்துறைத் தேசியமயமாக்கத்தில் இதுவே கடைசி அங்கமாக அமைதல் வேண்டும் என்பதே. ஏனெனில் வங்கித் தொழில்—குறிப்பாகப் பணத்தைக் கடனைக் கொடுக்கும் தொழில்—அரசாங்கத்தின் தனியுரிமையாக்கப்படுமாயின் அதுவே ஜனநாயகத்தினதும், அத்துடன் தன்முயற்சிப் பகுதி முழுவதினதும் மறைவுக்குக் காரணமாக அமையும்.

பொருளாக்கம் முற்றாக, அல்லது முக்கியமாக, அரசாங்கத்தின் உடைமையாகவிருக்கும் ஒரு சமூகம் ஜனநாயக முறையானதாகவிருக்க முடியாதென்பதை நாம் என்றும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஏனெனில், அதிகாரம் பெற்றுள்ள அரசாங்கமும், அதிகாரத்திலுள்ள கட்சியினரும் உற்பத்திச் சாதனங்கள் மேற் பெற்றுள்ள கட்டுப்பாட்டு வன்மையாலும், இவ்வன்மைதரும் சலுகைகளாலும் அதிகாரத்தாலும், எந்தவொரு எதிர்க்கட்சியைத் திறமையுடன் தொழிற்பட முடியாமற் செய்துவிடும். இத்தகையதோர் சமுதாயத்தில் அதிகாரத்திலிருக்கும் கட்சி, தொடக்கத்தில் பேச்சுச் சுதந்திரம், அபிப்பிராயச் சுதந்திரம், மக்கள் விடுதலை, சட்டவாட்சி, எதிர்க் கட்சிகள் திறம்படத் தொழிற்பட வேண்டியதன் அவசியம், ஆகியவற்றில் நம்பிக்கைகொண்ட உண்மையான ஒரு ஜனநாயகக் கட்சியாகவிருக்கலாம். இருப்பினும் காலப்போக்கில் அக்கட்சி எத்தகைய அரசியல் எதிர்ப்புக்கும் இடந்தர இசையாத ஒரு சர்வாதிகாரக் கட்சியாக மாறிவிடும். ஜனநாயகத்திற்குரிய முறைகள் நிலைத்திருந்த போதினும், அவை ஒவ்வொரு தேர்தலும் ஆள்வோன் பாலுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் வெறும் சாதனங்களாகவே அமையும். ஒரு மனிதன், தன் அன்றாட வாழ்வின் ஊதியத்திற்கு முற்றாக (அல்லது பெருமளவில்) அரசாங்கத்தின் மேல் தங்கியிருப்பதாலும், தனிப்பட்ட தன் வருமானம் அல்லது பிறிதொரு தொழில் பெறக்கூடிய மூலங்கள் யாவும் அவனுக்கு மறுக்கப்பட்டிருப்பதாலும், அரசாங்கத்தைக் கண்டிக்கவோ, அதற்கு எதிரானதொரு கட்சியை அமைக்கவோ துணிவற்றவனாகின்றான். எந்தவொரு அமைப்பிலும் அதை இயைவுபடுத்துங்காரணி பிரிபடற்பாலதன்று. இந்த இயைவு படுத்துங்காரணியை அரசாங்கத்தின் மத்திய அதிகாரத்தினின்று தொடர்பறுக்கவும் முடியாது. தன்னாண்மையுடைய குழுக்கள் மூலமோ, பிறவழிகளாலோ எவ்வளவுதான் அரசாங்கத்தின் செயல்கள் பன்முகப்படுத்தப்பட்டிருந்த போதினும், அரசியலிலே அதிகாரத்தை ஒருமுகப்படுத்தினால் சட்டமியற்றுந்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியன யாவும் ஆளும் கட்சியில் வலிமை மிக்க மனிதனது நேர்முகக் கட்டுப்பாட்டிற்கோ மறைமுகமான (இருந்தும் பலன் விளைவிக்கக் கூடிய) கட்டுப்பாட்டிற்கோ, உட்படச் செய்யும்.

பொருளாதாரம் முற்றாக அல்லது முக்கியமாக அரசாங்க உடைமையாயிருக்கும் நிலையில், தன்னாண்மையுள்ள அமைப்பின் நிர்வாகிகளும் தத்தம் நியமனங்களுக்கு, நேராகவோ, மறைமுகமாகவோ ஆளும் கட்சியினருக்கே கடமைப்பட்டிருப்பதுமல்லாது, சகல அல்லது பிரதான தொழில்களும் வாழ்வின் ஊதியச் சாதனங்களும் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கே அமைந்திருக்குமாகையால், அவர்கள் அப்பதவிகளில் நீடித்திருப்பதும், பிற தொழில்களைப் பெறும் வாய்ப்புக்களும் கூட ஈற்றில் ஆளும் கட்சியினர் மனநிலையிலேயே தங்கியிருக்கும். அரசாங்க அதிகாரிகளுக்கும், தன்னாண்மை அமைப்புகளின் நிர்வாகிகளுக்குமிடையே ஏற்படும் பேதங்களை நிலைபரச் சட்டங்களினாலோ, அரசியலமைப்பின் விதிகளினாலோ பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவருவதினால், இத்தகைய அமைப்புகளின் அலுவல்களில் அரசாங்கம் நியாயமின்றித் தலையிடுதல் தடுக்கப்படலாம் எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். முக்கியமாகக், குடியேற்றநாட்டின் நிலையிலிருந்து அண்மையிலே விடுதலைபெற்று, ஜனநாயக வழமைகளில் நன்கு பழக்கப்படாத நாடுகளில், எந்த அரசாங்கமும், திறமை வாய்ந்த அரசியல் எதிர்ப்பில்லாத நிலையில் கண்டனங்களைக் கவனியாதொழியும், அல்லது தவறான வழிகளினால் அடக்க முயலும் என்பதையே அனுபவ வாயிலாய்க் காணமுடிகிறது.

பெரும்பாலான வாணிபப் பங்குகளைக் கைக்கொள்வதின் மூலம் அரசாங்கமோ, அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதிகாரத்திற்குட்பட்ட ஸ்தாபனமோ ஒரு முயற்சியைக் கட்டுப்படுத்துவதால் இந்நிலைமை திருந்திவிடாது. ஏனெனில் அதன் பின்னரும் நிர்வாகம் அதிகாரத்திலுள்ள கட்சியின் மறைமுகமான—ஆனால் வன்மைமிக்க—கட்டுப்பாட்டிற்கு உட்படத்தான் செய்யும்.

முதலாளித்துவம் இன்று செயற்படும் விதத்தில் உண்மையான ஜனநாயகத்திற்கு இடமளிப்பதில்லை என்பதே எனது எண்ணமாகும். "ஒவ்வொருவனும் தன்தனக்கும் கடவுள் எம் யாவருக்கும் துணை" எனப் பிளிறிய வண்ணம் கோழிக் குஞ்சுகளிடையே நர்த்தனமாடிய யானை கருதும் விதமான சுதந்திரத்தை, ஓர் உண்மையான ஜனநாயகம் அனுமதிக்க முடியாது. இதற்குப் பரிகாரம் உற்பத்திச் சாதனங்களை அரசியலுடைமைகளாக்குவதல்ல. ஏனெனில் முன்னரே கூறியதுபோல், இங்ஙனம் அரசியலுடைமையாக்குவது, சிறிய முதலாளித்துவ வகுப்பினர் கரங்களிலுள்ள பொருளியலதிகாரத்தையும், பொதுமக்களகத்தேயுள்ள அரசியலதிகாரத்தையும், ஒரு சர்வாதிகாரியின் கரங்களுக்கொப்படைப்பதாகவே முடியும். அரசியற் சமதர்மத்திற்கும் (State Socialism) ஜனநாயகச் சமதர்மத்திற்குமுள்ள வேறுபாட்டை நாம் உணரவேண்டும். இது சம்பந்தமாகச், சர்வதேச வர்த்தக சபையின் (International Chamber of Commerce) இலங்கைத் தேசிய மன்றம் பிரசுரித்துள்ள "விருத்திச் சேமிப்பு வங்கி" என்னும் Development Savings Bank) எனது நூலினைப் பார்வையிடும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்நூலிலே, ஜனநாயகச் சமதர்மத்தை அடைவதற்கானதொரு வழிவகையை யான் அமைத்துள்ளேன். பொதுமக்களது நோக்குகளோடு ஒத்த நோக்குகளும், போதிய அரசியற் பொருளாதார அதிகாரமும் கொண்ட சமூகத்தின் பல்வேறு பிரிவினரும், ஆக்க சாதனங்களுக்காக மத்திய கட்டுப்பாடேதுமின்றி ஒருவரோடொருவர் போட்டியிடுவதன்மூலம் சந்தைமுறையின் நலன்களைப் பெறக்கூடியதும், அதே சமயத்தில் ஆக்க சாதனங்களைச் சமூகத்தின் பெரு நலனிற்கு உபயோகப்படுத்துவதுமானதொரு சமதர்ம ஜனநாயகத்தையே நாம் கருதுகிறோம்.

பொருளியல் 2

# * இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம்

**கலாநிதி ஐ. ஏச். வன்டன்டிரிசன்**

### தோற்றுவாய்

இலங்கையின் பொருளியல் வரலாறு இன்னும் எழுதப்படவேண்டிய நிலையிலேயே உள்ளது; அதாவது பூர்வீககாலம் முதல் இக்காலம் வரையிலுள்ள பொருளியல் வளர்ச்சியைத் தொடர்ச்சியாக அடங்கிய முறையில் இனித்தான் எழுதவேண்டும். என்றாலும் எண்ணற்ற மாணவர்கள் கடந்த அரைநூற்றாண்டாக நிகழ்த்திய ஆராய்ச்சியின் விளைவாகப் பயனுள்ள கட்டுரைகள் பல கைவசம் இருக்கின்றன. எனவே தற்கால பொருளியல் வரலாற்றின் படத்தை ஓரளவுக்குத் தீட்டமுடியும். படந்தீட்டவேண்டிய திரை பெரிதாகவும் தூரிகையின் கோடுகள் அகன்றனவாகவும் பரீக்ஷார்த்தமானவையாகவும் இருக்கும் என்பது உண்மையே. எனினும் இலங்கையின் பொருளியல் வளர்ச்சியின் பொதுப்போக்குகளைக் கணிசமான அளவுக்குச் சரியாகத் தீட்டுதற்கு இவை போதுமானவையாகத் தெரிகின்றன.

### பொருளியல் வரலாற்றில் தற்கால ஆரம்பம்:

அரசியல் வரலாற்றின் கால வரையறைகள் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், பிரித்தானியர் காலங்கள் என்ற பிரிவுகள் — பொருளியல் வளர்ச்சியின் போக்கோடு தொடர்பற்றவையென்ற உண்மை முதல் நோக்கிலேயே புலனாகின்றது. அரசியல் வரலாற்றாசிரியன் மேனாட்டாட்சியின் தொடக்கத்தையே தற்காலத்தின் தொடக்கமாகக் கொண்டுள்ளான். பொருளியல் நிகழ்ச்சிகளைத் திரட்டும் பொருளியல் வரலாற்றாசிரியரில் மிகச்சிலரே இதனை ஒப்புவர். பயனுறுதியுள்ள போர்த்துக்கேயரதோ, ஒல்லாந்தரதோ ஆட்சி மேற்குக் கரையிலிருந்து இருபது மைலுக்கு அப்பாற்பட

---

* An Introduction to the Economic History of Ceylon in the Modern Period.

I. H. Venden Driesen B. A. (Ceylon) Ph. D. (Lond)
Lecturer in Economic History—University of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை என்றே கூறவேண்டும். (சன நெருக்கமும், விவசாய வளர்ச்சியு மற்றதும் அற்ப மழையுடையதுமாகிய கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தைத் தவிர்த்து) இக்குறுகிய எல்லையுள்ளும், தாம் வந்தபோதிருந்த அரசியலமைப்பைப் பாரதூரமான மாற்றமோ தலையீடோ இல்லாது தொடர்ந்து இயங்கவிட்டனர். பழைய மானிய முறைப் பொருளாதார அமைப்புப் பெரும்பாலும் மாற்றப்படாமலே இருந்தது. எனவே பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் *1505*-ம் ஆண்டுக்கும் *1796*-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியும் மத்திய காலப் பொருளியல் வரலாற்றைச் சேர்ந்ததாகும்.

பிரித்தானியர் ஆட்சியின் முதற் சில ஆண்டுகளுக்கு நிர்வாகிகள் தமக்கு முந்திய போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் போலக் கரையோரப் பிரதேசங்களில் வருமானத்தை ஈட்டுவதும், வரிக்குத்தை விடுதலுமே செய்தனர். அவர்கள் புகுத்திய மாற்றங்கள் பெரும்பாலும் நிருவாக ஒழுங்கையும் நியதியையும் பற்றியனவே. அம்மாற்றங்கள் அரசாங்கத்தின் நோக்கத்தையோ பொருளாதாரக் கொள்கையையோ பாதிக்கவில்லை. *1815*-ம் ஆண்டில் பிரித்தானிய ஆதிக்கம் இத்தீவு முழுவதையும் அடக்கிப் பரந்தபோதுங்கூட அடிப்படையான மாற்றங்கள் எவையும் உடனடியாகக் கொண்டுவரப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டின் முடிவளவிலுங்கூட இலங்கையின் பொருளாதார அடிப்படை பெரும்பாலும் மானிய முறையினதாகவே திகழ்ந்தது.

**பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையும் முதலாளித்துவமும்:**

இந்தச் சூழலிலேதான் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை புரட்சிகரமான சடுதியுடன் தோன்றிற்று. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை புதிய முறையான பொருளாதாரப் பழக்கங்களையும், அக்காலத்திருந்த பொருளாதார அமைப்பிற்குப் புதிதான பல கருத்துக்களையும் கொண்டுவந்து, அதுவரை நிலைத்திருந்த அமைப்பின் அடித் தளங்களை விரைவில் அரித்தது. முதலாளித்துவம் வந்துவிட்டது. முதலாளித்துவத்தின் வருகையுடனேயே இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாறு தொடங்குகின்றது. பழைய தொழில்களின் முக்கியத்துவத்தை வேகமுள்ள வர்த்தக விவசாயம் கைப்பற்றியது. சில ஆண்டுகளுக்குள் அரசாங்கத்தின் வருமானத்தில் ஏறக்குறைய மூன்றிலொருபங்கிற்குக் கோப்பி வகை கூறியது. அதன் பயனாக அது அரசின் சலுகைகள் பெறக்கூடிய நிலையிலிருந்தது. இதனை அடுத்த ஆண்டுகளில் பெருந் தோட்டக்காரரின் பிரச்சினைகள் நாட்டின் பிரச்சினைகளாகக் கருதப்பட்டன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிக்கு அரசாங்கம் உற்சாகமான ஆதரவு கொடுத்தது. இம்முயற்சியில் பழையன பல கழிக்கப்பட்டுப் புதியன பல திடுக்கிடும் சடுதியுடன் புகுத்தப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் இலங்கை கோப்பி பயிரிடுவோரது தாளத்துக்கு ஆடியது. இப்போக்கிலே புதிய பொருளாதார அமைப்பொன்று மெதுவாக வளரத் தொடங்கிற்று. ஆக்கக் காரணிகளாகிய நிலம் தொழில் மூலதனம் என்பன புதிய கருத்துப்பெற்றன; முன்னொருபோதுமில்லாத வீதிகள், புகைவண்டிப் பாதைகள், துறைமுகங்கள் பல தோன்றின; அரசியல் நிகழ்ச்சிகளுக்குப் புதிய முக்கியத்துவங் கொடுக்கப்பட்டது; தற்கால முறையில் வகுப்புப் பேதம் வளரத் தொடங்கிற்று. இவ்வளர்ச்சிகளுடன் ஒரு பணப் பொருளாதாரம் தோன்றிற்று. விலை, ஆதாயம், கூலி, வாடகை, கொடுகடன் ஆகியவற்றைப்பற்றிய விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தது; அத்தோடு இலங்கை மக்கள் முன்னொருபோதும் கண்டிராத பலவகைப்பட்ட சமூகப் பொருளியல் நிகழச்சிகளைத் தொடக்கிற்று. வியாபாரச் சகடவோட்டம் (Trade Cycle) இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். இதுவரையில் வியாபாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வரட்சி, பிணி, போர் ஆகியனவே காரணங்களாகக் கருதப்பட்ட இந்த நாட்டில், இத்தகைய சகடவோட்டம் முதலில் *1846*–ம் ஆண்டுக்கும் *1849*-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றியது. இச்சகடவோட்டத்தின் அகர்த்தீகத்தன்மையும், மனிதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்டதுபோன்ற தோற்றமும் பயங்கரமானதும், புதியதுமானதொரு அனுபவமாகவிருந்தது.



மெதுவான, இருப்பினும் மாற்றமுடியாத உக்கிரத்துடன் புதிய சக்திகள் அக்காலத்தில் இருந்த பொருளாதார ஒழுங்கின் அடித் தளங்களை அரித்தன. புதியனவற்றை ஏந்திவரும் கருவியான கோப்பிப் பயிர்ச் செய்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் வளர்ச்சியோடு ஏக்கர் ஏக்கராக நிலத்தை விழுங்கியது. *1875*-ம் ஆண்டளவில் முதலாளித்துவம் இலங்கையிற் பலமாக வேரூன்றிவிட்டதென்பதில் ஐயமில்லை. இதற்குப் பின் பத்து ஆண்டுகளுக்குள் "கோப்பி மன்ன" னது ஆட்சி, ஒரு நோயின் பாதகமான பரவுதலினால் முறிவடைந்தது உண்மையே. என்றாலும் அம்மன்னன் தனது மரணப் படுக்கையில் இருந்தபோதும், தான் அமைத்த பொருளாதார முறை நின்று நிலைக்கும் என்ற எண்ணத்தில் பெருமை அடையக்கூடியவனாக இருந்தான்; ஏனெனில் கோப்பிப் பயிர்ச்செய்கையின் முடிவு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் முடிவுக்கு ஏதுவாகவில்லை. முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்பாதை மிகப்பலமாக வேரூன்றிவிட்டதனால், கோப்பிக்குப் பதிலாக பிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு வியாபாரப் பயிரைப் புகுத்தியதொன்றே அதனை நிலை
நிற்கச் செய்வதற்குப் போதுமானதாக இருந்தது. புதிய பயிர்,
தனக்கு முன்னிருந்த பயிர் ஆக்கிய அமைப்பை அப்படியே ஏற்
றுக்கொண்டது. இதனை அடுத்த ஆண்டுகளில் — ஏன் இக்காலம்
வரை — பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இலங்கையின் பொரு
ளியல் விருத்திப் பாதையை நிர்ணயிக்கும் முக்கிய சக்தியாகத்
திகழ்ந்தது.

இதுவே தற்காலப் பொருளியல் வரலாற்றின் பருமட்டத் திட்
டக் குறிப்பு. எனினும் பொருளியல் வரலாற்றின் பொதுப் போக்
குகளை மட்டுமே காட்டுதற்குக் கூட இதற்கு மேலும் பல விவரங்
களைச் சேர்க்க வேண்டும். இப்படம் போதுமானதாயிருப்பதாயின்
கோப்பிப் பயிர்ச் செய்கை சடுதியாக வந்ததற்குரிய காரணங்களை
விளக்கி, இதன் விளைவுகள் எவ்வெவ் வழிகளிற்சென்று பழைய
மானிய முறை அமைப்பைத் தகர்த்தன என்பதையும் சுட்டி, இந்
நாட்டு மக்களுக்கு இதனுல் உண்டான பலாபலன்களையும் காட்ட
வேண்டும்.

**கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி:**

நல்ல காலமாக நாம் இதனைச் செய்ய முடியும். 1834-ம் ஆண்
டுக்கு முன்னர் கோப்பிப் பயிர்ச்செய்கை இலங்கைக்குத் தெரி
யாததொன்று அல்ல. என்றுலும் அப்போது கோப்பி உழவர்க
ளது வீடுகளைச் சுற்றியிருந்த தோட்டங்களில் ஒழுங்கற்ற முறை
யிற் பயிரிடப்பட்ட முக்கியமற்ற சிறு பயிராகவே இருந்தது.
இதன் விளைவு ஆண்டுக்குச் சில ஆயிரம் அந்தர்களே. இந்த விளை
விற் பாரதூரமான மாற்றமேதும் ஏற்படும் என எதிர் பார்ப்ப
தற்கு ஏது இருக்கவில்லை. இந்நாட்டிலிருந்த வர்த்தக நோக்குள்ள
ஆங்கிலேய வர்த்தகர்களுக்குக்கூடச் சிறந்த கோப்பிப் பயிர்ச்
செய்கை முறைகள் தெரிந்திருக்கவில்லை. வெளிநாட்டிற் கோப்
பிக்கு இருந்த கேள்வி விருத்தியைத் தூண்டக்கூடிய அளவில்
இருக்கவில்லை; மேற்கிந்தியாவின் பலத்த செல்வாக்கின் காரண
மாக அதனது அடிமைகள் வேலை செய்த தோட்டங்களிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட கோப்பியின்மீது பிரித்தானியா குறைந்த
சுங்க இறைகளையே விதித்தது. இதனைவிட இருண்டதொரு சூழ்
நிலை இருந்திருக்க முடியாது.

இருந்தும், மூன்று ஆண்டுகளில் — அதாவது 1837-ம் ஆண்ட
ளவில் கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியை மட்டுப்படுத்
திய தடைகள் நீக்கப்பட்டன. இங்கு குடியேறிய ஆங்கிலேயரில்
ஒருவரான R. B. றைற்லர் (R. B. Tytler) என்பவர் ஜமெய்க்காவிற்



கையாளப்படும் சிறந்த கோப்பிப் பயிர்ச்செய்கை முறைகளைப்
பற்றிய அறிவை இலங்கைக்குக் கொண்டுவந்தார்; இப்பானத்துக்
கான உலகக் கேள்வி பிரமாண்டமான அளவிற் பெருத்தது; இலங்
கைக் கோப்பியின்மீதும் மேற்கிந்தியக் கோப்பியின் மீதுமிருந்த
இறக்குமதிச் சுங்க இறைகளைப் பிரித்தானிய அரசினர் சமமாக்
கினர்; ஜமெய்க்கா, டொமினிக்கா, கியானு ஆகிய இடங்களில்
அடிமை முறை நீக்கப்பட்டது அங்கிருந்த கோப்பித் தொழிலுக்
குப் பாதகமானதாக இருந்தது. பரந்து பெருகுஞ் சந்தயும்,
சுருங்கும் போட்டியும் புதிய பயிர்ச்செய்கை முறைகள் புகுத்தப்
பட்டமையும் பெரும்படியான கோப்பிச் பயிர்ச் செய்கையில் மக்
கள் ஊக்கங்கொள்ளும்படி செய்தன. முதலீடு செய்வோர் பிற
நாடுகளிலிருந்து இங்கு வந்து குவிந்தனர்; இவர்கள் எண்ணிக்கை
பெருகிக்கொண்டே இருந்தது. 1840-ம் ஆண்டளவில் "கோப்பிக்
காய்ச்சல்" உண்டாகிவிட்டது என்று சொல்லுமளவுக்கு இவர்க
ளது எண்ணிக்கை பெருகிவிட்டது.

**மத்தியகாலப் பொருளாதார அமைப்பின் தேய்வு:**

வரலாற்றின் இந்தக் கட்டத்திலிருந்துதான் மத்திய காலப்
பொருளாதார அமைப்பின் தேய்வு மிகவும் தெளிவாகின்றது.
புதிய தலைமுறையைச் சேர்ந்த பெருந்தோட்டக்காரரைப் பல
பிரச்சினைகள் எதிர்நோக்கிநின்றன. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு
காண்பது அவர்களது முதலீடுகளின் எதிர்கால நலனுக்கு அவ
சியம் வேண்டியதாக இருந்தது. நில ஆட்சி முறையிலிருந்த சிக்
கல்கள், அரசாங்கத்தின் நில விற்பனைக் கொள்கையிலிருந்த
குறைபாடுகளினுற் பிறந்த நிலப் பஞ்சம், கூலிவேலைக் குறைபாடு,
வீதிகளின்மை, புகைவண்டிப் பாதைகளின்மை, புதுக்குடியேற்ற
நாட்டில் முதலீடு செய்வதில் முதலாளிமாருக்கிருந்த தயக்கம்,
ஆகிய பிரச்சினைகளுக்குப் பெருந் தோட்டமுடையவர் தீர்வுகள்
காணவேண்டியவராயினர். அவர்கள் எல்லோரும் சிறிய முதலீடு
செய்யும் செல்வ வளம் குறைந்தவர்களாதலால், விரைவான வெற்
றிக்கன்றி வேறெதற்கும் ஒப்ப மாட்டார்கள். பயமுறுத்திக்கொண்
டிருக்கும் முறிவு காரணமாய் பிறந்த உக்கிர உணர்ச்சியால்
இவர்கள் தங்கள் வேலைகளைச் செய்வதில் உக்கிரமான உற்சா
கத்துடன் — சில வேலைகளில் மூர்க்கத் தனத்துடன் — கவனஞ்
செலுத்தினர். ஆதாயம் உண்டாக்கும் குறிக்கோளை நோக்கி அவர்
கள் மேற் கொண்ட முயற்சியாலேயே அவர்கள் இத் தீவினது
பொருளாதாரத்தின் தன்மையையும் மாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலப் பிரச்சினை:**

பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைச் சமூகத்தினரின் முயற்சிகள் முதலில் நிலக் கோரிக்கையிலேயே பிரதிபலித்தன. கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமும் தட்ப வெப்ப நிலையும் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பழைய கண்டி அரசு நிலப் பகுதியிலேயே காணப்பட்டன. இப் பகுதிகளிலேயே நிலக் கோரிக்கை மிகப் பலமாக இருந்தது. இப் பகுதிகளிலேயே பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையாளர் வெகு விரைவில் பழைய முறைகளுக்கு முரண்பட்ட நிலைக்கு வந்தனர். கண்டி ஆட்சியாளரின் கீழ், காடுகளிற் பருவத்துக்குப் பருவம் பயிரிடும் உரிமை மக்களுக்கு இருந்தது. இந்த முறையான பயிர்ச் செய்கை "சேனைப் பயிர்ச் செய்கை" எனப்படும். கண்டிப் பகுதிகளிற் சேனைப் பயிர்ச்செய்கை என்பதின் பொருள் ஏனைய பாகங்களிலிருந்த பொருளினின்றும் வேறு பட்டது. முன்னர் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் ஆளப்பட்ட ஏனைய பகுதிகளில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமில்லாத நிலங்கள் யாவும் முடியின் உடைமைகள் என்று கருதப்பட்டன. எல்லாக் காடுகளும் முடியின் ஏக போகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை யென்பதும் ஒத்துக் கொள்ளப் பட்டது. கண்டிப் பகுதிகளிலோ, 'சேனை'கள் - சட்டப்படி தனிப்பட்ட உழவரது உடைமைகளாகக் கருதப்படாத போதிலும் வழக்கின் பெயரால் அவன் பருவந் தோறும் அந் நிலத்தைப் பயிரிட்டான். பெருந் தோட்டக்காரர் இந்த நிலத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்தினர். கோப்பிப் பயிர்ச் செய்கை பல்கிப் பெருகத் தொடங்கியகாலை அது வரை முடிக்குரியது என்று அரசாங்கம் கருதிய நிலத்தின் பெரும் பகுதியைக் கண்டி மக்கள் தமது சேனைகள் என்று உரிமை கொண்டாடியமையை உணர்ந்தனர். இந்த நிலை, இளமையானதும் நற்பலன்களைக் கொடுக்கக் கூடியதுமான கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதை உணர்ந்த தேசாதிபதி ஸ்ருவாற் மக்கென்ஸி (Stewart Mackenzie) வழக்கின் பெயராற் கொண்டாடப்பட்ட உரிமைகளை மறுக்கும்படியும், முன்னர் எப்போதாவது அரசாங்கத்தாற் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப் படாத நிலத்தின் மீது முடிக்கு முற்றான உரிமை உண்டென்று பிரகடனஞ் செய்யும்படியும் குடியேற்ற நாட்டிற்குரிய அரசுக் காரியதரிசியைத் தூண்டினார். குடியேற்ற நாட்டு அலுவலகம் முதலில் இவ்வாறு செய்யத் தயங்கினாலும் நெடுங் காலம் இத் தூண்டுதலை எதிர்க்கவில்லை. "கோப்பிக் காய்ச்சல் உச்சத்திலிருந்த போது, பிரகடனஞ் செய்யப்பட்ட *1841*-ம் ஆண்டின் *9*-ம் இலக்க விதி (Ordinance 9 of 1841) உழவர்கள், தமது சேனை நிலங்களுக்குச் சட்ட பூர்வமான



உறுதிகள் காட்ட வேண்டும் என்று கோரியது. இதனாலேற்பட்ட கண்டி மக்களின் இன்னல் பலாத்காரத்துக்கு ஏதுவாயிற்றெனினும், ஒழுங்கை நிலை நிறுத்த அழைக்கப்பட்ட படைகள் பலவந்தமாக மக்களை இப் புதுச் சட்டத்தை ஏற்கும்படி செய்தன. மானியமுறைப் பொருளாதாரத்தின் மீது வர்த்தக விவசாயம் ஏற்படுத்திய தாக்கலின் தடுக்க முடியாத விளைவு என்றே ஒருவர் இந்த நிகழ்ச்சிகளைக் கருத முடியும். இது நிலத்தைப் பயன்படுத்தும் காரணத்தில் ஏற்பட்ட மாற்றத்தை— அதாவது, உணவுப் பயிர்களை விடுத்து வர்த்தகப் பயிர்களை விளைவித்தமையை — நன்கு பிரதிபலிக்கின்றது. கோப்பி பயிரிடுவோர் கவலைப் பட்டது பிழைப்பூதியத்தைப் பற்றியல்ல; இலாபத்தைப் பற்றியே: பெருங் கூறுகளைப் பற்றியேயல்லாது சிறியவற்றைப் பற்றியல்ல. எல்லாவற்றிற்கும் மேலாகச் சட்ட பூர்வமான உடமையைப் பற்றியே கவலைப்பட்டனர். இக் கால முறையின்படி தன்னுடமையில்லாத நிலத்தில் முறை மாற்றும் பயிர்ச் செய்கையை மேற் கொண்டதும், நிலத்தைச் சிக்கனமற்ற முறையில் பயன் படுத்துவதுமான தொரு மானிய முறைச் சமுதாயத்தின் மீது இத்தகைய அந்நியக் கருத்துக்களைப் புகுத்தியமை பல மோதல்களுக்கு ஏதுவாயிற்று. இத்தகைய இன்னல்கள், முன்னர் இந்தியாவிலிருந்ததெனவும், இப்பொழுதும் கிழக்காபிரிக்காவில் இருப்பனவுமாகிய இன்னல்களை ஒத்திருக்கின்றன. எனவே கோப்பித் தொழில் இலங்கையில் உண்டாக்கிய நிலப் பிரச்சினை நூதனமானதன்று; குடியேற்ற நாடுகளின் வரலாற்றில் சாதாரணமாகக் காணப் படுவதொன்றாகும்.

**இந்தியத் தொழிலாளர் பிரச்சினை:**

கோப்பி பயிரிட்டவனுக்கு அவசியம் தேவைப்பட்ட தொழிலாளரைக் கொடுப்பதற்காக வளர்ச்சியற்ற பொருளாதார முறை உழவர்களை நிலத்துடன் பிணைத்த தளைக்கத் தானாகவே அறுக்க முடியாதிருந்தது இயல்பே. பழைய ஊழிய வேலை முறை *1833* இல் ஒழிக்கப்பட்டது. என்றாலும் எதிர்பார்த்த கட்டில்லாச் சந்தை (Free Market) ஏற்படவில்லை. காசுத் தத்துவத்தைப் பற்றிக் கவலை கொள்ளாத உழவன் தனது சிறிய நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்து வந்தான். கூலி கொடுப்போரது கூவுதலுக்கு அவன் செவி மடுக்கவில்லை. இத்தகைய நிகழ்ச்சி எதிர்பார்க்கப்படவில்லை. சிங்கள மக்கள் தமது நிலைமையைச் சீர்படுத்துவதற்காகத் தமது சேவையைக் கூலிக்கு விற்பார்கள் என்ற எண்ணத்தைப் பிரித்தானிய அதிகாரிகள் கொண்டிருந்தனர். இந்தக் கருத்து தனி மனிதர் பொருளாதார அமைப்புள்ள சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடை (அனுபவம்)விலிருந்து எழுந்தது. பழைய இலங்கையின் சமூகப் பின்னலின் அமைப்பும் நெறி முறையின் சேர்க்கையும் பணம் சேர்ப்பதற்காகத் தனிப்பட்டவர்கள் முயலுவதற்கு ஊக்கமளிப்பனவல்ல. உணவு, உடைத் தேவைகளுக்கு அதிகமான செல்வத்தை அவர்கள் என்ன செய்ய முடியும்.

பழைய பொருளாதார முறையை முறிப்பதற்கு அவசியமான "பணத்தொடர்பு முறை" (Cash Nexus) உண்டாவதற்குப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மேலும் வளர்ச்சியடைய வேண்டி இருந்தது. எனவே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளன் கூலி வேலையாட்களுக்குப் பிறநாடுகளை நோக்கக்கடமைப் பட்டவனுயினுன். நல்ல காலமாகக் கூலிக்கு வேலைசெய்யும் முறைக்குமாறுன தடைகளற்ற அயல்நாடான இந்தியாவில் வேண்டிளவு மலிவான கூலியாளர் இருந்தனர். தாய்நாட்டில் பொருளாதார நிலைகெட்டது இலங்கையின் கவர்ச்சியான கூலி, பெருந்தோட்டங் களிலிருந்த உழைப்புறுதி ஆகிய இன்னேரன்ன காரணங்களால் தூண்டப்பட்ட இந்தியக் கூலிகள் கோப்பிஊழியின் தொடக்கத்திற் பெருந் தொகையாக வந்து சேர்ந்தனர். அதிவிரைவில் இப்போக்கு மாற்றப்பட்டது. கடுமையான மூலதன முடைக்குஆளான முதலாளிகள் கூலிகொடுப்பதில் தவறுதலாலும், கொடிய தண்டனைகள் விதிப்பதாலும், "கீழ்த்தரமான வீட்டு வசதிகள் அளிப்பதாலும் தொழிலாளரைச் சுரண்டியதே இம் மாற்றத்துக்குக் காரணமாகும். 1840 இல் 3,814 ஆகவிரிந்து 1844 இல் 76,745 ஆக உயர்ந்த இலங்கைவரும் இந்தியக் கூலிகளது எண்ணிக்கை 1848 இல் 32,172 ஆகக் குறைந்தது. "முதலாளிகள் கூலிகளை நடத்தியமுறை அவர்கள் இலங்கையை நாடுவதற்கு ஊக்கமளிக்கும் கொள்கைக் கியைந்ததாகவோ, மனுஷத் தன்மை உடையதாகவோ இருக்கவில்லை" என்று உபதேசாதிபதி ரென்னன்ற் (Tennent) 1847 இல் குறிப்பிட்டுள்ளார். முன்யோசனையாலும் மனுஷத் தன்மையாலும் உந்தப்பட்ட அரசாங்கம் வெகுவிரைவில் வைத்திய சேவைகளும், பிறவசதிகளும் கூலிகள் இறங்கிய துறைமுகங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் அமைத்தனர். பெருந்தோட்டக்காரனும் மனுஷத்தனமாக நடத்துவதின் விவேகத்தை உணர்ந்தான். அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் காட்டிய இந்தக் கரிசனையின் விளைவாக இலங்கைக்கு வந்த கூலிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. இவ்வெண்ணிக்கை 1855 இல் 58, 276 ஆக உயர்ந்தது. கோப்பி ஊழியின் முடிவில் இலங்கை வரும் கூலியாளர் தொகை ஏறக்குறைய ஆண்டுக்கு 100,000 ஆக உயர்ந்தது.



கூலிக்காரரது இந்த நுழைவு பொருளியல் வரலாற்ருசிரியனுக்கு அசாதாரண முக்கியத்துவம் உடையது. நிலமற்ற உண்மையான தொழிலாளர் வர்க்கம் இலங்கையில் இப்போது தான் தோன்றியது; இவ்வர்க்கத்தினர் காசு இணைப்பு ஒன்றினுலேயே முதலாளிகளுடன் தொடர்பு உடையவராயினர். இவ் வர்க்கத் தொடர்பு புதிதாக இருந்ததுமல்லாமல், அது வேறுசில புதிய இயல்புகளையும் கொண்டிருந்தது. இப்புதிய தொழிலாளர் வர்க்கம் முற்ருக அந்நிய நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களைக் கொண்டது. அதேபோல முதலாளிவர்க்கத்தினரும் அந்நியராகவே இருந்தனர். இத் தொழிலாளர்களது குடியேற்றம் குறிக்கப்பட்ட சில இடங்களிலேயே—அதாவது பெருந்தோட்டங்கள் இருந்த பகுதிகளிலேயே—நிகழ்ந்தது. அவர்கள் பிரிவுகளாகச் செறிந்த கூட்டங்களிலே வாழும்படி 'லைன்' இடவசதி முறையால் கட்டாயப் படுத்தப்பட்டனர். இது இந்தியாவின் ஒருபகுதியை, அதன் பழக்க வழக்கங்கள் சமய நம்பிக்கைகள் பிறசமூகத் தொடர்பு முறைகள் ஆகிய யாவற்ரேடும் இறக்குமதி செய்ததைப் போன்று இருந்தது.

இலங்கைக்கு முதலில் வந்த தொழிலாளிகள் சிறிது காலத்துக்குப்பின் தாயகம் திரும்பும் நோக்குடனேயே வந்தனர். ஆனுல் காலப்போக்கில் இவர்கள் இலங்கையையே தமது தாய்நாடாகக் கொள்ள முடிவு செய்ததின் விளைவாகக், கோப்பி ஊழியின் முடிவுகாலத்தில், இந்தியத் தமிழ்ச் சமூகத்தினரின் எண்ணிக்கை 200,000 த்திற்கு மேலாகவிருந்தது. இன்று பத்துலட்சத்திற்கு மேற்பட்டு, இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமாக விளங்கும் இந்தியத் தமிழர்கள், இன்றும் பெருந்தோட்டங்களிலேயே வேலைக் கமர்த்தப்பட்டவர்களாய்த், தாங்கள் எதற்காகக் கொண்டுவரப்பட்டார்களோ, அதே பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**போக்குவரத்துச் சாதனங்கள்:**

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை நடாத்தப்பட்டது சந்தைக்காகவேயல்லாது பிழைப் பூதியத்திற்காகவல்ல என்ற காரணத்திஞல், போக்குவரத்து வசதி இலங்கையின் பொருளாதாரச் சக்கரத்திற்கு அச்சாணிபோல் திகழ்ந்தது. எனவே காலப்போக்கில் இலங்கையின் தொடர்புச் சாதனங்கள் கோப்பிப் பயிர்ச்செய்கையினது தேவைகளின் முத்திரை பதியப்பெற்றதாக வளர்ந்தது.

பிரித்தானியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில், வீதிகள் இலங்கைக்குத் தெரியாதன அல்ல எனினும், கடலோரக் குறிச்சிகளின் பெரிய நகரப் பகுதிகளில் மட்டுமே அன்று வீதிகள் காணப்பட்டன. பாதுகாப்பின் பொருட்டும், நிர்வாக நோக்கங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்காகவும், கோப்பியூழியின் ஆரம்பகாலத்தில் நாட்டின் உட்பகுதிகளுடன் தொடர்பு வழிகள் திறக்கப்பட்டன. எனினும் இவை பிரதான வீதியாகவே இருந்தன. எங்ஙனமிருப்பினும், அவை மிகச்சிலவாகவே இருந்தமையால், கோப்பிப் பயிர்ச்செய்கையாளருக்குப் பயனளிப்பனவாக இல்லை.

1840 ஆம் ஆண்டை அடுத்த பத்து ஆண்டுகளுள், முதலீடுகள் பெருகியமையால், வீதிகளுக்காகிய கோரிக்கை வலுப்பெற்றது. கொள்கையளவில் அரசாங்கம் இக்கோரிக்கையை எதிர்க்க வில்லை. வீதியமைப்புத் தொன்றுதொட்டு அரசாங்கத்தின் கடமையாக இருந்தது. மேலும் நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு எடுக்கும்படி பெருந் தோட்டப் பயிர்ச்செய்கையாளரை ஊக்கிய பின்னர் அந்நிலங்களுக்குத் தொடர்பு வழிகளை ஏற்படுத்தாது விடுவது நியாயமானதன்று. எனினும் மிகக் குறுகியதொரு காலப் பகுதியில் மிகப்பல வீதிகள் கோரப்பட்டபடியால் பணப்பிரச்சினை பிரமாண்ட வடிவம் எடுத்தது. ஒரு புறத்தில் வீதியமைப்புச் செலவு பெரிதாக இருந்தது. இலங்கையின் மிகக்கூடிய அகலம் 143மைலே எனினும் மத்தியபகுதியில் நிலம் 8000 அடிக்கு மேலும் உயர்கின்றது. செங்குத்தான சரிவுகளும் கரடுமுரடான நாடும் இம்மத்தியப் பகுதியில் காணப்படுவன. இதே இடங்களில் தான் கோப்பித் தொழிலும் நிலைநாட்டப்பட்டது. எனவே மலை நாட்டுப் பகுதியில் இருந்த புதிய வீதிகள் பலவான ஏற்ற இறக்கங்களும் குகை வெட்டுக்களும், சிக்கலான வளைவுகளும் உடையனவாக இருந்தனவாதலால் நேரமும் பணமும் அதிகமாகச் செலவாயின.

இவற்றின் பரிபாலனப் பிரச்சினையும் மேற்படி அமைப்புப் பிரச்சினைக்கு இணையான முக்கியத்துவம் பெற்றது. அதிக மழை வீழ்ச்சியும் அமித வெப்பமும், துறை முகங்களுக்கும் பெருந் தோட்டங்களுக்கும் இடையே ஓடிய வண்டிகளுடைய இரும்புச் சட்டமிடப்பட்ட சக்கரங்களுமாகச் சேர்ந்து மிகப் புதிய வீதியினது முகத்திற்கும் இரண்டு ஒரு மாதத்தில் அழிவு ஏற்படுத்தின. இதனால் ஆண்டுதோறும் ஏற்பட்ட செலவும் நம்பமுடியாத விதத்தில் உயர்ந்தது.

1842 இல் 23, 147 பவுன் ஆகவும்
1844 இல் 35, 431 பவுன் ஆகவும்
1846 இல் 64, 947, பவுன் ஆகவும் உயர்ந்த இச் செலவு 1846ஆம் ஆண்டளவில் வருமானத்தின் 15 வீதத்திற்குக் கூடியதாக இருந்தது. மொத்த வருமானம் மென்மேலும் கோப்பித் தொழிலிலேயே தங்கியிருந்தமையால், அது கோப்பிச் சந்தையின் நிலைமைக்கு ஏற்பத் தளம்பியது.



எனினும் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையாளர் திருப்தி கொண்டிலர். கோப்பி பயிரிடப்பட்ட நிலப்பரப்பு வீதிகளிலும் வேகமாகப் பெருகியது. மனக் கசப்பு அடைந்த முதலீடு செய்வோர், ஓர நடத்தை, தெரிந்து செய்யும் அசட்டை, கவன ஈனம் போன்ற பல குற்றங்களை அரசாங்கத்தின்மேற் சுமத்தி, அதன் கொள்கைக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் வெளிப்படையான எதிர்ப்புக் காட்டுவதிற் பெயர் பெற்ற அரசியல் இயக்கமொன்றைத் தொடங்கினர்.

கவலைக்குள்ளான அரசாங்கம், 1845 முதல் 49 வரை நிகழ்ந்த பொருளாதார மந்தத்தினால் உண்டான இக்கட்டுக்கள் அதன் மீது சுமத்தப்படவே, ஆற்றுமை மேலீட்டால், ஒன்றன்பின் ஒன்றாகப் பல உக்கிரமான ஆழிதிறங்களைக் (expedients) கையாண்டது. வீதி வரி (Road Tax) என்ற போர்வையின் கீழ் சில காலத்திற்குப் பழைய ஊழிய வேலை முறைக்குத் திரும்பியது. புதிய பாதையமைப்பு முறைகளும் பரிபாலன முறைகளும் பரீட்சிக்கப்பட்டன. இவையாவும் தோல்வியே கண்டன. நல்ல காலமாக, 1850ஐ அடுத்த ஆண்டுகளில் மறுபடியும் செல்வவளம் பெருகவாரம்பித்ததின் காரணமாகப் போக்குவரத்துச் சாதன அமைப்பில் அதிக செலவு செய்வதன் மூலம் பெருந் தோட்டக்காரர் சமூகத்தினரது எதிர்ப்பை அரசாங்கம் தணிக்கக் கூடியதாக இருந்தது.

ஒரு முக்கியமான பெருவீதி மட்டும் கேவலமான நிலையில் இருந்தது. வழிதோறும் கிளை வீதிகள் பலவற்றைத் தொடுத்த வண்ணம் கோப்பிப் பகுதியின் ஊடாக ஓடிய கண்டி வீதியே இதுவாகும். இதன் மீதிருந்த போக்குவரத்துப் பெருந்தொகையாக விருந்ததோடு, ஆண்டுதோறும் மேலும் கூடியது. 1866 இல் தேசாதிபதி ஹேர்கூலிஸ் ரொபின்சன் (Hercules Robinson) என்பார் "இவ் வீதிக்கு உண்டாவது போன்ற தேய்வை எத்தகைய வன்மைமிக்க உலோகத்திலான வீதியும் தாங்காது. உண்மையில் இதன் தேய்வு இங்கிலாந்திலுள்ள எந்தக் கற்பாவிய வீதியிலுண்டாகுந் தேய்வையும் விடக் கூடியதாக இருக்கலாம். 40-45 அந்தர் வரை கனமுள்ளவை, ஒரே சோடிச் சக்கரங்களின்மேல் ஏற்றப்படுவதால், அதன் பழு பாரதூரமானது" என்று கூறியுள்ளார்.

**புகைவண்டிப் பாதை:**

இப்பிரச்சினைக்கு வெளிப்படையான தீர்வு புகைவண்டிப் பாதை அமைத்தலே யாகும். இத்தகையதொரு நடவடிக்கையின் நல்விளைவுகளை நன்கு உணர்ந்த பெருந் தோட்டக்காரச் சமூகத்தினர் உடனே அதை ஆதரித்தனர். புகைவண்டி வீதி அமைக்க வேண்டும், என்ற எண்ணம் முன்பே (1845ம் ஆண்டளவில்) தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைவண்டிப்பாதை இடப்பெயர்வுச் செலவுகளையும், திருட்டுக்களையும் குறைக்கும் என்றும் பொருட்களுக்கு இயற்கையினின்றும் கூடிய பாதுகாப்பை அளிக்கும் என்றும் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது. ஆனல் அரசாங்கம் இக் கருத்துக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. பொருளாதார மந்தத்தினுல் மிகக் குறைக்கப்பட்ட அரசாங்க வருமானம் உறுதியற்றதாக இருந்ததால், முதலீடு செய்வோர் கோரிய உத்தரவாதப் பங்கூதியத்தைக் (guaranteed dividends) கொடுக்க அரசாங்கத்துக்கு முடியவில்லை. 1860ஐ அடுத்த ஆண்டுகளிலோ நிலைமை மாறியிருந்தது. அதிகப்படியான வருமானம் பெருந்தொகையில் இருந்ததினுல் அரசாங்கம் இம் முயற்சியை ஆதரித்தது. புகைவண்டிப் பாதைக்கு அதிமுதன்மை கொடுக்கப்பட்டு, 1867-ம் ஆண்டு முடிவில் கொழும்பு — கண்டிப் புகைவண்டிப் பாதை பொதுமக்கள் பாவனைக்குத் தயாராக இருந்தது. கோப்பி ஊழியின் எஞ்சிய ஆண்டுகளில் இப்பாதையைச் சுற்றிப் பல கிளைப்பாதைகள் அமைக்கப்பட்டன. புகைவண்டிப் பாதைக் கிளைகள் கோப்பி வளரும் பகுதியின் பெரும்பாலான இடங்களை அடைந்ததினுல் பெருந்தோட்டக்காரர் தாம் எதிர்பார்த்த நல்விளைவுகளைப் பெற்றனர். பொருட்களின் இடப்பெயர்வுச் செலவு விரைவில் 60-70 விகிதம் குறைந்தது.

தற்காலப்பகுதியில், போக்குவரத்துச் சாதனங்களிலேயே அரசாங்கம் மிதமிஞ்சிச் செலவிட்டது. 1837 க்கும் 1886 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வீதியமைப்பிற்காக 57 1/2 இலட்சம் பவுனும், புகைவண்டிப்பாதை யமைப்பிற்காக 37 1/2 இலட்சம் பவுனுமாக 95 இலட்சம் பவுன் செலவு செய்யப்பட்டது. இதே காலப்பகுதியின் மொத்த வருமானம் 400 இலட்சம் பவுணுக இருந்தமையால், இதில் ஏறத்தாழ 24 விகிதம் வரையில் வீதிகளிலும் புகைவண்டிப் பாதைகளிலும் செலவிடப்பட்டமை, போக்கு வரத்துச் சாதன அமைப்பிற்கு அரசாங்கம் அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய முக்கியத்துவம் அவசியமாகவும் இருந்தது. பொது வருமானத்தின் நிலைமை கோப்பியின் செல்வ நிலையோடு நெருங்கிப் பின்னப்பட்டு இருந்ததினுல் இது அவசியமாகிறது. கோப்பிக் காய்ச்சலையடுத்த பத்து ஆண்டுகளுக்குள், கோப்பித்தொழில் மொத்தப் பொது வருமானத்திற் காற்பங்கைக் கொடுத்தது. இவ்விகிதாசாரம் கோப்பிக்கால முடிவுவரை நீடித்தது.

**நாடுபிணைக்கப்படல்:**

கோப்பி ஊழியில் ஏற்படுத்தப்பட்ட தொடர்புச்சாதனத் திருத்தங்கள், இத்தகைய நடவடிக்கையோடு பாரம்பரியமாகத் தொடர்புற்ற விளைவுகளைக் கொண்டுவந்தன. நாட்டுப்புறத்தனிமை



(rural isolation) முறிக்கப்பட்டு, வர்த்தகத் தத்துவம் ஏதுவாகப் பிறந்த புதிய மதிப்புக்களையும் சீவிய முறைகளையும் ஏற்கக் கூடிய மனேநிலைமையை மக்கள் பெற்றனர். முன்னர் தன்நிறைவு உள்ளனவாக இருந்த பகுதிகள், இப்போது ஒருங்கு கொண்டுவரப்பட்டன. இப்பகுதிகளில் நிலவிய விலைகள் ஒத்தஅளவு உள்ளனவாக்கப்பட்டன. பொருளாதாரத்தையும் அரசியலையும் பொறுத்தமட்டில் நாடு ஒன்ருகப் பிணைக்கப்பட்டது; இலங்கை ஒரு தனிப்பட்ட நாடாக்கப்பட்டது; உலகச் சந்தையமைப்பின் ஒரு பகுதி என்ற முறையில் பிறநாடுகளுடனும் இணைக்கப்பட்டது.

வீதிகளினதும் புகைவண்டிப் பாதைகளினதும் வருகையால் நாடுகள் நெருங்கியிருக்கவேண்டிய தேவை அற்றுப்போய்விட்டது. வெகு தொலைவில் இருந்த இலங்கையின் வெவ்வேறு பகுதிகள் (ஏன், உலகத்தின் பகுதிகள் கூட), வரலாற்று முறையில் பெரிய உடன்பாடுகள் பலவற்றைத் தம்மிடையே பகிரும் அண்டைப் பகுதிகளையும் விட, அண்மையின ஆக்கப்பட்டன. இத்தீவினை, அதிலும் குறிப்பாக மத்தியப் பகுதிகளை, இங்ஙனமாகத் திறந்தமை, யுத்த காரணங்களுக்காகத் தமது நாட்டைக் கூடியவரை அணுக முடியாதவாறு வைத்திருந்த கண்டியரின் பழைய கொள்கைக்கு முரண்பட்டதாக இருந்தது.

"கண்டியர் வஞ்சனையாக வீதியென அழைக்கும் சேறு, சகதி, குளங்கள் குட்டைகள், சதுப்பு நிலங்கள், இருண்ட காடுகள், நீண்ட பாசிப்பகுதிகள் ஆகியவற்றினூடாக, அசுத்தக் காற்றையும், மரணபீதியை ஏற்படுத்தக்கூடிய ஈரத்தையும் சுவாசித்த வண்ணம், களிப்பூட்டக்கூடிய காட்சியாகிய மனிதனையோ, மனித இல்லத்தையோ காணுது, அதிர்ஷ்டமற்ற ஒரு வழிப்போக்கன் தள்ளாடிச் செல்லவேண்டும்," என்று, இரண்டு பரம்பரைகளுக்கு முன், முன்னைநாள் நீதியரசர் ஒருவர் (Sir Hardinge Giffard) சலிப்போடு பாடியதை, 1870ஆம் ஆண்டளவில் கண்டியின் பிரதான வீதிவழியே சென்ற பெருந் தோட்டப்பயிராளன் எவனும் நம்பியிருக்க முடியாது.

**முதலீட்டுப் பிரச்சினை:**

தொழில் சார்பான பிரச்சினைகளாகிய, நிலம், கூலிவேலை, போக்குவரத்து வசதி ஆகியவற்றிற்கு மேல், முதலீட்டுப் பிரச்சினையும் இருந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயப் பணநிறுவனங்கள், புதியதும் அறியப்படாததுமான ஒரு குடியேற்ற நாடாகிய இலங்கையில் முதலீடு செய்யத் தயங்கின. எனவே தொடக்கத்தில் நிலம் வாங்கியவர்கள், தங்களது தனிப்பட்ட சேமிப்புப் பணத்தை இத்தகைய தேர்வாராய்ச்சிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குப் (Experiment) பயன்படுத்திய அரசாங்க அலுவலாளர்களும், படை அதிகாரிகளுமே ஆவர். கோப்பிச்செய்கை பரீட்சிக்கப்பட்டு, ஊதியம் தருவது என்பது தெளிந்த பின்னர், பிறரும் அதில் முதலீடு செய்தனர். சிலர் பெருந் தொகைகளையும் இம்முயர்சியிற் செலவிடச் சித்தமாயிருந்தனர். ஆனால் பெருந்தொகையானோர் நடுத்தரச் செல்வராகவே இருந்தனர். இவர்கள் சிறிய முதலாளிகள் (small capitalists) என அழைக்கப்படும் வகுப்பினர்கள். இவர்கள், *1840*-ம் ஆண்டிலே தோன்றி, அன்று ஐந்து ஷில்லிங்குகளுக்கு விற்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலம் *1844* ஆம் ஆண்டில் இருபது ஷில்லிங்குகளாக விலையேறும்வரை, இத்துறைக்குப் பெருந்தொகையினராகப் புகுந்த வண்ணம் இருந்தனர். இத்திகதிக்குப் பின்னர், பெருந் தோட்டக்காரனாவதற்குக் குறைந்த பட்சம் மூவாயிரம் பவுன் முதலாவது தேவைப்பட்டது. இத்தொகை மிதமிஞ்சியதொன்று அன்று எனினும், முதலீடு செய்யக்கூடியவர்கள் பலரைத் தடுத்தது. இத்துறையுள் பிரவேசித்தவர்களிற் பெரும்பாலானோர் தேவைப்பட்ட மிகக்குறைந்தபட்ச முதலையே கொண்டவர்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் *1844* ஆம் ஆண்டிற்குப்பின் திறக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் மிகச்சிலவாகவே இருந்தன என்க. *1875* ஆம் ஆண்டில், கோப்பிப் பயிர்ச்செய்கை உச்சத்திலிருந்த காலத்தில் நிகழ்த்திய கணக்கெடுப்பு (Survey) அப்போதிருந்த *1351* பெருந் தோட்டங்களும் சராசரி *356* ஏக்கர் பரப்பினை மாத்திரம் கொண்டவையாகவே இருந்தன என்பதைக் காட்டுகின்றது.

எமது காலத்தின் கடைப்பகுதியில் கம்பனிகளுக்குரிய பெருந்தோட்டங்களே பெரும்பானவாக இருந்தபோதும், இவை என்றுமே முதன்மை பெறவில்லை. *1870* ஐ அடுத்த பத்து ஆண்டுகளின் நடுப்பகுதியிலுங் கூடக், கோப்பியாக்கத்தில் ஈடுபட்டவர்களில் மூன்றிலிரண்டு பங்கினர், தமது சொந்தத் தோட்டங்களைத் தாமே பராமரிக்கும் தனிப்பட்ட பெருந் தோட்டக்காரர்களாகவே இருந்தனர். மொத்தமான *1351* பெருந் தோட்டங்களில், *800* க்குக் குறையாத தோட்டங்கள் தனியுரிமையாளர்களது உடைமைகளாகவே இருந்தன. இவர்களுள் *250* உரிமையாளர்கள் தமது தோட்டங்களிலேயே தங்கி அவற்றைப் பராமரித்தனர்- எஞ்சியோருள் நானூற்றுவர் இத்தீவிலேயே தங்கியிருந்து, தோட்டங்களின் பராமரிப்பைப் பிறர் கையில் விட்டிருந்தனர்.

கோப்பிக் காய்ச்சலோடு இலங்கைக்குள் சொரிந்த சிறிய முதலீட்டாளரிற் பலர் கடன் வாங்கிய முதலில் தங்கியிருந்தனர். இவர்கள், பயிர்களின் விளைவை ஈடாகக்கொண்டு முற்பணம் தரும்



பழைய மேற்கிந்தியத் திட்டத்தின் மூலம் தமது மூலதனங்களைப் பெற்றிருந்தனர். இம்முறையின்படி, பெற்ற கடனும் அதற்குகந்த வட்டி வீதமும் தீர்க்கப்படும்வரை, சம்பந்தப்பட்ட பெருந் தோட்டத்தின் வருங்கால விளைவில், கடனைக் கொடுத்த நிலையம் உரிமை பாராட்டலாம் என்ற ஒப்பந்தத்தின் பேரில், லண்டனில் அல்லது கொழும்பில் உள்ள பிரதிகரும அகங்கள் (agency houses) கடன் கொடுத்தன. சிலர் கடன் பெறாது தாமாகவே தொழிலைத் தொடங்கினார்கள் என்பது உண்மையேயாயினும், மிகப் பலர் காலப் போக்கில் இப்பிரதிகரும அகங்கள்மேலேயே தங்கியிருந்தனர். குறுகிய செல்வவளம் படைத்தவர்கள் தொடர்ந்துவரும் பாதகமான பருவங்களைத் தாங்கும் சக்தியற்றவர்களாகையால், நெருக்கடியான நிலைகளிற் கடன்பணத்துட் சரண்புக நேரிட்டது.

பிரதிகரும அகம் மட்டுமே பெருந் தோட்டக்காரன் கடன் வசதி பெறக்கூடிய ஒரே இடம் என்ற நிலைமை நீடிக்கவில்லை. பல வங்கிகள், பெரும்பாலும் பிரபலமான அந்நிய வங்கிகளின் கிளைகள், இலங்கையில் தோன்றின. இவற்றுள் சில கோப்பித் தொழிலிற்கு மட்டும் மிஞ்சிக் கடன் கொடுத்ததினால், கோப்பித் தொழிலின் இக்கட்டான காலப்பகுதியில் நிலைநிற்க முடியாது முறிவுற்றன. ஆனால் ஏனையன முன்னெச்சரிக்கையாகவிருந்து, எத்தகைய அபாய நிலைகளையும் தாண்டி, இன்றும் நாட்டின் பொருளாதார இயந்திரம் இயங்குவதற்குத் துணைசெய்கின்றன.

நுண்மையான காற்று அமுக்கமானிகளைப் (barometer) போல, வங்கிகளும், பிரதிகரும அகங்களும் பிறநாட்டுப் பணச்சந்தைகளின் தளம்பல்களைப் பதிவு செய்தன. சர்வதேசிய வர்த்தகத்தின் சர்வானுகூல மனப்பான்மை (optimism) யினது ஏற்றத்தாழ்வுகள் உடனுக்குடன் கொழும்பிற்கு அனுப்பப்பட்டன. *1846—49* ஆண்டுகளின் மந்தம், *1866*-ம் ஆண்டின் சர்வப்பிரதிகூல மனப்பான்மை (Pessimism), *1870*, *1880* ஆண்டுகளையடுத்து ஏற்பட்ட மாபெரும் மந்தங்கள், ஆகிய ஒவ்வொன்றும் இத்தீவிலே பிரதிவிம்பித்தன. இங்ஙனமாக இலங்கை உலகப்பொருளாதார அமைப்போடு இன்னும் பலமாகப் பிணைக்கப்பட்டது.

**அரசியல் வளர்ச்சி:**

பெருந்தோட்டப் பயிராளன், தான் பொருளாதாரத் துறையிலிருந்து மறைவதற்கு முன்னர், இந்நாட்டின் அரசியல் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டாற்றியுள்ளான்.

*1833*-ம் ஆண்டில், ஒரு விசாரணைக் குழுவின் சிபாரிசின் பேரில், ஒன்பது உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தவர்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு நியமிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களையும் கொண்ட சட்டசபை ஒன்று நிறுவப்பட்டது. உத்தியோகப் பற்று அற்றவர்கள் தொடக்கத்தில் கொழும்பில் வசித்தவொரு சிறிய வர்த்தகச் சமூகத்தினரின் பதிலிகள் (Representative) ஆக இருந்தனர். (பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர் சமூகம் அப்போது முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை) இப் பதிலிகள் பெரும்பாலும் அரசாங்கக் கொள்கையை எதிர்க்காது ஏற்றுக்கொண்டனர். *1840*ஐ அடுத்த பத்தாண்டின் முடிவில் பெருந்தோட்டச் செய்கையாளர் அரசியல் துறைக்குள் நுழைந்து, பத்து ஆண்டுகளுக்குள் தமது செல்வாக்கை இந்நாட்டு ஆட்சியிற் பதியச் செய்தது அவர்களது பெருஞ் சாதனையாகும்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர் சமூகத்தின் அரசியல் அக்கறை (political Concern) பெரும்பாலும் திருத்தமான வீதி, புகைவண்டிப்பாதை அமைப்புக் கோரிக்கை பற்றியதாகவே திகழ்ந்தது. சட்டசபையில் அவர்கள் உறுப்பினராக இருந்தகாலம் முழுவதிலும் திரும்பத் திரும்ப ஒலித்த பல்லவி இதுவே. புதிய வீதிகள் அமைப்பதிலும், புகைவண்டிப் பாதைகளை நீட்டுவதிலும் அரசாங்கம் சுறுசுறுப்பாக இருந்தால் அமைதி நிலவும்; இவ்வம்சங்களில் செலவிடப்படும் தொகை போதியதாக இல்லாவிடில், வரவு செலவுத் திட்டத்தின்பால் கட்டுப்பாடு செலுத்தக்கூடிய அளவு அரசியல் உரிமைகோரி ஓர் இயக்கம் தொடக்கப்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதன்மை பெற்று விளங்கிய அரசியலமைப்புத் திருத்தச் சதிர், ஏனைய இயக்கங்களைப் போலவே கோப்பித்தொழிலின் தேவைகளாற் பாதிக்கப்பட்டது. சிறிது காலத்துக்குப் பெருந்தோட்டக்காரரும் வர்த்தகரும் இச் சதிரின் முன்னணியில் இருர்தனர். அவர்களது உற்சாகத்தைத் தூண்டியவை சமூகநன்மை, மனிதஉரிமை போன்ற பிரச்சினைகளல்ல. தொழிலாளனுக்கு முக்கியமான சாதாரணச் செயல்முறைப் பிரச்சினைகளே இவர்களது உற்சாகத்தைத் தூண்டின.

அரசாங்கத்தின் பொதுச்செலவுத் திட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய இத்தகைய இயக்கமானது, தொடர்ச்சியாக இல்லாது இடையிட்டதாக இருப்பது இயல்பே. முதற் பதினைந்து ஆண்டுகளுக்கும் அப்படியே இருந்தது. இடப்பெயர்வு—போக்குவரத்துச் சாதனங்களில் அரசாங்கம் செலவிட்ட பணத்தொகையின் தளம்பலுக்கேற்ப இவ்வியக்கமும் வளர்ந்துதேய்ந்தது. *1850*ஐ அடுத்த பத்தாண்டில், பெருந்தோட்டக்காரனைக் காலப்போக்கிற் சட்டசபையில் இருந்து விலக்கிய புதியவளரும் சக்தியொன்று பிறந்தது. உள்நாட்டு நடுத்தர வகுப்பே (Middle Class) இச்சக்தியாகும். பெரும்பாலும் வைத்தியர்கள், சட்டவல்லுனர், பழைய நிலவுடைமையாளர் ஆகியோரைக் கொண்டதாகவிருந்த இவ்வகுப்பின் அரசியற்கிளை நிர்வாக உத்தியோகங்களுக்கும் கூடியளவு சுயாட்சிக்கும் இலங்கையர் கொண்டாடிய உரிமையை முழக்கியது.



முதலிற் பெருந் தோட்டக்காரர் சமூகத்தின் பதிலிகளது அரசியற் பயிற்சி மாணவராய் (Political Apprentices) இருந்த இலங்கையர், விரைவில் இவ்வடிமைத் தனத்தில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர். அவர்கள் கற்ற பாடங்கள் செவ்வனே பயன்படுத்தப் பட்டன. சிறிது காலத்துக்கு அரசாங்கம் இவர்களது கோரிக்கையை எதிர்த்த போதிலும், இருபதாம் நூற்றாண்டளவிற் காணப்பட்ட இலங்கையர் எதிர்ப்பின் வன்மை காரணமாகத் தொடராகப் பல சலுகைகள் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் குடியேற்ற நாட்டு அலுவலகத்திற்கு ஏற்பட்டது. இச் சலுகைத் தொடரே *1948*இல் முழுமையான தனி அரசுரிமை (Dominion Status)யை இட்டுவந்தது. பெருந் தோட்டக்காரர் இட்ட அடித்தளம் கோப்பி இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் இழந்த காலத்திற் பெரும் இக்கட்டுக்கு உட்பட வேண்டியிருந்தது.

கோப்பிப் பயிர்ச் செய்கைச் சமூகத்தினால் பேணி வளர்க்கப்பட்ட பதிலி அரசாங்க முறைக் கோட்பாடு இலங்கை மக்களுக்குப் புதிதாக இருந்தது. ஆனால் அதன் நன்மைகளை விரைவில் உணர்ந்தார்கள். பதிலி அரசாங்க முறைக்கும் வாக்குரிமைக்குமான கோரிக்கைகளைப் போல விரைவிற் பரவக் கூடிய 'தொற்று நோய்கள்' மிகச் சிலவே. எனவே, இறுதியில் அரசியல் தன்னாட்சிக்கான பொது மக்களியக்கமாக மாறிய இயக்கத்தைப் பெருந்தோட்டச் செய்கையாளரே விருப்பமில்லாது தொடக்கி வைத்தனர். ஆகவே எண்ணங்களை வெளியிடும் பழைய முறையான ஆயுதப் போரிற்குப் பதிலாகச் சட்ட சபையில் கேட்கும் மக்கள் குரலாகிய புது முறையை அமைத்துத் தந்தமை, வர்த்தக விவசாயம் தற்கால இலங்கையை அமைப்பதற்குச் செய்த சிறந்த தொண்டு ஆகும்.

கோப்பித் தொழிலின் எழுச்சியும், வீழ்ச்சியும், அதன் காலத்தில் எழுந்த பலதரப்பட்ட பிரச்சினைகளும், அவற்றுக்குக் காணப்பட்ட தீர்வுகளும், ஆகியன யாவும் சேர்ந்து இலங்கையின் உள்நாட்டு மக்கள் மீது புரட்சிகரமான விளைவுகளை உண்டாக்கின. இவ் விளைவுகளிற் சில மேற் குறிக்கப்பட்டுள்ளன. எண்ணற்ற பல முக்கியமான விளைவுகள் இனிமேற் கூறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிழைப்பூதிய விவசாயம் வர்த்தக விவசாயமாக மாறல்:**

1850ஐ அடுத்த பத்தாண்டின் நடுப் பகுதியிற் கூட உழவர்கள் பணம், ஆதாயம் சந்தைகள் முதலியவற்றையும் அவற்றின் தாற்பரியங்களேயும் உணரத் தலைப்பட்டு விட்டனர், என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. பலர், பெருந் தோட்டங்களீட்டிய வெற்றியை உணரக் கூடிய வியாபார மனப்பக்குவம் அடைந்தவர்களாகத் தமது எடா கூடமான பழைய முறைகளை விட்டு, ஐரோப்பியப் பெருந் தோட்டக்காரன் காட்டிய சிக்கனத்தையும் ஆட்சி முறைகளேயும் பின்பற்றத் தொடங்கினர்.

பிழைப்பூதிய விவசாயம் இங்ஙனம் அதிவிரைவில் வர்த்தக விவசாயமாக மாறியது. 1850க்கும் 1870க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கோப்பியின் கீழ் இருந்த 130,000 ஏக்கர் நிலத்தில் 50,000 ஏக்கர் உழவரது உடைமை எனக் கணக்கிடப்பட்டது. இப்பரப்பு மொத்தக் கோப்பி விளைவின் ஐந்தில் ஒன்றிலிருந்து காற்பங்களவிற்குப் பொறுப்பாக இருந்தது என்றும், அதிலிருந்து ஏற்பட்ட வருமானம் ஆண்டுக்கு 250,000 பவுனுக்கும் 300,000 பவுனுக்கும் இடையில் இருந்தது என்றும் கூறப்படுகிறது.

உழவருக்கு இதுவரை முக்கியமற்றதாக இருந்த பொருளாதார நிகழ்ச்சிகளைப் பற்றிய நோக்கு ஒன்றன் வளர்ச்சி இங்கு விளக்கப்பட்டு உள்ளது. பொருளாதாரத் தனிமைக் கோட்பாடு (Economic Individualism) வளர்ந்து கொண்டு இருந்தது தெளிவு ஆகின்றது. வீதிகளையும் புகை வண்டிப் பாதைகளையும் நீட்டியதும், "கோப்பிக் காய்ச்ச"லோடு இலங்கையுள் சொரிந்த பணமும், கூலி வேலை செய்ய இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர் இலங்கையின் அதிக பிற்போக்கான பகுதிகளில் குடி ஏற்றப்பட்டமையும் இவ் வளர்ச்சியைத் துரிதப்படுத்தின.

**நடுத்தர வகுப்பு:**

பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் வாய்ப்பும் விரிவு அடைந்தமை, நிருவாக அமைப்பின் விரிவை அவசியமாக்கிற்று. புதிய பதவிகளை ஆக்கவேண்டி இருந்தது; புதிய இலாகாக்களை நிறுவவேண்டி இருந்தது; உயர்ந்த பதவி வகிப்பதற்கு உத்தியோகத்தர்கள் வழக்கமாக இங்கிலாந்தில் இருந்து வரவழைக்கப்பட்டனர்; பிற பதவிகள் வகிப்பதற்கு உள்நாட்டு மக்கள் தெரிவுசெய்யப்பட்டனர். "வெண்சட்டை'' (White Collared) வேலைக்காரரையும், சிறிய உத்தியோகத்தரையும் கொண்ட வகுப்பு ஒன்று தோன்றிற்று; ஆங்கில அறிவு ஒன்றே இவர்களுக்கு இப் பதவிகள்பால் உரிமை கொடுத்தது.



இளமக்கள் கல்வியில் பணம் செலவிடுவதால் ஏற்படும் நல்விளைவுகளை உணர்ந்த இப் புதிய சமூகவகுப்பு, இருபத்தைந்து ஆண்டுகளுக்குள், மேல் நாட்டில் இருந்த உத்தியோகத்தருக்கு இணையான சட்டவல்லுநர், வைத்தியர், ஆசிரியர் ஆகிய உயர் தொழிலுக்கு உரிய மனிதரைத் தம் மத்தியிலிருந்து தோற்றுவித்தது.

அதேசமயத்தில், இலங்கையிலுள்ள முற்போக்குள்ள குடும்பங்கள் சில வர்த்தகத் தொழிலில் இறங்கின. சிலர் போக்குவரத்துச் செயலாளராகவும் (Transport agent), சிலர் பொதுவாக வர்த்தகர்களாகவும், வேறுசிலர் விஞ்ஞான முறையில் கோப்பி வளர்ப்போர் ஆகவும் ஆயினர். அவர்களும் விரைவில் தமது மக்களின் கல்வியில் கவனஞ்செலுத்தி, அதனால் வைத்தியம், சட்டம், கல்விக் கழகப்படிப்பு (Academic learning) ஆகிய துறைகளுக்குள் நுழைந்த மாணவர் எண்ணிக்கையைப் பெருக்க உதவினர்.

தம்முள் விரிந்த வேறுபாடுகளை உடைய எழுத்துவினைஞன் (Clerk), வைத்தியன், வர்த்தகன், பெருந் தோட்டக்காரன், சட்டவல்லுனன் ஆகிய பிரிவுகள் இலங்கையின் நடுத்தர வகுப்பாகப் பின்னப்பட்டன. கடந்த காலத்திற் காணப்படாத பொருளாதார அக்கறை, அரசியல் நோக்கங்கள் ஆகியவற்றேடும் இலங்கையின் சமுதாயச் சூழலுக்குப் புதியதாகவும் இருந்த இம் மத்தியவகுப்பு, இலங்கை வரலாற்றின் நவீன காலத்தின் தெளிவான தனிப்பட்ட அம்சமாக அமைகின்றது.

வீதிகளுடனும் புகைவண்டிப் பாதைகளுடனும் வர்த்தக விவசாயத்துடனும், வளரும் பணப் பொருளாதாரத்துடனும், புதிய வகுப்புகளுடனும், அரசியல் இயக்கத்துடனும், மாற்றமடையும் சமூகப் பொருளாதார மதிப்புகளுடனும் 1900இல் விளங்கிய இலங்கை, 1830ஆம் ஆண்டில் இருந்த இலங்கையிலிருந்து வேறுபட்டது. இவ் வேறுபாடு இற்றைக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னைய வேறுபாட்டிற்கு இணையானதெனலாம். முதலாளித்துவத்தின் வருகையால் தொடக்கப்பட்ட புதிய சக்திகள் ஆக எழுபது ஆண்டுகளுக்கே இயங்கியிருந்தன. எனினும் அக் குறுகிய காலத்தில் அவை நெடுங்காலமாக நிலவிப் பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்த பந்தங்கள் யாவையும் தகர்த்துவிட்டன. அவைகள் ஆக்கிய மாற்றங்கள் அடிப்படையானவை. எனவேதான் பொருளாதார ஆசிரியன் இக்காலப்பகுதிக்குத் தனிப்பெயர் தேடுவது நியாயமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் 3

# *இலங்கை அரசியல் வளர்ச்சியின் பொருளாதாரப் பின்னணி

— ம. இராசநாயகம் அவர்கள் —

அரசியல் வளர்ச்சியின் அடிப்படை பொருளாதார வளர்ச்சியே என்ற கூற்றின் உண்மை எவ்வாறு இருப்பினும் இலங்கையைப் பொறுத்தமட்டில் அதன் உண்மையை முற்றாக மறுக்க முடியாது. இலங்கையின் அரசியல் வளர்ச்சி அதன் பொருளாதார வளர்ச்சியை ஒட்டியதாகவே உள்ளது. சிலவேளைகளில் அரசியல் மாற்றம் பொருளாதார மாற்றத்துக்கு ஏதுவாக அமைந்திருந்தாலும் பெரும்பாலும் பொருளாதார மாற்றமே அரசியல் வளர்ச்சியிலும் அரசியற் சீர்திருத்த இயக்கத்திலும் மாற்றம் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் இலங்கையில் தற்காலப்பகுதி 1833க்குப் பின்னரே தொடங்குகின்றது. பொருளாதாரத்துறையில் 1833க்குமுன் இலங்கை மானிய முறைப் பொருளாதார அமைப்புடையதாக இருந்தது; ஆட்சியாளர் வர்த்தகத்திற் கவனம்செலுத்தியபோதும் மக்கள் வாழ்க்கை முறை வர்த்தகத்தினாற் பாதிக்கப்படவில்லை. 1833க்கு முன் இலங்கையில் தன்னிறைவுப் பொருளாதார அமைப்பே இருந்தது. இலங்கை வரலாற்றின் தொடக்கத்திலிருந்து 1833 வரை இலங்கைப் பொருளாதாரம் தன்னிறைவுள்ளதாக இருந்தது. அரசியல்துறையில், மக்கள் அரசியலில் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் 1833க்கு முன் இருக்கவில்லை; நாடு ஆட்சியாளர் உடைமையாகவே இருந்தது; ஆட்சி, உடைமையாளர் நலனுக்காகவே இருந்தது. இக்கொள்கை 1833இல் மறையத் தொடங்கியது. 1833இல் இலங்கை மக்களுக்கு ஆட்சியில் எவ்விதப் பங்கும் கொடுக்கப்படாவிடினும், உடைமையாளரது பதிலியாகிய தேசாதிபதி தனியாட்சி நடத்துவது தவறென்பதும், அவருடன் சட்டசபை ஒன்று இணைக்கப்பட வேண்டும் என்பதும், அச்சட்டசபையில் இலங்கைச் சமூகத்தினரின் பதிலிகள் இருக்கவேண்டும் என்பதும் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டன. எனவே இலங்கையின் தற்காலப்பொருளாதார வளர்ச்சியும் அரசியல் வளர்ச்சியும் 1833இல் தொடங்குகின்றன என்று கூறுவது பிழையாகாது.

*The Economic background to the political development of Ceylon by M. Rasanayagam Esq.



1833 இல் பெரும் மாற்றம் ஏற்பட்டதற்கு ஏது என்ன? இலங்கையின் வருமானத்தைவிட இலங்கையில் உண்டான செலவு அதிகமாக இருந்தது. இதனால் இங்கிலாந்து மக்களின் வரிப்பணத்தில் ஒருபகுதி இலங்கையிற் செலவானது. எனவே கிழக்குப் பகுதியில் இருந்த மோரிஷஸ் தீவுகள் போன்ற முடிக்குரிய குடியேற்றப் பகுதிகளில் ஏற்பட்ட பணநெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் காண அனுப்பப்பட்ட குழுவினர் இலங்கைக்கும் வந்து நிலைமையைப் பரிசீலனை செய்யுமாறு பணிக்கப்பட்டனர். இக்குழுவின் தலைவர் கோல்புறூக் ஆவர். கோல்புறூக்கும் கமறனுமே இலங்கைக்கு வந்தனர். இவர்களது சிபாரிசினால் பல மாற்றங்கள் உண்டாயின. இம்மாற்றங்களின் கூட்டு விளைவாகத் தற்காலம் தொடங்கிற்று. பொருளாதார நெருக்கடி பொருளாதாரத் துறையில் மாத்திரமல்லாது அரசியல் துறையிலும் மாற்றம் உண்டாவதற்கு ஏதுவாயிற்று.

பொருளாதாரத்துறையில் ஒரு கட்டில்லாத பொருளாதார அமைப்பையும், அரசியல் துறையில் அதற்கேற்ற அரசியலமைப்பையும் ஏற்படுத்துவதே கோல்புறூக் குழுவினரின் நோக்கம். அவர்கள் வரவு செலவைச் சீர்படுத்துவதுடன் நிற்கவில்லை. பொருளாதார அரசியல் அமைப்பில் பாரதூரமான மாற்றங்கள் பலவற்றை உண்டாக்கும்படி சிபாரிசு செய்தனர். வர்த்தகம் அரசினரின் ஏகபோக உரிமையிலிருந்து விடுவிக்கப்பட்டது. இதனால் தனியார் வர்த்தகத்திலும் வர்த்தக விவசாயத்திலும் ஈடுபடக்கூடிய நிலை உருவாதல் சாத்தியமாயிற்று. ஊழிய வேலைமுறை-இராசகாரியம்—ஒழிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளைச் சிபாரிசு செய்து கோல்புறூக் குழுவினர் இலங்கையில் ஒரு பெருந்தோட்ட வர்த்தகப் பொருளாதார அமைப்பு உண்டாவதற்கு வழிவகுத்தனர்.

புதிய கட்டில்லாப் பொருளாதார அமைப்புக்குப் பழைய முடிக்குரிப நாட்டு ஆட்சி முறை பொருத்தமானதல்ல. எனவே அரசியலமைப்பும் மாற்றப்பட்டது. தேசாதிபதி தனியாட்சி செய்வது பிழை என்ற கொள்கையைக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். இவர்களது சிபாரிசின் மேல், சட்ட சபை ஒன்று நிறுவப்பட்டது. இச் சட்ட சபையில் ஒன்பது உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினரும், ஆறு உத்தியோகப் பற்றற்ற உறுப்பினரும் இருந்தனர். உத்தியோகப் பற்றற்ற உறுப்பினரில் மூவர் ஐரோப்பியர், ஒருவர் பறங்கியர், ஒருவர் சிங்களவர், ஒருவர் தமிழர். பதிலி முறை (Representative System) முதன் முதல் இலங்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இச் சட்ட சபையின் அதிகாரம் பெரிதன்று. தேசாதிபதியின் பிரேரணைகளை ஆராய்வதே இதன் வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட சபையின் முடிவை மீறும் அதிகாரம் தேசாதிபதிக்கு இருந்தது. ஆனால் சட்ட சபையின் முடிவை மீறினால் அதற்கான காரணங்களைத் தேசாதிபதி குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு விளக்க வேண்டும். எனவே சட்ட சபை, இலங்கை மக்களுக்கு ஆட்சியில் ஒரு பங்கு கொடுத்தது என்பதை விட, அது குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் அதிகாரத்தைப் பலப்படுத்தியது என்பதே சரி. என்றாலும் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் அதிகாரம் பலப்பட்டது இலங்கை மக்களது பதிலிகளாலேயே. எனவே தேசாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை மக்களது பதிலிகளுக்கு ஒரு பங்கு இருந்தது. இதுவே 1833 இல் அரசியலில் ஏற்பட்ட பெரிய மாற்றம். சட்ட சபையின் உறுப்பினர் பெரும்பாலும் ஐரோப்பியராகவும், பறங்கியராகவும் இருந்தாலும் இலங்கைச் சமூகத்தினரின் பதிலிகள் சட்ட சபை உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது கொள்கையளவிலாவது ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலில், வர்த்தகரின் பதிலிகளே சட்ட சபையில் இருந்தனர். ஆனால் கோப்பிப் பயிர்ச் செய்கை வளர்ச்சியுடன் வர்த்தகரின் பதிலிகள் பெரும் தோட்டச் சமூகத்தினர் பதிலிகளுக்கு வழி விட்டனர். கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி இலங்கை அரசியலிற் பெரிய மாற்றத்தைச் செய்தது. கோப்பிப் பயிர்ச் செய்கை இலங்கையின் மத்திய பகுதியிலேயே வளர்ச்சி அடைந்தது. கோப்பிப் பகுதிகளை வர்த்தக நகரான கொழும்புடன் இணைப்பதற்குப் போக்கு வரத்துத் தொடர்புச் சாதனங்கள் வேண்டியவாயிருந்தன. இச் சாதனங்கள் அமைப்பதற்குப் பணம் வேண்டியிருந்தது. 1846 இல் பொருளாதார மந்தம் ஏற்பட்டதனால் அரசினர் வீதிகள் மீது அதிக பணம் செலவு செய்ய விரும்பவில்லை. அவர்கள் இலங்கையில் படைகள் வைத்திருந்தனர். இப் படைகளை வைத்திருப்பதற்கு வேண்டிய பணம்—போர்ச் செலவு —இலங்கை வருமானத்திலிருந்தே பெறப்படல் வேண்டும் என்பது அரசினரது எண்ணம். போர்ச் செலவுப் பணம் இலங்கையின் வருமானத்திலிருந்து எடுக்கப்பட்டால், வீதிகளமைப்பதற்கு வேண்டிய பணம் கிடைக்காது. எனவே பெருந் தோட்டக்காரரின் பதிலிகள் — சட்ட சபையிலிருந்த உத்தியோகப் பற்றற்றவர் — இதனை எதிர்த்தனர். போர்ச் செலவுக்கு இலங்கை வருமானம் பயன் படுத்தப்படாதிருக்கச் செய்யவும், வீதி அமைப்பதற்கு வேண்டிய பணம் பெறுதற்கும், பெருந் தோட்டக்காரரின் பதிலிகளுக்கு வரவு செலவுத் திட்டத்தின் மீது அதிகாரம் இருக்க வேண்டும். இவ் வதிகாரத்தைப் பெறுவதற்காகப் பெருந் தோட்டக்காரரின் பதிலிகள் — உத்தியோகப் பற்றற்ற சட்ட சபை உறுப்பினர்—ஓர் அர



சியல் இயக்கத்தைத் தொடக்கினர். இவர்களது கோரிக்கைகளில் முக்கியமானவை இரண்டு:

(I) சட்டசபைக்கு வரவு செலவுத் திட்டத்தின் மீது அதிகாரம் இருக்க வேண்டும்.

(II) சட்ட சபையில் உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினரும் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினரும் சம எண்ணிக்கையினராக இருக்க வேண்டும்.

அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் பெற்று அதனால் போக்கு வரத்து — தொடர்புச் சாதனங்களிற் கூடிய செலவு செய்யப் பணம் பெற எண்ணினர்.

எனவே பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய வகுப்பினர் — பெருந்தோட்டக்காரர் — தோன்றினர். இவ்வகுப்பினரின் பொருளாதார ஆவல் அரசியல் வளர்ச்சிக்கு அடிகோலியது. பொருளாதார வளர்ச்சியையும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரின் பொருளாதார ஆவல்களையும் மையமாகக் கொண்ட இவ்வியக்கம் காலம் செல்லச் செல்லப் பல மாற்றங்களை அடைந்து இறுதியில் அரசியல் தன்னாட்சி கோரும் தேசிய இயக்கமாக மாறியது. இவ் வியக்கம் எவ்வாறு இத்தகைய மாற்றங்களை அடைந்ததென்பதையும் இம்மாற்றங்களின் பொருளாதார அடித்தளம் எது என்பதையும் இக்கட்டுரையின் எஞ்சிய பகுதி காட்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் உண்மையான இலங்கைத் தலைவர்கள் அரசியல் வானில் காட்சி அளித்தனர். முதலில் தோன்றிய இலங்கைத் தலைவர்கள் பறங்கியரே. ஸ்ருவார்ற் (Stuart) மோர்கன் (Morgan) போன்றவர்கள் தேசிய இயக்கம் என்று சொல்லக்கூடியதோர் அரசியல் இயக்கத்துக்கு வித்திட்டனர். எனவே இலங்கையருக்கு ஆட்சியிற் பங்கு வேண்டும் என்று பறங்கியரும், தமது பொருளாதார நலனுக்காக வீதிகள் அமைப்பதற்குப் பணம் வேண்டிய பெருந் தோட்டக்காரரும் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான இயக்கத்தை நடத்தினர். இவ்வியக்கம் அரசினருக்குக் கவலை கொடுத்தது. இதனை முறியடிக்க அரசினர் வழி தேடினர். பொருளாதார நோக்கத்துடன் இவ்வியக்கத்திற் பங்கு கொண்ட பெருந் தோட்டக்காரரது தேவைகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களை இவ்வியக்கத்திலிருந்து விலகச் செய்தனர். பிரித்தாளும் முறையில் ஆங்கிலேயர் கைதேர்ந்தவர்களே! தேசாதிபதி உவோர்ட் வீதிகளில் பணம் செலவு செய்தார். கூலிகளை இடப் பெயர்வு செய்ய உதவி புரிந்தார். நில விற்பனை செய்தார். இத்தகைய நடவடிக்கைகளால் உவோர்ட் பெருந் தோட்டக்காரரது ஆதரவைப் பெற்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அரசியலியக்கத்திலிருந்து விலகச் செய்தார். இயக்கம் பிளக்கப்பட்டது. இப்பிளவினால் இயக்கம் முறிந்தது. அத்தோடு அரசியற் சீர்திருத்த இயக்கத்தின் முதற் பருவம் முடிவடைந்தது.

சில ஆண்டுகளில் மறுபடியும் எதிர்ப்பியக்கம் தொடங்கிற்று. புகை வண்டிப் பாதை அமைப்பு நிறுத்தப்பட்டதனாற் பெருந்தோட்டக்காரர் கவலை கொண்டனர். புகைவண்டிப் பாதை அமைப்பதற்கு வேண்டிய பணம் பெருந்தொகையினதாக இருந்ததால் அரசினர் புகை வண்டிப் பாதை அமைப்புத் திட்டத்தைக் கைவிட்டனர். இதனால் எதிர்ப்பியக்கம் உக்கிரம் பெற்றது. போர்ச் செலவுப் பிரச்சினை மறுபடியும் முன்னணிக்கு வந்தது. உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர் பலர் சட்ட சபையிற் சமுகம் அளிக்காதிருந்த சமயமொன்றில், உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் அரசாங்கத்தின் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினர். அரசினர் இதைக் கவனிக்காது போர்ச் செலவுப் பங்கைக் கூட்டினர். உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர், சட்ட சபை உறுப்பினர் பதவியைத் துறந்து "இலங்கை நேசக் குழு" (The Ceylon League) என்ற சங்கத்தை அமைத்தனர். இதுவே இலங்கையில் முதன்முதல் தோன்றிய அரசியற் குழுவாகும். இக்குழுவினர் உத்தியோகப் பற்றற்றவர்கள் பணத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற வேண்டும் என்று கோரினர். கணிசமான அளவுக்கு அரசினருக்கு எதிரான பொதுசன எண்ணத்தை உண்டாக்கினர்.

தேசாதிபதி றொபின்சன் பேரரசின் நலனுக்கும் (Imperial interest) முதலாளித்துவ நலனுக்கும் (Capitalist interest) உள்ள முரண்பாட்டைத் தீர்ப்பதால் இயக்கத்தின் முதுகெலும்பை முறிக்கலாம் என்று எண்ணினார். பேரரசுக் கோட்பாட்டுக்கும் (Imperialism) முதலாளித்துவத்துக்கும் உள்ள முரண்பாட்டைத் தீர்த்து, முதலாளிமாருக்குச் சலுகைகள் கொடுப்பதன் மூலம் முதலாளிமாரை அரசியல் இயக்கத்திலிருந்து விலக்கி அவ்வியக்கத்தை முறியடிக்க முடியும் என்ற உண்மையை றொபின்சன் நன்கு அறிந்திருந்தார். அவர் புகை வண்டிப் பாதை அமைப்பதற்குப் பெருந் தொகையான பணம் செலவு செய்தார். பெருந்தோட்டக்காரர் அரசியலியக்கத்தைக் கைவிட்டனர். 1870-ம் ஆண்டளவில் இலங்கை நேசக் குழு ஓர் அரசியற் பிணமாகத் திகழ்ந்தது.

இதுவரையில் இலங்கை அரசியலியக்கத்தினரின் கோரிக்கைகளை மறுப்பதற்குப் பிரித்தானிய அரசினர் போதிய காரணங் காட்டக் கூடியவர்களாக இருந்தனர். இவ்வியக்கத்தினர் தமக்குக் கூடிய அதிகாரம் கோரினரேயன்றி அரசியலமைப்பின் அடிப்



படையை மாற்றக் கோரவில்லை. அதாவது, சட்ட சபைக்கு அதிகாரம் வேண்டினரேயன்றிச், சட்ட சபை மக்களின் அதிகாரத்துக்கு உட்பட வேண்டும் என்று கேட்கவில்லை. எனவே இவர்களுக்கு அதிகாரம் அளிப்பது சில குழுவாட்சிக்கு (Oligarchy) வழி வகுக்கும் என்றும் இலங்கை மக்கள் நலனுக்கு முரணான செய்கை என்றும், பிரித்தானிய அரசினர் கூறக் கூடிய நிலையில் இருந்தனர்.

1875க்குப் பின்னர்தான் அரசியல் இயக்கம் செவ்வையான தேசிய இயக்கமாயிற்று. பொருளாதார வளர்ச்சியே இம் மாற்றத்துக்குப் பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. 1870 இல் கோப்பித் தொழில் ஒருவித நோயால் முறிவடைந்தது. கோப்பி முறிவிற்குப் பின் சில காலம் சிங்கோனா பயிரிடப்பட்டது. இதன் பின்னர் தேயிலை பயிரிடப் பட்டது. புகைவண்டிப் பாதைப் பிரச்சினையில் பெருந் தோட்டக்காரரும் இலங்கை மக்களும் பொருளாதாரக் காரணத்தினால் பிரிந்தனர். பெருந் தோட்டக்காரர் புகை வண்டிப்பாதை மத்தியமாகாணப் பகுதியிலேயே அமைக்கப்பட வேண்டும் என்றனர். இலங்கை மக்களது உழவுத் தொழிலுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டுமென்றனர் இலங்கைத் தலைவர்கள். 1876இல் இலங்கைப் பயிர்த் தொழிற் சங்கம் (The Ceylon Agricultural Association) கூட்டப்பட்டது. தென் மாகாணத்திலும், நீர்கொழும்பு, சிலாபப் பகுதிகளிலும் இருந்த நில உடைமையாளர் கரையோரப் பாதையே உழவுத் தொழிலுக்கு உதவியாக இருப்பதாற் கரையோரப் பாதையையே முதலில் அமைக்க வேண்டும் என்றனர். அரசினர் பெருந்தோட்டக்காரர் பக்கத்திலேயே இருந்தனர். இதனால் அரசியலியக்கம் முற்றாக இலங்கையர் மயமாகியது.

அரசியலியக்கம் முற்றும் இலங்கையர் மயமானதுக்கு இன்னும் சில பொருளாதாரக் காரணங்கள் காட்டலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இலங்கை மக்களிற் சிலரும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். சிலர் தெங்குப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். சிலர் தேயிலை றப்பர் போன்ற பயிர்களைப் பயிரிட்டனர். இலங்கை மக்களிடையே முதலாளிகள் சமூகம் ஒன்று தோன்றியது. இவர்கள் தாமும் ஓர் ஆக்க வகுப்பினர் (Productive class) என்று உணரத் தலைப்பட்டனர். தமக்கும் அரசினர் உதவி அளிக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். அரசினர் ஐரோப்பியப் பெருந்தோட்டக்காரருக்கே உதவி அளிப்பதால் இவர்கள் மனமுடைந்தனர். இவர்களும் அரசியல் இயக்கத்திற் சேர்ந்து அதனைப் பலப்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்ததாலும் கல்வி பரவியதாலும் இலங்கையில் ஒரு நடுத்தர வர்க்கம் வளரத் தொடங்கிற்று. இவ்வர்க்கத்தினர் ஆங்கிலம் கற்றிருந்தபடியால் நிருவாகத்தில் தமக்கும் பதவிகள் வேண்டும் என்றனர். ஆனல் இவர்களுக்குத் தாழ்ந்த பதவிகளே கொடுக்கப்பட்டன. இதனல் நடுத்தர வர்க்கத்தினர் அரசினருடன் அதிருப்தி கொண்டனர். இவர்களும் அரசியலியக்கத்திற் சேர்ந்தனர்.

மேலே காட்டிய பொருளாதார வளர்ச்சிகளால் இருபதாம் நூற்ருண்டில் ஐரோப்பியர் அரசியலியக்கத்தை முற்ருகக் கைவிட்டனர். பெருந்தோட்டக்காரர் சங்கம் (The Planters Association) அரசாங்கத்தை ஆதரிக்க முற்பட்டது. பெருந் தோட்டக்காரர் ஏறக்குறைய முற்ருக ஐரோப்பியராக இருந்தபடியால் அவர்கள் ஆங்கிலேயராட்சி நிலைப்பதை விரும்பினர்.

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இரண்டு வகுப்பினர் அரசியலியக்கத்திற் பங்கு கொண்டனர்:

(i) பொருளாதாரத் துறையில் நேரங் கடந்து காட்சியளித்த இலங்கை முதலாளிகள்

(ii) உத்தியோகத்தர்.

முதலாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் அரசினர் ஐரோப்பிய முதலாளிகளுக்கு மட்டுமன்றித் தமக்கும் பொருளாதார உதவி அளிக்க வேண்டும் என்று கோரினர். இரண்டாவது வகுப்பினர் நிருவாக உத்தியோகங்கள் வகிப்பதற்குத் தாமும் ஐரோப்பியரைப்போலத் தகுதி வாய்ந்தவர்கள் என எண்ணினர். இவ்விருவகுப்பினரையும் பொதுவாக நடுத்தர வர்க்கத்துள் அடக்கலாம். இலங்கை நடுத்தர வர்க்கத்தினர், அரசியல் இயக்கத்தை முற்ருகத் தமது கைக்குள் எடுத்துக்கொண்டனர். பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவுக்கு முன்னேறி இருந்த படியால் நடுத்தர வர்க்கம் நன்ருகப் பலப்பட்டது. நடுத்தர வர்க்கம் பலப்பட்டதனல் இவ்வர்க்கத்தினரால் நடத்தப்பட்ட அரசியலியக்கமும் பலப்பட்டது இலங்கை அரசியலியக்கம் பலமான தேசிய இயக்கமாயிற்று. இலங்கைத் தேசிய சங்கம் கீழ்நாட்டு உற்பத்தியாளர் சங்கம் (Low Country Producers' Association), யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம் முதலிய சங்கங்கள் தோன்றின. இவ்வியக்கத்தினரின் பல கோரிக்கைகளையும் பின் வருமாறு வகுக்கலாம்:

(i) பதிலிகள் நில வாரியாகத் தெரிவு செய்யப்படவேண்டும்.

(ii) கல்வி கற்றவருக்கே தெரிவு செய்யும் உரிமை இருக்க வேண்டும்.



(iii) உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினருக்கும் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினருக்கும் சம அதிகாரம் இருக்க வேண்டும்.

(iv) நியமிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் இருக்க வேண்டும்.

(v) நிருவாகச் சபையில் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினரும் இருக்கவேண்டும்.

தேசாதிபதி மக்கலம் இக்கோரிக்கைகளை எதிர்த்தார். இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் நடுத்தர வர்க்கத்தினர் அதிகாரம் பெறுவர் என்றும், நடுத்தர வர்க்கத்தினர் நலனும் இலங்கைப் பொது மக்கள் நலனும் ஒரு தன்மையவான அல்ல என்றும் அவர் கூறினர்.

*1910*-ம் ஆண்டில் குறு-மக்கலம் சீர்திருத்தங்களால் கல்வி கற்ற இலங்கையரும், ஐரோப்பியரும், பறங்கியரும் தமது பதிலிகளைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றனர். என்ருலும் தெரிவு நிலவாரியான தெரிவு அல்ல; இனவாரியான தெரிவே. மேலும் சட்ட சபையில் உத்தியோகப் பற்றுள்ளவர்களது பலம் குறையவில்லை.

*1914*-ம் *1915*-ம் ஆண்டுகளுக்குப் பின்னர் தேயிலை றப்பர் தெங்குப் பொருட்களின் விலை குறைந்தது. பெருந்தோட்டக்காரர் இன்னல்களுக்கு ஆளாயினர். இதனல் அரசியலியக்கம் கூடிய பலம்பெற்றது. உழவுத் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தை இலங்கைத் தலைவர்கள் உணர்ந்தனர். அவர்கள் உழவருக்கு நீர்ப்பாசன உதவி அளிக்கவேண்டும் என்றனர். இவர்களும் அரசியலியக்கத்தைப் பலப்படுத்தினர்.

*1915*-ம் ஆண்டு இனக்கலகங்களைப் பிரித்தானிய அரசினர் அடக்கிய முறை சிங்களத் தேசியத் தலைவர்களுக்கு வெறுப்பளித்தது. இவர்கள் கூடிய உக்கிரத்துடன் அரசாங்கத்தை எதிர்த்தனர். இதனலும் அரசியல் இயக்கம் பலமடைந்தது.

இருபதாம் நூற்ருண்டின் இரண்டாம் பத்தாண்டின் முடிவில் இலங்கை அரசியற் சீர்திருத்த இயக்கத்தில் கவலைக்குரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டது. இம்மாற்றத்துக்கும் பொருளாதாரக் காரணமே முக்கியம் என்று கொள்ளவேண்டும். *1910*-ம் ஆண்டுச் சீர்திருத்தங்களின் கீழ் கல்விகற்ற இலங்கையர் பதிலி ஒரு தமிழராய் இருந்தபடியால் சட்ட சபையில் தமிழரும் சிங்களவரும் சம பலம் உடையவராய் இருந்தனர். இந்த நிலை நீடிக்க வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் எண்ணினர்கள். சட்ட சபையில் தமிழரும் சிங்களவரும் சம பலமுடையவர்களாக இருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தமிழ்த் தலைவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டின் முடிவளவிற் கேட்டனர். கிறிஸ்தவ மிஷனரிமார்கள் தமது பள்ளிக்கூடங்களைப் பெரும்பாலும் தமிழ்ப் பகுதிகளிலேயே நிறுவியபடியால் சிங்களவரைவிடத் தமிழர் அதிகமாகக் கற்றனர். இதனால் தமிழர் பல உத்தியோகங்களைக் கைப்பற்றினர். தமிழரும் சிங்களவரும் சமபலம் உடையவராக இருந்தாலே இந்த நிலை நீடிக்க முடியும் என்று உணர்ந்த தமிழ்த் தலைவர்கள் தமிழரும் சிங்களவரும் ஒரே அளவு பதிலிகளை உடையவராக இருக்கவேண்டும் என்ற நியாயமற்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடினர். இக்கோரிக்கை இலங்கை அரசியலில் இனத்துவேஷம் புகுவதற்கு ஒரு காரணமாக இருந்தது. பிரித்தாளும் முறையிற் கைதேர்ந்த பிரித்தானிய அரசினர் இத்தகைய இன வாரியான அரசியலுக்கு ஊக்கம் அளித்தனர். தமக்கு உத்தியோகங்கள் வேண்டும், என்பதற்காக இனவாரியாகத் தமிழ்த் தலைவர்கள் சிந்திக்கத் தொடங்கப், பேரரசு நீடிப்பதற்காகப் பிரித்தானியர் இந்த இனவாரியான சிந்தனைக்கு ஊக்கம் கொடுத்தனர். சிங்களத் தலைவர்களது கோரிக்கைகளை விடத் தமிழ்த்தலைவர்களது கோரிக்கைகளுக்குத் தேசாதிபதி மன்னிங் அதிக மதிப்புக் கொடுத்தார்; இதனால் இலங்கை அரசியலியக்கம் பிரிவடைந்தது. தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசியக் காங்கிரசை (The Ceylon National Congress) விட்டு விலகினர்.

இலங்கைத் தேசியக் காங்கிரசின் கோரிக்கைகள் பின்வருமாறு:

1. ஐம்பது உறுப்பினரைக் கொண்ட சட்டசபையில் ஐந்தில் நான்கு பங்கு உறுப்பினர், நிலவாரியாகத் தெரிவு செய்யப்படவேண்டும். பரந்த ஆண் வாக்குரிமையும், குறுகிய பெண் வாக்குரிமையும் இருக்க வேண்டும். சட்டசபைச் சபா நாயகர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

2. வரவுசெலவுத் திட்டத்தின்மீது சட்டசபைக்குப் பூரண அதிகாரம் வேண்டும்.

3. இரட்டை ஆட்சி முறை (Dyarchy) இருக்கக்கூடாது.

4. நிருவாக சபை உறுப்பினரில் அரைப்பங்கினர் நிலவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைச் சட்டசபை உறுப்பினராக இருக்கவேண்டும்.

5. பூரண உள்நாட்டுத் தன்னாட்சி வேண்டும்.



மன்னிங் அரசியலமைப்பின் (1920) கீழ் சட்டசபையில் நிலவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் சிறுபான்மையினராகவே இருந்தனர். சபாநாயகர் தெரிவு செய்யப்படவில்லை. இலங்கைத் தேசியக் காங்கிரசினர் இந்த அரசியலமைப்பைப் பகிஷ்கரிக்கப்போவதாகப் பயமுறுத்தினர். தேசாதிபதி விரைவில் மாற்றம் செய்வதாக வாக்களித்தபடியால் அவர்கள் பகிஷ்கரிக்கவில்லை. எனவே மன்னிங் அரசியலமைப்பு நிரந்தரமாக இருப்பதற்கு ஆக்கப்பட்டதல்ல.

மன்னிங் - டிவொன்ஷையர் அரசியலமைப்பின் (Manning - Devonshire Constitution 1924) கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் பெரும்பான்மையினராக இருந்தனர்; சட்டசபைக் கூட்டங்களில் தேசாதிபதி பங்குபற்ற முடியாது; உத்தியோகப் பற்றற்ற சட்டசபை உறுப்பினரைக் கொண்ட நிதிக்குழுவுக்கு (The Finance Committee) வரவு செலவுத் திட்டத்தின் மீது அதிகாரமிருந்தது; என்றாலும் 1926-ம் ஆண்டிலோ, 1924-ம் ஆண்டிலோ இனவாரியான பதிலித்துவ முறை (Communal representation) ஒழிக்கப்படவில்லை. டொனோமூர்த் திட்டத்தின் கீழ் இனவாரியான பதிலித்துவம் கைவிடப்பட்டது. என்றாலும் இன வாரியான அரசியல் இன்னும் இலங்கையை விட்டு நீங்கவில்லை. இன்னும் இனத்துவேஷத்தின் அடிப்படையாகப் பொருளாதாரக் காரணமே இருக்கின்றது; உத்தியோகம் பெறுவதற்குள்ள போட்டியே இனத்துவேஷத்தைக் கிளறிவிடுகின்றது. இனவாரியான அரசியலின் பொருளாதார அடிப்படையான வேலையில்லாத் திண்டாட்டம் உணவுக்குறைபாடு முதலிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் ஒழிய இலங்கை அரசியல் தூய்மை அடைய முடியாது.

For
BUILDING MATERIALS
and
ESTATE SUPPLIES
**S. B. M. IBRAMSA**
343, 349, Oldmoor Street,
Phone: **79522**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்

# *அமைச்சர்களும் பொதுசனச் சேவையாளர்களும்

— கலாநிதி ஏ. ஜெ. வில்சன் —

நிருவாகமே தற்கால அரசின் மூலச் சத்தாகும். இதற்கென்றே பிரத்தியேகமாகப் பயிற்றப்பட்ட நிபுணர் குழுவால் மட்டுமே இதனைக் கொண்டு நடாத்த முடியும். பாராளுமன்றங்களும் அமைச்சர்களும், ஜனாதிபதிகளும், அரசோச்சியபோதிலும், உண்மையில் பொதுசனச் சேவையே நாட்டை ஆளுகின்றது என்ற கூற்று எழுவதற்கு இதுவே காரணமாகும். நிருவாக யந்திரத்தின் தன்மையை அறிந்திராத தேர்ச்சியற்றவர் குழுவொன்று தற்கால அரசைக் கொண்டு நடாத்தும் ஒரு நிலைமையைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. தற்போக்குக் கொள்கை (Laissez faire) நிலவிய காலமும், பொதுசனச் சேவையானது ஆளும் வகுப்பினரது குழந்தைகளின் சகாய இலாகாவாகத் திகழ்ந்த காலமும் இன்று மலையேறி விட்டன. நேரியல்வாத அரசின் (Possitive state) தோற்றத்தோடு, நிருவாக ஒழுக்கங்களில் ஒரு புரட்சியே உண்டு பண்ண வேண்டியிருந்தது. வாக்குரிமையை விஸ்தரித்ததின் பயனாகத், தற்கால அரசிற் பெரும்பான்மை வகுப்பினராகவுள்ள சலுகைகள் குறைந்தவர்களுக்கும் (Under Privileged) சமூக வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆலைத் தொழில் முறை சடுதியாகப் பரவியதன் காரணமாக, அதிக கட்டுப்பாடுகளும், சமூகச் சட்டங்களும் தேவைப்பட்டன. சுருங்கக் கூறின், தற்கால அரசு கட்டாயமாகத் தன்னையொரு சமூக சேவை அரசாக மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக, அரசாங்க சேவையே தமது தொழிலாகவும், அஃதளிக்கும் வாய்ப்புக்களே தமது வாழ்வின் நீண்ட இலட்சியமாகவும் கொண்ட பொதுசனச் சேவையாளர் கூட்டமொன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சக்கரங்களுக்குக் குளம்பூட்டி, அது தங்கு தடையின்றித் தன்வழியே இயங்க வைப்பது பொதுசன சேவையே யாகும். அரசாங்கத்தைத் தொடர்ந்தியங்கும் ஸ்தாபனமாக வைத்துக் கொள்வது இதுவே. அமைச்சர் கைக் கொண்டுள்ள கொள்கையின் விவேகம், நிறைவு, ஆகியனபற்றி, அவருக்கு ஆலோசனை, எச்சரிக்கை, ஊக்கம், முதலியன அளிப்பவன் பொதுசன சேவையாளனேயாகும். இவ்விடத்தில் பொதுசன

*Ministers and Public Servants
by A. J. Wilson B. A., Ph. D. (Lond)
Lecturer in Political Science, University of Ceylon.



சேவையாளன் பெருமளவிற் செல்வாக்குச் செலுத்தக் கூடியவனாய் இருக்கிறான். இச்செல்வாக்குச் சாதாரண நிகழ்ச்சிக் கிரமத்தில் வந்து சேர்வனவேயன்றி, அதிகார மோகத்தினால் தன்னறிவோடு சேர்க்கப்பட்டனவல்ல. செயலாற்றப்பட வேண்டிய பொதுசனச் சட்டங்கள் பெருமளவினவாக ஆகிவிட்ட காரணத்தால், அரசியலுக்குப் புதியவராகிய அமைச்சரால், சட்டத்தின் பரந்த வெளியமைப்பினை மட்டுமே நிறுவ முடியும். அதன் விவரங்களும், ஏராளமான தற்காலிகக் கட்டளைகளும் பொதுசன சேவையாளனாலேயே நிரப்பப்படல் வேண்டும். இதுவே, தற்கால அரசியலில், பொதுசன சேவைக்கு முக்கிய இடம் அளித்துள்ளது. மேலும், அரசாங்கத்தின் மிக முக்கிய மூலச் சத்தாகிய நிதியியலிலும், வரிகளின் வாயிலாகக் கிடைக்கும் வருமானத்தைப் பொதுசன சேவையே செலவு செய்வதுடன், எவ்வளவு தொகையைத் திரட்டலாம், அவற்றை எங்ஙனம் திரட்டலாம் போன்றனவற்றையும் பெரும்பாலும் அதுவே நிர்ணயிக்கின்றது.

தற்கால அரசியலில், பொதுசன சேவை இத்துணை முக்கிய இடம் வகிப்பதால், இப் பொதுசன சேவையாளருக்கும் அமைச்சர்களுக்கும் இருக்க வேண்டிய உறவு முறையையும், இப்போது இருக்கும் உறவு முறையையும் பரிசீலனை செய்தல் பயனுடையதாம். மந்திரி முறைக்கமைந்த (Cabinet System) அரசாங்கத்தின் கீழ், நிருவாகம் சம்பளம் பெறும் உத்தியோகத்தரது செயலாகவும், கொள்கையமைப்பு அரசியல் வாதியான அமைச்சரின் தனிப் பொறுப்பாகவும்,ஒருவகையான தொழிற்பிரிவு(Division of Labour) காணப்படுகிறதெனப் பொதுவாகக் கூறலாம். இருப்பினும் நடைமுறையில் இத்தகைய பாரதூரமான பிரிவேதுமில்லை. நன் முயற்சியுள்ள வொரு பொதுசன சேவையாளன், தனது அமைச்சர் கொள்கையளவில் ஒரு தீர்மானம் செய்வதற்கு உதவி செய்வான்—செய்யவும் வேண்டும். தனது அரசியல் மேலதிகாரியாகிய அமைச்சர், முயற்சி குன்றியவராகவோ, அல்லது, தான் பிரதிநிதிக்கும் கட்சியின் கொள்கைக்கமையத் தமது இலாகாவிற்கு திட்டமேதும் தீட்டும் வன்மையற்றவராகவோ, இருக்குங்கால், ஒரு திட்டம் தீட்டி அவருக்கு உதவ வேண்டிய அவசியம் சம்பளம் பெறும் உத்தியோகத்தனுக்கு ஏற்படலாம். தனது அரசியல் மேலதிகாரியின் மன நிலையைக் கற்று உணர வேண்டியது சம்பளம் பெறும் உத்தியோகத்தனின் கடமையாகும். அவன் காலப் போக்கில் தனது அமைச்சரது தேவைகளை அறிந்து கொண்டு, அவரது விருப்புக்களை நிறைவேற்ற முயல வேண்டும். அதே போல, அமைச்சரும், தனது சம்பளம் பெறும் உத்தியோகத்தனுக்கு நிருவாகத் துறையில் உதவ முடியும். தீர்மானங்களைச் செயற்படுத்தலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையை நிருவாகஞ் செய்தலும் பொதுசன சேவையாளனின்
செயலாகும். இப் பணியில், அவன் கொள்கைகளைச் சரியான
முறையில் விளங்கிக் கொள்வதற்கு, அமைச்சரின் உதவி அத்தியா
வசியமாகிறது. சில சமயங்களில், அமைச்சரவை நிறுவிய வழிக்
குப் புறம்பாகக் கொள்கை நிருவாகம் செய்யப்படுங்காலை அத
னைத் தடுக்க வேண்டிய அவசியம் அமைச்சருக்கு ஏற்படலாம்.
எனவே கோட்பாட்டின்படி, கொள்கைக்கும், அதன் நிருவாகத்
திற்குமிடையே ஒருவித பிரிவு இருக்க வேண்டிய போதிலும்,
நடைமுறையில் இரு கூறுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு
கள் உள. உண்மையில், அமைச்சருக்கும், பொதுசன சேவையாள
ருக்கும் இடைப்பட்ட கூட்டுறவின் விளைவே அரசாங்கமாகும்.

சேர். வாறன் பிசர் (Sir Warren Fisher) என்பவர், அமைச்
சருக்கும், பொதுசனசேவையாளனுக்கும் இடையில் நிலவவேண்டிய
சரியான உறவு முறையைக் கீழ்வருமாறு விளக்கியுள்ளார்.
"கொள்கையை நிர்மாணிப்பது அமைச்சர்களது செயல். கொள்கை
நிர்மாணிக்கப்பட்ட பின்னர், அதனைத் தான் ஏற்றுக்கொண்டா
லும், ஏற்காவிட்டாலும், ஒரேயளவு நல்லெண்ணத்துடன் அக்
கொள்கையைச் செயலாற்ற முயல்வது பொதுசன சேவையா
னது கேள்விக்கிடமற்ற தொழிலாகும். இது என்றும் சச்சரவுக்
கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. அதேசமயத்தில்,
தீர்மானங்கள் செய்யப்படும் வேலையில் தம்மகத்தேயுள்ள செய்
திகளையும் அனுபவங்களையும் தமது அரசியலதிகாரிக்கு அளிப்ப
தும், இங்ஙனமளிக்கப்படும் ஆலோசனைகள் அமைச்சரது கருத்
திற்கு ஒத்திருந்தாலும் இல்லாவிட்டாலும், எவ்வித பயமோ
இசைவோ இன்றி இவற்றை அளிப்பதும் பொதுசனசேவையா
ளனது பாரம்பரிய கடமையாகும். தேவையான உண்மைகளை
அமைச்சரிடமளிக்கும்போது, அவற்றின் தன்மையினை ஆராய்வ
தற்கோ, ஒழுங்குபடுத்துவதற்கோ இலாகாவின் முழு அமைப்
பினையும் செயற்படுத்தவேண்டி நேரிடுமாகையால், பொதுசனச்
சேவையாளன் மிகவும் கவனமாகவிருத்தல் வேண்டும். அதேபோல,
இவ்வுண்மைகளிலிருந்து அனுமானங்களைப் பிறப்பித்தளிக்கும்
போது அவன் இயலுமானவரை விவேகமுள்ளவனாகவும், புறம்
பான நோக்குடையவனாகவும் இருத்தல் வேண்டும்".

அமைச்சருடன் நல்லுறவு பூண்டிருப்பதோடு, பொதுசன
சேவையாளன், சில செயல்களில் ஈடுபடாதிருப்பான் எனவும்
எதிர்பார்க்கப் படுகிறான். தனது அமைச்சரின் தீர்மானங்களை
நம்பிக்கைக்குகந்த விதத்தில் செயலாற்றுவது பொதுசனசேவை
யாளனின் கடமையாக இருந்த போதிலும், எக்காலத்திலும்
அவன் தனது அமைச்சரதோ, அரசாங்கத்தினதோ அரசியல்



நடவடிக்கைகளில் பங்குகொள்ளக்கூடாது. அதாவது, கொள்கை
களை செயற்படுத்தும் போது, எந்தச் சந்தர்ப்பத்திலாவது.
அவன் கட்சியாளன் என்ற முறையில் நடந்து கொள்வதாகப்
பொதுமக்களோ, எதிர்க்கட்சியாளரோ எண்ணங்கொள்ள இடம
ளிக்கக்கூடாது. தனது சேவையின் அரசியல் நடுவுநிலைமையை
நிலைநிறுத்துவது அவனது கடமையாகும். உதாரணமாக, ஓர்
அமைச்சர் தமது தொகுதியிலோ, அல்லது பொதுவாக ஒரு
கட்சியாளன் என்ற முறையிலோ, அரசியல் நடவடிக்கையில்
ஈடுபடுங்காலை, ஒரு பொதுசன சேவையாளன் அவருக்குத் துணை
நிற்கக் கூடாது. பொதுசனச் சேவையாளன், தனது அமைச்சர்
பிரதம விருந்தாளியாகத் திகழும் உத்தியோகபூர்வமான தொரு
சடங்கிற் பங்குபற்றுவது பொருத்தமானதாக விருக்கலாம்.
இவ்வைபவத்தில் அமைச்சர் அரசியல் விளக்கம் செய்வரானால்,
அதற்காகப் பொதுசனசேவையாளனைக் குறைகூற முடியாது.
ஆனால் அமைச்சர் அரசியற் கட்சியாளராக மாத்திரம் நடக்கும்
போது, பொதுசன சேவையாளன் அத்தோடு தன்னையும் இணைத்
துக்கொள்வானாகில் அது பிழையாகும் சம்பளம் பெறும் இவ்வுத்தி
யோகத்தன் அரசியற் குறிக்கோள்களுக்கும் பயன்படுத்தப்படுகி
றான் என்று பொதுமக்கள் நினைக்க இடம்வைத்தல் தகாது.

இதேபோல, பொதுசனசேவையாளன், தான் தற்போது சம்
பளம் பெற்றுக் கடமையாற்றும் அரசாங்கத்தின் பலவீனங்களை
வெளிப்படுத்த முயலும் எந்தவொரு எதிர்க்கட்சி அரசியல்வாதி
யுடனும் பகிரங்கமாக இணையக்கூடாது. எதிர்க்கட்சிப் பேச்சா
ளர் தனது அமைச்சரைக் கண்டித்துக் குறைகளை விளம்பரப்படுத்
துங்காலை இது முக்கியமாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

பொதுசன சேவையாளன், தனது அமைச்சருக்கு அரசியற்
கையாளாகாமலும், அவரைப் பகிரங்கமாகக் கண்டிப்போருடன்
இணையாமலுமிருக்க கடமைப்பட்டவன். அதே சமயத்தில் அவ
ரது கொள்கையாக்கத்தில் உதவும் கடமையும் அவனுக்கு
உண்டு. இவ்விடத்தில் அப் பொதுசனச் சேவையாளன் தனது
நடுவுநிலைமைக்குக் களங்கம் ஏற்படுத்தமாட்டான். ஏனெனில்
அமைச்சர் தேர்தற்றொகுதியின் விருப்புக்களைச் செயற்படுத்தவே
அவன் உதவுகிறான். நிர்வாக அமைப்பில் ஒரு விசேடமான
இடம் பொதுசனசேவையாளனுக்கு அளிக்கப்படுகிறது. சகல
வித செய்திகளையும் பெறக்கூடிய வசதிகள் அவனுக்கு உள.
இச்செய்திகள் யாவையும் ஒழுங்கான முறையில் அமைச்சருக்குச்
சமர்ப்பித்து, அவர் தீர்மானங்கள் செய்வதற்கு உதவவேண்டியது
அவன் கடமை. எனவே அமைச்சருக்கு உதவக்கூடிய முக்கிய
செய்திகளை அவன் மறைத்துவிடுதல் விசுவாசத் துரோகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாகும். பெரும்பாலும் சகல செய்திகளையும் பெறும் தனியுரிமை பொதுசனசேவையாளனதே யாகையால், அமைச்சரைக் கீழறுக்கும் வாய்ப்புகள் அவனுக்குப் பலவுள. இருப்பினும் அவன் தனக்குள்ள சலுகைகளைத் துர்ப்பிரயோகம் செய்தல் கூடாது. எந்நேரமும் தன் அமைச்சருக்கு உதவவே அவன் முனையவேண்டும்.

இவ்வுறவுமுறை இருதலைப்பட்டது. அமைச்சர் சகலத்தையும் பொதுசன சேவையாளர் கரங்களுக்கே விட்டுவிடக் கூடாது. தமது அரசாங்கத்தின் பொதுவான கொள்கையையும், தனது இலாகாவில் எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகள்பற்றிய தம்கருத்துக்களையும், தன்னுடைய உத்தியோகத்தர்கள் அறியப்பண்ணுவது அமைச்சரது பொறுப்பாகும். அமைச்சர், தமது மனம் எங்ஙனம் தொழிற்படுகின்ற தென்பதைப் பொதுசனசேவையாளர் யூகித்தறியும்படி விடுதல் முறையன்று. சகல செயல்களுக்கும் அரசாங்க சேவையாளனே முன்னிற்கவும், பொறுப்பேற்கவும் விடுதலும் கூடாது. பொதுசன சேவையாளர் கரங்களுக்கு மிதமிஞ்சிய அதிகாரம் அளிப்பது உத்தியோகத்தர் கொடுங்கோன்மை Bureaucratic Tyranny)க்கு வித்திடுவதாகும். இதனால் இறுதியில் அரசாங்கமே இன்னற்படும். எனவே, தமது இலாகாவின் உத்தியோகத்தர்களுக்குப் பொதுவான பணிமுறைகளை வகுத்தளித்தல் அமைச்சரது கடமையாகும். அத்தோடு இம்முறைகளிற் போதிய நல்லெண்ணத்துடன் செயலாற்றுகின்றனரா எனக் கவனிப்பதும் அவரது பொறுப்பாகும். கருமங்கள் கேவலமாகும் போது பாராளுமன்றத்தில் அமைச்சர் தனது உத்தியோகத்தனைக் குறைகூற முடியாது. ஓர் அமைச்சர் தமது உத்தியோகத்தன் விசுவாசமற்றவனாகவோ செயற்றிறன் குன்றியவனாகவோ இருக்கக்கண்டால், முதலில் அவனை எச்சரித்துப் பின் அவசியமேற்படின் அவனை அப்புறப்படுத்துவிப்பது அவரது கடமையாகும். ஆனால் எத்தகைய சந்தர்ப்பத்திலும் அவர் பாராளுமன்றத்திற்குவந்து, தமது பொறுப்பிலிருக்கும் இலாகாவின் சீர்கேட்டிற்கெல்லாம் தமது சம்பளம் பெறும் உத்தியோகத்தனே காரணமெனக் குறைகூறக் கூடாது. நாடு அமைச்சரையே பொறுப்பாளியாகக் கொள்ளும்.

தமது நாளாந்த தொடர்புகளில், அமைச்சருக்கும், அத்தோடு தனது அணித்தான அரசியல் இணைவாளராகிய பாராளுமன்றக் காரியதரிசிக்கும், தேவையேற்படின் அந்தரங்கக் காரியதரிசிக்கும்,கிடைக்கக்கூடிய சகல குறிப்போலைகளையும், தேவையான செய்திகளையும் கொடுத்து உதவுதல் பொதுசனச் சேவையாளனது கடமையாகும். இச்செய்திகளும் குறிப்போலைகளும் அங்கீகரிக்கப்பட்ட வாயில்களினூடாக (அதாவது நிரந்தரக் காரியதரி



சியினூடாக) அனுப்பப்பட வேண்டுமேயல்லாது, பிறவழிகளால் அனுப்பப்படக் கூடாது. அமைச்சரும் அவரது சகாக்களும், பொதுசனசேவையாளனுடன் தொடர்புகொள்ளும்போது, கூடியவரையில் அவ்விலாகாவிற்குப் பொறுப்பேற்றிருக்கும் மூத்த பொதுசன சேவையாளனாகிய நிரந்தரக் காரியதரிசியினூடாகவே செல்தல் வேண்டும்.

முடிவாகப், பொதுசனசேவையாளன் ஒரு சம்பளம்பெறும் உத்தியோகத்தன் என்பதையும், சமூகநம்பிக்கைக் குகந்த வொரு சேவையாளன் என்பதையும் நாம் மனத்திற்கொள்ள வேண்டும். ஆகையால் அரசியல் நோக்குகளாலும் சுயவிருப்புகளாலும் பாதிக்கப்படாத சேவைபுரிய அவன் கடமைப்பட்டிருக்கிறான். அவன் சலுகைகள் மிக்க தானமொன்றை வகிப்பதனால், அச்சலுகைகளைத் துர்ப்பிரயோகம் செய்யவோ, தேர்தல் தொகுதிகளின் விருப்புநிறை வேற்றத்தைத் தகர்ப்பதற்கு உபயோகிக்கவோ கூடாது.

We Solicit Your Inquiries for

* PLANTATION TOOLS
* BUILDING MATERIALS
* SANITARY FIXTURES
* WATER SERVICE MATERIALS
* PAINTS & DISTEMPER
* ELECTRICAL ACCESSORIES
* GENERAL HARDWARE

Estate Supplies Corporation Ltd.

RELIABLE HOUSE FOR HARDWARE IN UP-COUNTRY

Phone: 448 KANDY. Grams: 'ESCO'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

# *முதிர்ந்தோர் கல்வியின் விரிவு

— கலாநிதி சேவியர் எஸ். தனிநாயக அடிகள் —

இக்காலச் சமூகத்தின் சிக்கலான இயல்பானது எம்மை மீண்டும் பழைய சமூகங்களிற் பெரிதும் பயின்று வந்த கல்வி பற்றியவொரு கருத்தையே — அஃதாவது, கல்வியென்பது வாழ்நாள் முழுவதுங் கற்றலாகும் என்னுங் கருத்தையே — மேற்கொள்ளச் செய்கின்றது. எளியதும் பிரிவு வேறுபாடு அதிகமற்றதுமான சிறிய சமூகமொன்றில், அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் சமூகத்தின் பொதுநலத்தின் பொருட்டுத் தத்தங் கடமையை நிறைவேற்றுவது இன்றியமையாததாகின்றது; அதனல் அவரெல்லாம் சமுதாயத்திற் றத்தமக்குரிய இடத்தை நிலைநாட்டுவதற்காக வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பயிற்சி பெறவேண்டியவராயுமிருக்கின்றனர். வேடனெருவன் தன் வேட்டுவத் தொழின் முழுவதையும் இளந்தலைப் பருவத்திற் கற்றுவிடல் முடியாது; பல்லாண்டாகப் பெற்ற பயிற்சியே அவன் திறமையை நிறைவு செய்கின்றது. 1

பண்பாடு மிக்க சமூகங்களுக்குமே வாழ்நாள் முழுதுங் கற்கும் கல்வி பயன்படுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டுளது. பிளேட்டோ தமது இலட்சிய அரசிற்கென வகுத்துள்ள கல்வித் திட்டத்தில் காவலர் 50 வயது வரை பல்வேறு பொருள்களைக் கற்றுத் தேறற்கு ஏற்பாடு செய்துள்ளார்; அதன் பின்னர் அவர் மெய்ப்பொருள் ஆராய்ச்சியிலும் நன்மையின் உருவத்தை நீள நினைப்பதிலுந் தங்காலத்தைக் கழிக்க வேண்டியவராவர். பிளேட்டோவின் திட்டமானது முறையான பள்ளிக்கூடப் படிப்போடு நின்றுவிடாத ஒரு தொடர் கல்வி முறைக்கு ஏற்பாடு செய்கின்றது. 2

---

*The Scope of Adult Education
by Xavier S. Thaninayagam, M. A., M. Litt., S. T. D., PH. D.
Lecturer in Education. University of Ceylon - Editor Tamil culture.

1. Hambly, W. D. **Origins of Education among Primitive People**, Macmillan, London, 1926.
2. பிளேட்டோவின் கல்வித் திட்டம் பின்வரும் நூலிலிருந்து எடுத்தாளப்படுகிறது: **The History and Philosophy of Education, Ancient and Medieval**, by Frederick and Arrowood, Charles Flynn. பக். 389 – 390 Prentice - Hall, Inc. New York 1951. பார்க்க– Sheaman Harold, C: **Adult Education for Democracy**, Wea. London, 1944.



## பிளேட்டோவின் பள்ளிக்கூட முறைமை

| வயது | பள்ளிக்கூடம் | சிறப்பான அபிவிருத்தி, அல்லது படிப்புக்கள் |
|---|---|---|
| பிறப்பு முதல் 3 வரை | குழந்தைப் பருவம் | உடல் வளர்ச்சி, புலனுணர்ச்சி, அச்சமின்மை; பிள்ளை இன்பத்துக்கும் துன்பத்துக்கும் எதிர்வினை புரிகின்றது. |
| 4 முதல் 6 வரை | குழந்தைப் பள்ளி | விளையாட்டு, அரமகளிர் கதைகள், குழந்தைப் பாட்டுக்கள், புராணக் கதைகள், பிடிவாதத்தை ஒழித்தல். |
| 6 முதல் 13 வரை | தொடக்க நிலைப்பள்ளி | விளையாட்டு, செய்யுள், வாசிப்பு, எழுத்து, பாட்டு, ஆடல், சமயம், நற் பழக்கம், எண்கணிதம், கேத்திரகணிதம். |
| 13 முதல் 16 வரை | இசைக் கருவிப் பயிற்சி | சிதரா என்னும் நரம்புக் கருவியை இசைத்தல், சமயச்சார்பான பாசுரங்கள், செய்யுள் நெட்டுருச் செய்தல், எண்கணிதம் (சிறப்பாகக் "கொள்கை"). |
| 16 முதல் 20 வரை | உடற்பயிற்சியும் படைப்பயிற்சியும் | முறையான உடற் பயிற்சியும் படைப் பயிற்சியும்; அறிவாற்றற் பயிற்சி இல்லை. |
| 20 முதல் 30 வரை | விஞ்ஞானக் கலைகள் | பகுத்தறிவையும் பழக்க வழக்கங்களையும் இயைபு படுத்தல், பௌதிகவியற் கலைகளை, ஒன்றோடொன்று தொடர்பு படுத்தல். |
| 30 முதல் 35 வரை | முரணறுதருக்கம் | மெய்யுணர்வியல், உளவியல், சமூகவியல், ஆட்சியியல், சட்டவியல், கல்வியியல். |
| 35 முதல் 50 வரை | அரசசேவை | |
| 50 முதல் முடிவு வரை | மெய்யுணர்ந்தோர் | உயரிய மெய்யுணர்வாராய்ச்சி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாழ்க்கை முழுவதும் கல்விபயிலத்தக்கது — கல்வி பயிற்றவல்லது; இளைஞர்க்குரிய முறையான கல்வியளிக்கும் பள்ளிக்கூடங்களோடமையாது, அவற்றுக்குப் புறம்பாக அனைவருக்கும் கல்வியளிக்குமாறு சமூகம் அமைதல் வேண்டும்' என்னும் இவ்விரு முற்கோளையும் ஆதாரமாகக் கொண்டே கற்பிக்குஞ் சமூகமொன்றுக்குப் பிளேட்டோ வழிவகுத்துள்ளார். ஆதலினாற்றான் அவர் நகர் வாழ்நனுக்குக் (குடிமகனுக்குக்) கல்வியூட்ட வேண்டின், நகரத்துக்கு கல்வியூட்டுவது அவசியமெனக் கூறினார்; பிளேட்டோவின் நூல்களில் 'நகரம்' என்பது அரசினைக் குறிக்கும்.

இந்தியாவிலும் பண்டைக் காலத்தில் அரசியல், கல்வியியற் கொள்கைகளை வகுத்தோருக்கு வாழ்நாள் முழுமையுங் கற்றல் என்னுங் கருத்து இருந்தது. அறநூல்கள் (**தருமசாத்திரங்கள்**) ஆட்சி செலுத்திவந்த நிலவெல்லை பற்றியும் அவற்றை ஏற்றொழுகிய சமூகத் தொகுதிகள் பற்றியும் நாம் திட்டவட்டமாகக் கூறல் முடியாது. ஆயின், தொடக்கத்தில் வாழ்க்கையை மூன்று ஆச்சிரமங்களாக வகுத்த பிரிப்பும், பின்னர்ப் பிரமச்சரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என நான்கு ஆச்சிரமங்களாக வகுத்த பிரிப்பும், குருவினில்லத்திலிருந்து கல்விகற்கும் மாணவப் பருவத்தோடு (அந்தேவாசி) முடிவடையாத ஒரு கல்விமுறைக்கும் தற்பயிற்சிக்கும் ஏற்பாடு செய்துள்ளன.[3] வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கல்வியைக் கற்கலாம் என்னுங் கருதுகோள் இயல்பாகவே சமயக்கல்வியில் ஆதிக்கம் பெற்றிருந்தது; இச் சமயக் கல்வியானது மனிதன் தன் உள்ளத்தால் எய்தத்தக்க மெய்ப்பொருளறிவிற்கும் தற்றிருத்தத்திற்கும் சமய அனுபவத்திற்கும் காலம் வரையறுத்துக் கூறவில்லை. சமய ஆசிரியன்மார் சமயம், ஒழுக்கம் என்பனபற்றிய அறிவுறுத்தல்களை எல்லா வயதுத் தொகுதியினர்க்கும் ஏற்றவாறு ஒழுங்குசெய்தனர். மக்கட்பண்பை வளர்க்குந் நோக்கத்தோடு வாழ்நாள் முழுவதும் கற்குங் கல்வியொன்றைத் **திருக்குறள்** வகுத்துக் காட்டுகின்றது. இந்நூலிலே பிற கருத்துக்களுக்கிடையே ஒருவன் தன் நாட்டைப்போற் கருத வேண்டிய நாடுகள் பலவாக விருத்தலாலும் தன்னைப்போற் கருதவேண்டிய மக்களும் பலராகவிருத்தலாலும்— அந்நாடுகளையும் அம்மக்களையும் அவன் நன்கு அறிய வேண்டியிருத்தலாலும் — அவன் எங்ஙனம் சாந்துணையுங் கல்லாதிருத்தல் சாலும் என்னுங் கருத்துங் கூறப்பட்டது.[4]

3. P. V. Kane, **History of Dharmasastras**, vol II. Part II. Oriental Research Institute, Poona, 1930—1946.

4. திருக்குறள் 367.



முறையாக அமையாத முதிர்ந்தோர் கல்வியின் வரலாற்றை ஆராய்வோர், பாணரும் புலவரும் ஊர் சுற்றும் கற்றோரும் பரிவிராசகரும் நடந்து திரியும் தார்க்கிகரும் போன்ற, பொது மக்கள் விரும்பிய கல்வியாளர் வாழ்நாள் முழுவதுங் கல்வி கற்பதற்கு எவ்வாறு தூண்டுதல் கொடுத்து வந்தாரென்பதைக் காண்பர்; பள்ளிக் கூடங்கள் பல நிறுவப்படாத பழங் காலத்திலே ஒரு சமுதாயத்திற் கல்வி யூட்டுஞ் செல்வாக்கை இவரே சிறப்பாகப் பெற்று விளங்கினர். அரங்கில் நாடகங்களை நடித்தல் மூலமும், **இராமாயணம், மகாபாரதம், இலியத்து ஒடிசி** போன்ற காவியங்களை ஓதுதல் மூலமும் முதிர்ந்தோர் கல்வி தொழிற்பட்டு வந்ததை அவ் வரலாற்றாசிரியர் காண்பர்; அன்றியும், மன்றங்களிலும் பட்டி மண்டபங்களிலும் சந்தை கூடுமிடங்களிலும் பொது மக்கள் முன்னிலையில் நிகழ்ந்த விரிவுரைகள், தத்துவக் கோட்பாட்டு வாதங்கள் ஆகியவற்றின் மூலமும் அக் கல்வி வளர்ந்த வாற்றைக் காண்பர். மேலும், அவர் அதற்குரிய வியத்தகு சான்றினை அசோகனின் கட்டளைகளிற் காணலாம். இக் கட்டளைகளை **மகாமாத்திரர்** எனப்படும் அரச அலுவலர் முதிர்ந்தோர் கூட்டத்துக்கு வாசித்து விளக்குதல் வேண்டும். வாழ்க்கை முழுவதுங் கற்றற்கு வாய்ப்புண்டெனக் கருதியவர் ஒவ்வொரு காலப் பகுதியிலும் இருந்தே வந்தனர். ஆயின் முறையான முதிர்ந்தோர் கல்வி இயக்கம் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிற்றான் தொடங்கியது. ஆயின், இன்றுஅது "இத்தலைமுறையின் தலைசிறந்த கருத்து" எனப் போற்றப்படுகின்றது.[5]

ஓரினத் தன்மை வாய்ந்த சிறிய சமூகங்களின் நிலைபேற்றுக்கு உயிர் போன்று விளங்கிய, வாழ்நாள் முழுமையுங் கற்றல் முறையென்னும் கருத்தானது சமூகத்தில் வேறுபாடு பெருகிப் பல வகுப்புக்களும் தொகுதிகளுந் தோன்றிக் கல்வியைத் தமது முழுவுரிமை யாக்கிய பின்னர் வலுக் குறைந்த ஒரு சத்தியாய்விட்டது. முறையான பள்ளிக் கல்வியின் விருத்தியினாலும் முதிர்ந்தவர் வாழ்க்கைக்கு ஆயத்தஞ் செய்யுமிடமே பள்ளிக்கூடம் என்னும் நம்பிக்கையினாலும் அக் கருத்து மேலும் வலி குன்றியது; பிற்சொன்ன நம்பிக்கை வளர்ந்ததன் விளைவாக, முதிர்ந்தோர் வாழ்க்கைக்கு வேண்டியவெல்லாம் முன்கூட்டியே பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்படுவவாயின.

அரசியற் குடியாட்சியும் பொருளியற் குடியாட்சியும் அபிவிருத்தி உளவியல், முதிர்ந்தோர் உளவியல் ஆகியவற்றின்

5. Kempfer Homer, **Adult Education**, P. 3 Mc. Craw-Hill Book Company. Inc. New-York 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி முடிபுகளும் போன்ற பல காரணங்களால், வாழ்நாள் முழுதுங் கற்றல் என்னுங் கருத்துச் சென்ற நூற்றாண்டிலிருந்து மீளப் பார்வையிடப்பட்டுள்ளது. குழந்தைப் பருவம் முதிர்ந்தோர் வாழ்க்கைக்கு ஆயத்தஞ் செய்வதொன்றன்று எனவும் "பிள்ளைகள் மனிதராவதற்கு முன் பிள்ளைகளாக இருக்கவே இயற்கை வேண்டும்" எனவும், எமிலியின் அபிவிருத்தியில் ஒவ்வொரு நிலையும் அதனளவிலே முடிவடைகின்றதல்லாமல், அது பின்னர் வருமோர் அபிவிருத்தி நிலைக்காக அமையவில்லை எனவும் உருசோ அழுத்தந் திருத்தமாகக் கூறியபோது, அவர் முதிர்ந்தோர் கல்விக்குரிய அடிப்படை யொன்றை முதற்கண் எடுத்து மொழிந்துள்ளார்6. குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவ வாழ்க்கைக்காகவும், இளந்தலைப் பருவத்தார்க்கு இளந்தலைப் பருவ வாழ்க்கைக்காகவும் கல்வி யூட்டப்பட்ட படியால், முதிர்ந்தோர்க்கு முதிர்ச்சிப் பருவ வாழ்க்கைக்காகவும், முதியோர்க்கு முதுமைப் பருவ வாழ்க்கைக்காகவும் கல்வி யூட்டப்படல் வேண்டுமென்பது வெளிப்படையான வொரு தொடர்முடிபாகும். அபிவிருத்தி உளவியல், முதிர்ந்தோர் உளவியல் ஆகிய துறைகளில் நடாத்திய ஆராய்ச்சிகள் தொடக்க நிலையினவாகவே இருந்த போதும், அவற்றின் முடிபுகள் முற் சொன்ன தொடர் முடிபை நன்கு அரண் செய்துள்ளன. அபிவிருத்தி உளவியலையும், முதிர்ந்தோர் உளவியலையும் மேலெழுந்த வாரியாகவே அறிந்தோருக்கும் முதிர்ந்தோர் கல்வியின் தேவை தெளிவாதல் திண்ணம். கல்வியானது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை மனத் துணிவோடு அணுகுவதற்கு உதவும் புதிய உண்மைகள், புதிய முறைகள் ஆகியவற்றின் தேட்டத்தையுள்ளடக்கிய ஒரு தொடர் முறையாகக் கருதப்படல் வேண்டும். மனித வாழ்க்கையின் பருவங்கள் அல்லது வயதுப் பகுதிகள் ஒவ்வொன்றுக்குஞ் சிறப்பாகவுரிய தேவைகளும், ஆற்றல்களும், பிரச்சினைகளும், உளவியற்றுக்கங்களும் தூண்டற்பேறுகளும், அக்கறைகளும், அனுபவங்களும் உள. அவ்வவ் வயதுப் பிரிவில் இருக்கும்போதே ஒருவர் இவற்றையெல்லாம் அறிதலும் அனுபவித்தலும் இவற்றுக்காக ஆயத்தஞ் செய்தலும் இயலும். முதிர்ந்தோர் வாழ்க்கைக்குத் தேவையான சீராக்கங்கள், மாற்றங்கள், புதிய நடத்தை மாதிரிகள் முதலியவற்றை முன் கூட்டியே இளந்தலைப் பருவத்தினர்க்குக் கற்பிப்பது இயலாத செயலாகும். இவ்வாறு கற்பிக்கவியலாமைக்கு ஒரு காரணம் அவற்றை அவர் அப்பருவத்தில் விளங்கிக்கொள்ள முடியாமையாகும்; மற்றொரு காரணம், வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு முழுவதையும் பள்ளிக்கூடத்திற் கற்பிக்கும் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்

6 **Emile**, Everyman's Library, P. 54.



டுக்காலத்திலோ, அல்லது அதனோடு தொடர்ந்து பின்னர்ப் பல்கலைக் கழகத்திற் கற்பிக்கும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுக் காலத்திலோ திணித்துவிட முடியாமையாகும். இளைஞர்க்குரிய எவ்வகைப் பள்ளிக்கூடக் கல்வியையாவது, பல்கலைக் கழகக் கல்வியையாவது முதிர்ந்தோர் கல்விக்குப் பதிலீடு செய்தல் முடியாது; பதிலீடு செய்து அதனைப் பயனற்றதாக்கி விடலும் முடியாது.

குடியாட்சியிலே, தன்னையறிதல், மனிதத் தொடர்பைச் சிறப்பாக்கல், பொருளாதாரத் திறமை குடிமைப் பொறுப்பு ஆகியன எல்லா வகைக் கல்விக்குமுரிய அடிப்படை நோக்கங்களாகும். இவற்றை முதிர்ந்த வாழ்க்கையிலேயே கற்றுச் செய் முறைக்குக் கொண்டுவரல் வேண்டும். முதிர்ந்தோர் கல்வியானது அபிவிருத்தி வேலைகளை முதிர்ந்தோர் வெற்றியோடு ஏற்று நடாத்த உதவ வேண்டும். உரொபேட்டு ஜே. அவிகேசு என்பாரின் '**மனித அபிவிருத்தியும் கல்வியும்**' என்பது போன்ற ஒரு நூலானது, உயிரினவியல் சார்ந்த முதிர்ச்சியும் சமூகத் தேவைகளும் தனி மனிதன்பால் எத்தகைய மாற்றங்களை உண்டாக்குகின்றன என்பது பற்றியும் அவற்றின் பொருட்டு எத்தகைய சீராக்கங்கள் செய்யப்படவேண்டும் என்பதுபற்றியும் பொதுவான வாசகர்க்குமே ஓரளவு விளக்கந் தரவல்லது. அவிகேசின் கருத்துப்படி, ஓர் அபிவிருத்தித் தொழிலானது "தனிமனிதனின் வாழ்க்கையிற் குறித்தவொரு காலப்பகுதியிலோ, அதனையடுத்தோ தோன்றுவதொன்றாகும்; அது வெற்றிகரமாக நிறைவேற்றப்படின், அஃது அவனுடைய மகிழ்ச்சிக்கும் அவன் பின்னர் மேற்கொள்ளும் தொழில்களில் வெற்றிக்கும் வழிகாட்டும்; மற்று, அதிற் றோல்வி காணின், அஃது அவனுடைய துன்பத்துக்கும், சமூக வெறுப்பிற்கும், பின்னர் அவன் மேற்கொள்ளுந் தொழில்களில் இடர்ப்பாட்டுக்கும் வழிகாட்டிவிடும்"7 தனியொருவனுக்கு அபிவிருத்தித் தொழில்களாக வாழ்க்கையில் ஏற்படும் நிலைமைகளிற் சில வருமாறு: வாழ்க்கைத் துணையாக ஒருவரைத் தெரிந்தெடுத்தல், குடும்பத்தை ஓம்புதல், உள்ளூராட்சியிலும் மைய ஆட்சியிலும் கலந்து கொள்ளல், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், சமூகத் தொடர்பு கொள்ளல், தொழில் வருவாயைப் பெருக்குதல், தொகுதி முயற்சிகள் செய்தல், தொழிலினின்றும் இளைப்பாறுதல், வருமானங் குறைந்து வருதல் முதலியன. முதிர்ந்தோர் உளவியல், முதிர்ந்தோர் நடத்தை ஆகியவற்றைப் பற்றிய அறிவின்மையும் முற்கூறிய நிலைமைகளில் ஒருவர் அவற்றுக்குத் தக எவ்வாறு தம்மைச் சீராக்கிக் கொள்ளல் வேண்டுமென்பதை அறியாமையும் பெருந் தடுமாற்றத்துக்

7. Havighurst Robert, J., **Human Development and Education** p. 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொருத்தக்கேட்டுக்கும் துன்பத்துக்கும் ஆளுமைச் சிதைவுக்கும் வழி காட்டிவிடும். முதிர்ந்தோர் கல்வியானது ஆளுமைப் பொருத்தக்கேட்டினை உளநோய் மருத்துவர் வந்து திருத்தும் வரை காத்திராது, நல்லதோர் பாடவிதானத்தைத் தக்க காலத்திற் கையாளுவதால், அதனை வராமலே தடுத்துவிடுகின்றது.

முதிர்ந்தோரின் கற்கும் ஆற்றலை அளந்தறியு முகமாக நடாத்திய மனத்தேர்வின் முடிபுகள் முதிர்ந்தோர் கல்வியிலுள்ள நம்பிக்கையை அரண்செய்துள்ளன. இளந்தலைப் பருவத்திலும் இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட வயதுக் காலத்திலுமே ஒருவர் கற்கவல்லார் என்றும் அதன் பின் கற்கும் மனவாற்றல் குறைந்துவிடுமென்றும் பொதுவாக எல்லாரும் நம்பி வருகின்றனர். ஆயின், ஈ. எல். தோண்டைக்கு என்பார் செய்த பரிசோதனைகளும், (இப்பொருள் பற்றி இன்றுவரை செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் இவையே மிக விரிவான ஆராய்ச்சியாக விளங்குகின்றன) முதிர்ந்தோருக்குக் கல்வி கற்பித்தோரின் உண்மையான அனுபவங்களும், 30 வயதுக்கும் 50 வயதுக்குமிடையிலுள்ளோரின் கல்விகற்கும் ஆற்றல் சிறிதுமே குறைவதில்லையெனவும், முதிர்ச்சிப் பருவத்திற் கற்கும் பழக்கமுடைய தனிப்பட்டோரைப் பொறுத்த வரையில் 50 வயதிற்குப் பின்புமே அவ்வாற்றல் அத்துணையாகக் குறைவதில்லையெனவும் காட்டுகின்றன. தோண்டைக்கின் ஆராய்ச்சியின்படி, 30—40 வயதிற்கு முன்னர் மனவாற்றலிற் புலப்படத்தக்க வீழ்ச்சி எதுவுமே இல்லை; அதற்குப் பின்னர் வீழ்ச்சி ஓராண்டுக்கு ஒரு நூற்றுவீதமே உண்டாகின்றது. உண்மையான கற்கும் நிலைமைகளில் அண்மைக் காலத்திற் செய்த பரிசோதனைகள் இவ்வாறு வீழ்ச்சியுறுவது கற்கும் **வீதமே**யன்றிக் கற்பதற்குரிய **ஆற்றல்** அன்று எனக் காட்டியுள்ளன. அஃதாவது, வயது முதிர்ந்தோர் தாம் இளைஞராயிருந்த காலத்திற் கற்றதிலும் சற்றுத் தாமதமாகவே கற்கின்றனர் என்பது. ஆயின் இவ்வாறு காலந்தாழ்ப்பதற்குப் பயிற்சியின்மையே காரணமாகத் தோன்றுகின்றது. முதிர்ந்தோரின் கற்குமாற்றல் தோண்டைக்கு என்பார் செய்தவை போன்ற ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியதிலுங் கூடியதென்றே கருத இடமுண்டாகிறது. இப்பரிசோதனைகள் (அ) முதிர்ந்தோர் வாழ்நாள் முழுவதுங் கல்விகற்க வல்லார் என்றும், அதனால் அவர் முதிர்ந்தோர் கல்வியாற் பயனடைவாரென்றும், (ஆ) தொடர்ந்தியலும் முதிர்ந்தோர் கல்வியால் ஒருவர் அறிவாற்றலை வாழ்க்கை முழுவதும் வற்றிப் போகாதவாறு பாதுகாக்க வல்லவராவாரென்றும் காட்டுகின்றன. முதிர்ந்தோர் கல்வியை விருத்தி செய்வதற்கு இம்முடிபுகள் முதன்மை வாய்ந்தவை. 8

8. Thorndike, E. L. et. al., **Adult Learning**, Macmillan, Newyork, 1928, knowles. Malcolm, S. **Informal Adult Education**, p. 17--18.



பல்வேறு நாடுகளில் முதிர்ந்தோர் கல்வியை மக்களிடைப் பரவச் செய்வதற்கு அரசியற் குடியாட்சியிலும் பொருளியற் குடியாட்சியிலும் அடங்கியுள்ள மக்கட் சமத்துவக் கோட்பாடுகள் பெரிதும் காரணமாகவிருந்தன. மேலைத் தேயத்திலே முதிர்ந்தோர் கல்வி இயக்கங்கள் கடந்த நூற்றாண்டில் தொழிலாளர் வகுப்பியக்கங்களாகவே தோன்றின. இவ்வாற்றாற் சிறப்புரிமை குன்றிய மக்கட்டொகுதியினர் கல்வியின் மூலம் அரசியல், பொருளியல், சமூகவியல் சார்ந்த நலன்களையும் சமத்துவத்தையும் பெற முயன்றனர். ஆங்கில மொழி பேசும் நாடுகளில் இதனைச் சிறப்பாகக் காணலாம்; அங்கெல்லாம் யோட்சு பேர்பெக்கு, உரொபேட்டு ஓவென், உவில்லியம் உலோவெற்று, தோமாசு கூப்பர் முதலியோர் தொடங்கி வைத்த இயக்கங்கள் தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்தோர்க்குக் கல்வியாற் பெறத்தகும் புதிய மதிப்பினையும் வாய்ப்பினையும் எடுத்து விளக்கிவந்தன. தொழிலாளர் வகுப்புக்களுக்குக் கல்வி வேண்டாமென எதிர்த்த தொகுதியினருமே, முதிர்ந்தோர் வாக்குரிமை நாட்டில் இடம்பெற்று, விரிவடையத் தொடங்கியபின், முதிர்ந்தோர் கல்வியின் தேவையைத் தெளிவாக உணர்ந்து கொண்டனர்; ஏனெனில், அவ்வாறு எதிர்த்தவர் "எம்முடைய தலைவர்" என ஆதாரங் காட்டிப் பேசிய பொது மக்களுக்குக் கல்வியளிப்பது அவசியம் வேண்டப்பட்டதாகலின் எழுத்தறிவிப்பதற்காகத் தோன்றிய இயக்கமானது படிப்படியாக நாட்டினத்தின் எல்லாப் பிரிவினரும் தம்மையறிவதற்கும் பண்பாட்டில் முன்னேறுவதற்குமுரிய ஓரியக்கமாக வளர்ந்துவிட்டது. முதிர்ந்தோர் கல்வி நலன்களை விரிவுறச் செய்யும் இத்துறையிலே 1903ஆம் ஆண்டிலே மான்சுபிறிட்சு (Albert Mansbridge) என்பார் அடிகோலி வைத்த பல்கலைக் கழக விரிவுச் சேவையும் தொழிலாளர் கல்விச் சங்கமும் பயன் மிக விளைக்கும் பணிகளை ஆற்றியுள்ளன. 9

கல்வியறிவு குறைந்தவொரு நாட்டிலே குடியாட்சி உரிமைகளை ஏற்றுக்கொண்டால், தருக்க நெறிப்படி முதிர்ந்தோர் கல்வி வேண்டுமென்பதும் பெறப்படும். எங்காலத்தில் இதற்குச் சிறந்த உதாரணமாகவுள்ளது, உலகிலேயே மிகப்பெரிய தனிக்குடியாட்சி நாடாக விளங்கும் இந்தியாவாகும். இந்தியாவின் குடி மக்களில் நனிபெருந் தொகையானோர் எழுத்தறிவில்லாதவராய்க் குடியாட்சி உரிமைகளைப் பிரயோகித்து வருகின்றனர்; எழுத்தறிவில்லா இம் மக்களெல்லாம் குடியாட்சிக்கு வேண்டிய கல்வியைப் பெறுதற் பொருட்டு, இந்திய அரசாங்கமானது மாபெரும் சமூகக் கல்வித் திட்டமொன்றைத் தொடக்கியுள்ளது. புதுப் பாராளுமன்ற

9. Cawson, F. H. **The Education of the Adult**, British Council London, 1952; Peers Robert, **Adult Education**, London, 1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றை நிறுவுவதற்காகப் பத்தொன்பது கோடியே முப்பது இலட்சம் மக்கள்—இம்மக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் தம் பெயரையே எழுதவறியாதவர் — தம் வாக்குரிமையை வழங்கவேண்டியிருந்தபோது, பெருந்தொகையான மக்களுக்கு முதிர்ந்தோர் கல்வியளிக்க வேண்டிய தேவை உணரப்பட்டது.

சிறப்பாக முதிர்ந்தோர் வாக்குரிமை பெற்றுள்ள ஒரு நாட்டில் எழுத்தறிவின்மை என்னுந் தடையானது குடியாட்சியின் முடிவான இலட்சியங்களையே கெடுத்துவிட வல்லது. அரைக் கல்வி கற்றோரும் அடியோடு கல்வியில்லாரும் தீவினைக்கஞ்சா அரசியல் வாதிகளுக்கும் மக்கட் பேதகருக்கும் எளிதிற் பலியாகிவிடுவார்கள்; அவ்வாறானாற் குடியாட்சியின் அடிப்படையே ஆட்டங்கண்டு பயனற்றதாகிவிடும்; ஏனெனிற் குடியாட்சி வெற்றிகரமாகத் தொழிற்படுவதற்குக் கற்றறிந்த நற் சமூகம் வேண்டுமாதலின். அமெரிக்க ஐக்கிய அரசிலே முதிர்ந்தோர் தொகையில் நூற்றுக்கு 2·7 விதமானோரே எழுத்தறிவில்லாதவராவர்; நெருக்கடிக் காலங்களிலும் பொருளாக்கத் துறையிலும் இம் மிகச் சிறிய தொகையினரே அளப்பருந் தடையாக இருந்துவருகின்றனரென முதிர்ந்தோர் கல்வியைப் போற்றுவோர் புலம்புகின்றனர்; நூற்றுக்கு 2·7 வீதமான முதிர்ந்தோர் எழுத்தறிவின்றியிருப்பதற்காக இவர் புலம்புவதைப் பார்க்கும்போது, எழுத்தறிவில்லார் தொகை நூற்றுக்கு 60 வீதமாகவும் :0 வீதமாகவும் இருக்கும் நாடுகளிலே இவ்வெழுத்தறிவின்மையால் ஏற்படுந் தடை எத்துணைப் பெரிதாயிருக்குமென்றே நாம் திகைக்கின்றோம்.10 வாய்வழியாகவும் செவிவழியாகவும் கல்வி கற்கப்பட்ட வேதகாலத்தை அனந்தக்குமாரசுவாமி அவர்கள் வாயாரப் போற்றலாம்; அவ்வாறே எழுத்தறிவுக் கல்வியென்னும் பூச்சாண்டியை எள்ளி இகழலாம். ஆயின், உலகப் பண்பாடு எய்தியிருக்கும் இக்கால நிலையில், வாசித்தல் மூலமே கல்வியும் ஆளுமை அபிவிருத்தியும் ஓய்வு நேரப் பயன்பாடும் களியாட்டமும் எய்தற்பாலனவாயுள்ளன. ஓர் அரசிலே கல்விக்கென வகுக்கப்படும் முழு நிறைவான திட்டத்தில், முதிர்ந்தோர் கல்வி இன்றியமையாத் தேவையானதொன்றென நிறுவுவதற்கு இன்னும் பல காரணங்களைக் காட்டலாம். இளமைக் கல்வியிலுள்ள குற்றங்களையுங் குறைபாடுகளையும் சீர்ப்படுத்துவதும், தப்பாகக் கருதி வகுத்த திட்டங்களாலும் தவறான இளமைக் காலப் பயிற்சி முறையாலும் இயற்கை வளர்ச்சிக்குத் தடையாகவுண்டாகும் தாக்கங்களை நீக்குவதுமே முதிர்ந்தோர் கல்வியின் கடமையாகும். முதிர்ந்தோர் கல்வி முறையைச் செயற்படுத்துங்

10. **Kempfer Homer, Adult Education,** op' cit. p. 94 ff.



காற், பல்கலைக் கழகங்களிற் பட்டம் [பெற்றவருட்படக் கற்றவரெல்லாம் மேலுங் கல்வியைப் பெறுவர்; மற்று, இளமைக்காலத்தில் தாமே முயலாமையாலோ, வாய்ப்புக்கள் இல்லாமையாலோ கல்லாதவராயும் எழுத்தறிவு இல்லாதவராயும் இருப்பவரெல்லாம் கற்பதற்கும் தம்மைத் தாமே திருத்துவதற்கும் வாய்ப்புக்களைப் பெறுவர்.

மனிதனுடைய அறிவும் தொழில் நுட்பமும் மிக விரைவாக முன்னேறி வருவதால், ஒருவர் தங்காலச் சமூகத்தில் திருத்தியான வாழ்க்கை நடாத்துதற் பொருட்டு, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றுவருதலும் வாசித்து வருதலும் வேண்டும். அன்றியும், அவர் தாஞ் செய்யும் வேலையைத் திறமையாகச் செய்தற் பொருட்டுத் தாம் மேற்கொண்ட தொழில்பற்றிய அறிவைத், தங்காலத்தில் அத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்குத் தகத் தீட்டி வைத்துக்கொள்ளலும் வேண்டும். மனிதனுடைய அறிவு என்றுமே விரிந்து வருவதனாற் சிறப்புத் தேர்ச்சி வளர்ந்துள்ளது. ஆயின், அவ்வாறு சிறப்புத் தேர்ச்சி பெற்றவர் தாம் வாழுஞ் சமுதாயத்திற் பண்பட்ட உள்ளமும் நன்கியைந்த ஒருமைப்பாடும் பரந்துபட்ட அறிவும் கொண்ட ஓர் உறுப்பினராகத் தம்மை ஆக்கித்தர வல்ல பிற துறைகளையும் முதிர்ந்த பருவத்தில் அறிந்துகொள்ளல் வேண்டும். சிறப்புத் தேர்ச்சியானது முதிர்ந்த பருவத்திற்குத் தேவையான பொதுமை "உள்ளகத்தை" ஏற்படுத்தித் தரமாட்டாது.

ஒருவர் தனிப்பட்டவரோடும் கூட்டத்தாரோடும் ஊடாடுவதால் ஏற்படும் அபிவிருத்தித் தொழிற்பாடுகளோடு, தமக்குப் பற்றுள்ள அழகியற்றுறை, பண்பாட்டுத்துறை, பொழுது போக்குத்துறை முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுத்த ஒரு திட்டப்படி அறிவாராய்ச்சிகளை நடாத்துவதால் தம்முடைய சொந்த வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்வதையுஞ் சேர்த்தெண்ணுதல் வேண்டும். இவ்வறிவாராய்ச்சிகள் சமூகச்சார்பாற் பெறப்படுபவையெனக் கருதப்படலாம்; அல்லது தனிப்பட்டவரின் நிறைவுக்குரிய சாதனமாகத் தனிப்பட்ட முறையிற் பெறப்படுபவையெனவுங் கருதப்படலாம். ஒருவனை மகிழ்ச்சியும் முழுமையும் வாய்ந்த மனிதனாக்கவல்ல திறமைகளும் மனப்பான்மைகளும் எவையோ, அவற்றை அபிவிருத்தி செய்வதன்மூலமும், அவனுடைய சொந்த வாழ்க்கைத் தத்துவத்தையும் ஆன்மீகப் பெறுமானங்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலமும், அவனுக்கு விருப்பமான விடயங்களை ஆராய்தல்—அவற்றைப்பற்றி வாசித்தல் ஆகிய செயல் மூலமும், அவனுடைய தொழில்களையும் விருப்ப முயற்சிகளையும் அவனுடைய உடலுக்கும் உள்ளத்துக்கும் உரிய பொழுது போக்குக்களையும் வளர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதன் மூலமும் முதிர்ந்தோர் கல்வியானது ஒவ்வொருவனும் வளமும் நிறைவுமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு வழிகாட்டல் வேண்டும். ஆகவே, முதிர்ந்தோர் கல்வியைப் பெறும் மாணவர் தொகுதியில் எழுத்தறிவுள்ளாரும்—இல்லாரும், கல்வியை நன்கு பெற்றோரும்—பெறாதாரும் அடங்குவர். எல்லாவிதக் கல்வியின் இலக்குக்களையும் போன்றே முதிர்ந்தோர் கல்வியின் இலக்குக்களும் முற்றாக எய்த முடியாத இலட்சியங்களாகவுள்ளன; ஆயின், அவை தனிமனிதனும் சமூகமும் முயற்சி செய்ய வேண்டிய திசைகளைக் காட்டுவனவாகும்.

தென்னாசியாவிலும் தென்கீழாசியாவிலும் உள்ள சமூகங்களின் அமைப்பு முறையானது கூடிய வருமானம் பெறும் வகுப்பாருக்கு அதிக ஓய்வு நேரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாயுள்ளது. குறைந்த வருமானம் பெறும் வகுப்பினருக்குள்ளுமே ஆண்பாலாரைக்காட்டிலும் பெண்பாலார் அதிக ஓய்வைப் பெற்றிருக்கின்றனர். கைத்தொழில் விருத்தி பெருகி வருதல் காரணமாகவும், அதன் விளைவாகத் திருந்திய தொழில் நுட்பம் அமைந்த எந்திரங்களும் தன்னியக்கப் பொறிகளும் புகுத்தப்படுதல் காரணமாகவும் ஆண், பெண் இரு பாலார்க்குமே ஓய்வு நேரங் கூடுமென்பது ஒருதலை. அந்த ஓய்வு நேரத்தைப் பயன்படுமாறு உபயோகிக்கும் முறைகளைக் கற்றுக் கொடுப்பனவும் ஓய்வு நேரக் கல்விக்குரிய கருவிகளை ஏற்படுத்திக் கொடுப்பனவுமான முகவர் நிலையங்கள், சாதனங்கள் யாவும் முதிர்ந்தோர் கல்வியில் இடம்பெறும். வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், இசை, அறிவாராய்ச்சி, பண்பாட்டு முயற்சிகள், பொழுதுபோக்கு முயற்சிகள் ஆகிய இவையெல்லாம் ஓய்வு நேரத்தை ஆக்க வழியிற் கழிப்பதற்காகப் பயன்படலாம். இவை நகர வாழ்க்கையின் ஆளுமை தழுவாத் தொடர்பு காரணமாகவும் நாட்டுப்புற வாழ்க்கையின் தனிமை காரணமாகவும் உண்டாகும் சலிப்பு, சோர்வு ஆகியவற்றையும் இருவகை வாழ்க்கையிலும் உண்டாகும் சமூகவியல் உளவியல் சார்ந்த தனிப்பாட்டையுங் குறைக்க வல்லன.11 முதிர்ந்தோர் கல்வியானது கவின் கலைகளில் ஈடுபடும் உரிமையும் ஓய்வு நேரத்தை ஆக்கவழியிற் பயன்படுத்தும் உரிமையும் செல்வம் படைத்த வகுப்பாருக்கு மட்டுமேயுள்ளன வெனுங் கொள்கையைத் தகர்த்து, அவ்வுரிமைகளை எல்லார்க்கும் பொதுவில் வைத்துள்ளது. இவ்வாற்றால், குறைந்த வருமானம் பெறும் வகுப்பாரிடையுமே வாழ்க்கையின் தன்மை வளமெய்தியுள்ளது; அழகும் பண்பும் அவருடைய வாழ்க்கையிலும் புகுந்துள்ளன.

11. Sheats Paul, Hetal, **Adult Education, The Community Approach**,
UNESCO., **Adult Education, Current trends of practices**,



ஆசிய சமூகங்கள் இதுவரையும் முதியோர், இளைப்பாறியோர் ஆகியவரைப் பற்றி அழுந்திச் சிந்திக்கவில்லை. அன்னாருக்குப் பயனுள்ள, திருத்தியளிக்கும் தொழில்களைத் தேடிக் கொடுப்பதில் ஈடுபடவுமில்லை. வாழ்க்கையெல்லை 35 வயதாகவும் 40 வயதாகவுமுள்ளவொரு நாட்டிலே இளைப்பாறியிருப்பவர் தொகை அதிகமாக இருக்குமென ஒருவர் எண்ணாதிருக்கலாம். ஆயின், தென்னாசிய நாடுகளிற் குழந்தை இறப்பு வீதமும், பிள்ளைப்பேற்றால் வரும் இறப்பு வீதமும் உயர்ந்திருப்பதனாலேயே சராசரி வாழ்க்கையெல்லை அத்துணைக் குறைவாய்க் காணப்படுகின்றது. ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலும், முதிர்ந்தோர் கல்வியைப் பற்றிச் சிந்திப்பதற்கும், முதியோருக்கு முதுமைப் பருவத்துக்கான கல்வியை ஊட்டுவதற்கும் வேண்டிய அளவு தொகையில் இளைப்பாறினோர் இருக்கின்றனர்.

கல்விப் பேற்றின் விளைவாகவே முதிர்ந்தோர் கல்வியின் தேவையும் உண்டாகின்றதென்பது அறியப்பட்டுள்ளது. சமூகத்தின் கல்வித்தரம் உயரவே முதிர்ந்தோர் பலர் மேற்றொடர்ச்சிக் கல்வியின் பெறுமானத்தை அறிந்து வருகின்றனர் (I'appettito viene mangiando)...எழுத்தறிவில்லார் கல்வியின் பயனை அறியாராகலின், அவர்க்கு அதில் ஆர்வம் பிறப்பதில்லை. ஒருகுடியாட்சி அதன் மிக மெலிந்த உறுப்பினரளவே வலியுடையது எனச் சொல்லலாம். அறிவூட்டுங் குடியாட்சியொன்றுக்கு அமையவேண்டிய இலட்சியம் யாதெனில் அது தன் உறுப்பினர் ஒவ்வொருவரும் அடையக்கூடிய அபிவிருத்தியைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை ஆக்கிக் கொடுக்க வல்லதாயிருத்தல் வேண்டும் என்பது.

இறுதியாக, ஒருவனின் ஆளுமை அபிவிருத்திக்கும் தற்காட்சிக்கும் குடும்பச் சூழலுக்கு அப்பாலுள்ள அயலார் உறவு வேண்டியிருக்கின்றது. தோழரோடு பழகும் போதும், கூட்டத்தாரோடு கலந்துறவாடும் போதுமே ஒருவன் தன்னை யாரென அறிந்து நிறைவு செய்து கொள்ளுகின்றான். முதிர்ந்தோர் கல்வி இயக்கமானது அதன் தொகுதியமைப்பினால் இத்தோழமையை ஒருவற்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது; இத்தோழமை பொழுது போக்குக்கும், புத்தாக்கத்துக்கும் உதவுவதோடு வளர்ச்சிக்கேற்ற விளைநிலமாகவும் அமைகின்றது. 12

இன்று உலகிற் பலர் — இவர் தொகை மேலும் மேலும் பெருகி வருகின்றது — படிப்பாலும், கல்வியாலும் கல்வி சார்ந்த

12. Lowly Louis, **Adult Education, and Group Work**. New York 1955;
Crosby Norman, **Full Enjoyment, London**, 1948,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி முயற்சிகளாலும் தமது சொந்தநாட்டையும், பின்பு உலகத்தையும் இன்பமாக வாழ்வதற்குரிய இடமாக மாற்றியமைக்கலாமென்ற உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர். உலகின் இளைய குடியாட்சிகளுக்கு இன்னல் விளைத்துவரும் சமூகத் தீங்குகளை வேரோடு களைய வேண்டுமாயின், பல தொகுதியினருக்குள்ளும் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமாயின், பொருளாக்கத்தையும் செல்வத்தையும் பெருக்க வேண்டுமாயின், ஆன்மிகப் பெறுமானங்களையும் இலட்சியங்களையும் வற்புறுத்த வேண்டுமாயின், முதிர்ந்தோர் கல்வியைவிட — அஃதாவது, தனிமனிதன் சமுதாய வரம்புக்குட்பட்டு வாழ்நாள் முழுவதுங் கற்றுவருவதால் தன்னைத் தானே நிறைவு செய்து கொள்கின்றான் என்னும் கருத்தை யுட்கொண்ட முதிர்ந்தோர் கல்வியைவிட — இம்முடிபுகளை யடைதற்கு மன்பதைக்கு வழி மற்றொன்றில்லை. *13*

முதிர்ந்தோர் கல்விக்கு எத்தகைய தேவை ஏற்பட்டுளதென்பது காட்டப்பட்டது; இதிலிருந்து முதிர்ந்தோர் கல்வியின் விரிவு எத்தகையதென்பது தெளிவாகும். ஆயின் முதிர்ந்தோர் கல்வியின் இலக்குக்களுக்கும் நோக்கங்களுக்கும் வரைவிலக்கணம் வகுத்தோர் தம்முட் கருத்து வேற்றுமையுடையராய்க் காணப்படுகின்றனர். பள்ளிக்கூடக் கல்வி பற்றி எத்தகைய கருத்து வேற்றுமை ஏற்பட்டுளதோ, அத்தகைய கருத்து வேற்றுமை முதிர்ந்தோர் கல்வி பற்றியும் தோன்றியுள்ளது. பல ஆண்டுகளாகக் கல்வி பற்றிய இலக்கிய மொன்று வளர்ந்துள்ளது; அது அளவிற் சிறியதாயிருந்த போதும் அதனை முதிர்ந்தோர் கல்வித்தத்துவம் என்னும் பாகுபாட்டில் அடக்கிவிடலாம். இலக்குக்களை உருவாக்கிய வழி, முதிர்ந்தோர் கல்வியியல் வல்லாருள் ஒரு சாரார், தனி மனிதனின் மேம்பாட்டிலும், தனிமனிதனின் அறிவாற்றல், குணவமைதி ஆகியவற்றின் நிறைவிலுமே கருத்தூன்றியுள்ளனர்; மற்றொருசாரார், முதிர்ந்தோர் கல்வி சமுதாயத்தை மையமாகக் கொண்டு ஊட்டப்படுதல் வேண்டுமெனவும், குடிமை, சமூகம் என்பவை சார்ந்த வினைத்திறமையை முதன்மையாக மக்களுக்குப் பயிற்றுதல் வேண்டுமெனவும் வற்புறுத்தியுள்ளனர். முதிர்ந்தோர் கல்விக்குரிய ஒரு பாடவிதானத்தை வகுத்து முதன்மை முறையைக் கூறிய வழி, "இன்றி

13. Ryburn, W. M., **Creative Education**, A Study in Educating for Democracy in India. **Bombay, 1946. p. 74:**
"இப்பெருந்திரளான மக்கள் தமது ஆற்றலைப் பிரயோகிக்கக்கூடியவராக வேண்டின், அதற்கு ஒரு தலையாய் வேண்டப்படும் இவ்வறிவை எங்ஙனம் அவற்கு ஊட்டலாம்? தலைமையேற்று நடாத்துதற்கு எங்ஙனம் பயிற்சியளிக்கலாம்? நானறிந்தவரை, இதற்குரிய மிக்க நம்பிக்கையூட்டும் விடை முதிர்ந்தோர் கல்வியிலேயே காணக்கிடக்கின்றது." ப 86: "இம்மாக்கட் பரப்பிடை ஓர் புதிய உயிர்ப்பினை உண்டாக்குவதற்கு முதிர்ந்தோர் கல்வியே சத்தி மிக்க சாதனமாகுமென என் மனத்துக்குப்படுகின்றது.



யமையாத் தேவைவாதியரும்" "இலட்சிய வாதியரும்" "மரபுபேண் வாதியரும்" மனிதப் பண்பை வளர்க்கும் செம்மொழி இலக்கியங்களுக்கும்கவின் கலைகளுக்கும் முதன்மை கொடுத்துள்ளனர்; ஏனைச் "செய் முறை விளைவு வாதியரோ" உண்மையான வாழ்க்கைத்துறைகளில் வாழுங்கலையைப் பயிற்றுவதையே வற்புறுத்தியுள்ளனர். *14*

எவ்வாறாயினும், முதிர்ந்தோர் கல்வி விடயத்தில் **முன்னது ஏதுவான** இலக்குக்களை முறையாகக் கூறுவதோ, திட்டமான, விரிவு கொண்ட வரைவிலக்கணத்தைத் தருவதோ எளிதன்று. இங்கே எடுத்துக் கூறப்பட்ட வெவ்வேறு இலக்குக்களையெல்லாம் இயைபுபடுத்தலும் இயலாததன்று. இதுவரை முதிர்ந்தோர் கல்வி அவ்வந் நாடுகளின் தேவைகளுக் கேற்ற வாறே வளர்ச்சியடைந்துள்ளபடியால், எல்லா நாடுகளுக்கும் ஒப்பமுடிந்த, அல்லது எல்லாப் பாங்காலும் செம்மையான, நியதியான ஒரு வரைவிலக்கணம் அதற்குக் கூறப்பட்டிலது. கல்வியின் மற்றைக் கிளைகள் ஒவ்வொன்றையும் போலவே, முதிர்ந்தோர் கல்வியும் ஏற்றுமதி செய்யத்தக்க சரக்கன்று. குடிமக்களிற் பெரும் பகுதியானோர் எழுத்தறிவின்றியிருக்கும் நாடுகளில் முதிர்ந்தோர் கல்வியானது எழுத்தறிவைப் பயிற்றுவதாகவும், முறையான பள்ளிக் கல்வியை இழந்த முதிர்ந்தோர்க்குக் கழுவாய் முறையாக இராப்பள்ளிக்கூடங்கள் வைத்து நாடத்துவதாகவும் அமைகின்றது. ஆசிய, ஆபிரிக்க இலத்தின் அமெரிக்க நாடுகள் பலவற்றில் நாட்டுப்புற அபிவிருத்தியும், சமுதாய மத்திய நிலையங்களிற் பொழுதுபோக்குக்கும் கல்விக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதும் முதிர்ந்தோர் கல்வியில் அடங்கும். இந்தியாவிலே கல்லா மாக்களுடைய முதிர்ந்த வாழ்க்கையின் முழுத்தன்மையையும் உயர்த்துவதிலும், அவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பதோடு குடிமைப் பயிற்சியூட்டுவதிலுஞ் சிறப்பாகக் கவனஞ் செலுத்தி வருகின்றனர்; அதனால் முதிர்ந்தோர் கல்வி அங்கும் **சமூகக் கல்வி** யெனப்படுகின்றது. ஐ. நா. க. வி. ப. அ. (யுனெசுக்கோ)வும், முறையான பள்ளிக்கூடக் கல்விபெறும் வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கும் முதிர்ந்தோருக்கும் எழுத்தறிவு உடனலம் குடிமை என்னுமிவற்றில் ஊட்டப்படும் குறைந்த அளவான பொதுக் கல்விக்கு **அடிப்படைக் கல்வி** என்னும் பெயரை ஆளுகின்றது. அடிப்படைக் கல்வி முதிர்ந்தோருக்கு அளிக்கப்படுங்கால், அது முதிர்ந்தோர் கல்வியாகின்றது. அண்மையிலே தொழிலிற் சேர்ந்த மாணவர் தத்தம் தொழில்களிலும் பணிகளிலும் தொடர்ந்து பயிலுமிடத்து, இக்கல்வி **மேற் கல்வி** என்றும் **தொடர் கல்வி** என்

14. Adler Mortimer J. **Adult Education** in Journal of Higher Educatoin XXIII No. 2. (Feb. 1952) 67. 115; Townsend William S. **Toward Full Equality, Labor works for Democratic Adult Education** in adult Education Journal V. No. 4. (oct. 1946) pp. 162–164.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் பெயர் பெறுகின்றது. ஐரோப்பாவில் "நாட்டு மக்கள்" கல்வி வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இதனுற் கந்தினேவிய நாடுகளில் 'நாட்டு மக்களுக்கான பள்ளிக்கூடங்கள்' தோன்றியுள்ளன; பிரான்சிலும் இத்தாலியிலும் **பொதுமக்கள் பண்பாட்டு நிலையங்கள்** நிறுவப்பட்டுள்ளன; இவையெல்லாம் சமுதாயத்துக்கும் பொதுமக்களின் பண்பாட்டுக்கும் முதன்மையளிக்கும் முதிர்ந்தோர் கல்வி நிலையங்களேயாம்15. மேலும் முதிர்ந்தோர்க்குப் பல்கலைக் கழக மட்டத்திலே பல்கலைக் கழகப் பாடங்களைப் பயிற்றும் பல்கலைக் கழக விரிவு வேலையும் முதிர்ந்தோர் கல்வியின் பாற்பாடும். ஆகவே முதிர்ந்தோர் கல்வி யென்பது எழுத்தறிவிக்கும் முயற்சி தொடக்கம் பல்கலைக் கழகப் படைப்பு வரையும் உடற்பயிற்சிக்கலை தொடக்கம் கவின்கலைப் படைப்பு பரந்து, எல்லாந்தழுவிய வொன்ருய் விளங்குகின்றது. கல்வி வாழ்க்கையோடு ஒத்து இயல்வது — வாழ்நாள் இறுதிவரை பயிலப்படுவது.

ஆதலால், முதிர்ந்தோர் கல்வியின் எல்லைகளுக்கே வரைவிலக்கணம் வகுப்பது எளிய செயலாகாது. பள்ளிக்கூடத்திலும் பல்கலைக் கழகத்திலும் அளிக்கப்படும் முறையான அறிவுறுத்தல்கள் அதில் அடங்கா. ஆயின், இருபதிற்குட்பட்ட வயதினரே ஏதாவதொரு தொழிலைச் செய்துகொண்டு, பள்ளிக்கூடப் படிப்பையும் பல்கலைக் கழகப் படிப்பையும் விரும்பி மேற்கொள்வாராயின், அது முதிர்ந்தோர் கல்வியேயாகும். ஆகவே, முதிர்ந்தோர் கல்வியானது, முறையான கல்வியின் பொருட்டுப் பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படாத முதிர்ந்தோரின் கல்விசார்ந்த முயற்சிகளையும், அவர்க்குக் கற்பிக்கும் முயற்சிகளையுமெல்லாம் அடக்கியதொன்றெனக் கருதப்படல் வேண்டும். அதில் அடிப்படைக் கல்வியும், மேற்கல்வியும், தொடர் கல்வியும், சமூகக் கல்வியும் அடங்கும். ஆயின், வரையறையாய்க் கூறப்புகின், **வருமானத்தைப் பெருக்குவதே தலையாய நோக்கமாய்க் கொள்ளாமல், அறிவையும் தொழிற்றிறமையையும் பெருக்குவதே தலையாய நோக்கமாய்க் கொண்டு**, வயது முதிர்ந்தோர் செம்மொழி இலக்கியங்கள், சமூகவியல், விஞ்ஞானவியல் என்னுமிவை சார்ந்த படிப்புக்களில் ஈடுபடுங்கால், அக்கல்விப் பகுதிகளுக்கே முதிர்ந்தோர் கல்வியென்னும் பெயர் பெரும்பாலும் ஆளப்படுகின்றதெனலாம்.

15. பார்க்க: **UNESCO, International Directory of Adult Education Paris 1952**; இது பல்வேறு நாடுகள் பற்றிய செய்திகளையும் நூற்பட்டியலையும் தருகின்றது. இலங்கை அரசாங்கச் செய்திப்பகுதி வெளியிட்ட **Adult Education in Ceylon** என்னும் நூலையும் பார்க்க. **Howes H. W. Fundamental, Adult Literacy and Community Education in the West Indies. Educational Studies & Documents (1955)** *No*. **XV. UNESCO. Paris.**



முதிர்ந்தோர் கல்வியை இக்கருத்தில் வைத்து நோக்கும்போது, பிளேட்டோவும் அரிசுதோத்திலும் தொழும்புக் கல்வி என்பதற்கு மறுதலையாக வரையறுத்துக் கூறிய தாராளக் கல்வி என்பதன் கருத்து அதில் அடங்கியிருக்கக் காணலாம்; உள்ளத்தை நிறைவு பெறச் செய்வதற்கு உதவுவதே தாராளக் கல்வி; மற்று, வருவாயைப் பெருக்கும் நோக்கமுடையது தொழும்புக் கல்வி. தன்னைத் திருத்துவதற்கும் தன்னை அறிதற்கும் தாராளக் கல்வியில் ஈடுபடுதலே முதிர்ந்தோர் கல்வியாம் என்னும் இக்கருத்து இந்தியா, சீனு ஆகிய நாடுகளின் அற நூல்களிலும் சமய நூல்களிலும் முனைந்து நிற்கின்றது. இவையெல்லாம் தொழில் இலக்குக்களையோ, வேலை வாய்ப்புக்களையோ எதிர்பாராமற், கல்வியைக் கல்வியின் பொருட்டே கற்க வேண்டுமென ஓயாது வற்புறுத்துகின்றன.

சேர் தோமாசுமோர் என்பார் தாமியற்றிய **யூட்டோப்பியா** என்னும் நூலிலே, அவ்விலட்சியபுரியின் குடிமக்கள் தமது ஓய்வு நேரத்தைத் தம் "உள்ளத்தை அணி செய்தற்காகப்" பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்குமிடத்தில், முதிர்ந்தோர் கல்வியின் இத்தாராள கருத்தை எடுத்து மொழிந்துள்ளார்.

"பொது மக்கள் நலமென்னும் அங்கிலையத்திலே இந்நோக்கம் முக்கியமாக நடிப்பு மாத்திரையே கவனிக்கப்பட்டது. பொது நலத்திற்குத் தேவையான தொழில்கள், அலுவல்கள் ஆகியவற்றைச் செய்யுங்காற் பெறக்கூடிய ஓய்வு நேரங்களிலெல்லாம் மக்கள் உடலாற் செய்யும் ஊழியத்திலிருந்து விடுபட்டு, உள்ளமென்னும் கட்டில்லாச் சுதந்திரவுலகுக்கேகி, அதனை அணிபெறச் செய்தல் வேண்டும்; ஏனெனில், இவ்வாழ்க்கையின் இன்பம் இதன்கண் இருப்பதாகவே அவர் எண்ணுகின்ருராதலின் என்க."

உண்மையிலே, அவ்விலட்சிய புரியின் நீதிபதிகள் வேலைகளையெல்லாம் நாளொன்றுக்கு ஆறு மணிநேரம் மட்டும் செய்யுமளவுக்குச் சுருக்கிவிட்டனர். இயலுமான வழியெல்லாம், மக்கள் ஓய்வு நேரங்களில் தாமே தமக்குக் கல்வியூட்டும் பொருட்டு, இதனிலுங் குறுகிய நேரம் வேலை செய்யும் நாட்களைப் பிரகடனஞ் செய்தனர். இலட்சிய புரியின் மக்களிற் பெருந் தொகையானேர் "தத்தம் இயல்புப் போக்கின்படி, சிலர் ஒன்றுக்கும் வேறு சிலர் மற்ருென்றுக்குமாக" விரிவுரைகளைக் கேட்கப்போயினர். 16

முதிர்ந்தோர் கல்வியின் இத்தாராளக் கருத்தும் அதன் தன்னிச்சையான இயல்பும், ஒருவர் உத்தியோகச் சார்பான, அல்லது

16. Livingstone Richard, The Future of Education, University Press, Cambridge, 1941, Waller Ross, D. Learning to Live. pp. 57–60, art and Educational Publishers, London, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் சார்பான கல்வியை மேற்கொள்வதை விலக்குவனவாகா; அவ்வாறு விலக்குதலும் வேண்டியதில்லை; அவர் உத்தியோகத் துறையில் தகுதியும் காலத்துக்கேற்ற திருத்தமும் பெறுதற் பொருட்டாயினும், உயர்ந்த சம்பளம், நியமனம் ஆகியவற்றைப் பெறுதற்குத் தம்மைத் தகுதியுடையவராக்கிக் கொள்ளற் பொருட்டாயினும் அத்தகைய கல்வியை மேற்கொள்ளலாம். ஆயின், உயர்தொழிற் றகைமைகளை நாடும் முயற்சி மிக்க முதிர்ந்தவருக்குமே, இத்தாராளக் கருத்து நிறைவு செய்து முடிக்கும் ஒரு கூறுபாட்டை நல்குகின்றது. அதுதான் " உள்ளத்தின் கட்டற்ற சுதந்திரமும் அதன் அழகும் " எனப்பட்டது. இப்பண்பை விருத்தி செய்யாவிட்டால் மனிதனுடைய ஆளுமையில் ஒரு பகுதி, எய்தக் கூடிய முழுமையான வளர்ச்சியைப் பெறுதே இருந்துவிடும். இனி, மிகத் தாராளமான பொருளில் பரீட்சையொன்றற்காகப் படிக்கும் படிப்பும் தாராளமானதாக அமையலாம்; அஃது அப்பாடத்திற் கொண்ட ஆர்வத்தினூற்றூண்டப்பட்டதாகலாம். ஆயின், முதிர்ந்த மாணவன் ஒருவன் தாராள மனப்பான்மையை விருத்திசெய்ய வேண்டினும், சுதந்திர உணர்வோடு கல்வியில் ஈடுபடவேண்டினும், நன்கு முழுமையுற்ற ஆளுமையுடையோனுக வேண்டினும், தன்னுடைய தொழில்பற்றிய அக்கறையைக் கடந்து நிற்றல் வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் ஈட்டத்தக்கவாறு கல்வியை நீட்டித்து, அதன் விளைவாகப் பள்ளிக்கூடப் பாடவிதானத்தில் ஏற்படும் நெருக்கத்தை நீக்கிவிடின், நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள் முறையான கல்வியைச் சிறந்த முறையில் நல்குமென்பது திண்ணம். இன்று இது எய்த முடியாத இலட்சிய எண்ணமாகத் தோன்றும். ஆயின், கல்வியியற் கொள்கையாளர், இளைஞரின் விளக்கத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் பொருட்களையும் அவர்மேற்றிணிக்காத, திருந்திய கற்பிக்கும் முறையொன்றுக்கு வழிகாட்டாதுவாளாவிருக்கமாட்டார். முதிர்ந்தோர் கல்வியின் முகவர் நிலையங்களும் விரிவும் விருத்தியாகவே, முதிர்ந்த குடியானவனும் தனது முதிர்ந்த வயதுக்குத் தக்கவொரு சூழ்நிலையில் தனது வளர்ச்சி நிலைக்கேற்ற கற்பிக்கும் முறைகளைக் கையாளும் " பள்ளிக்கூடத்துக்குப் போக" வழிவகுக்கப்படும்.

பள்ளிக்கூட முறையும் முறையான கல்வியும் வெற்றி பெற வேண்டுமாயின் பள்ளிக்கூடங்களுக்கும் அம்முறையான பள்ளிக்கூடங்கள் தொழிற்பட்டு வரும் சமூகத்தின் கல்வியின் மட்டம் தன்மை ஆகியவற்றுக்குமிடையில் அமுக்கத்திற் சமநிலையிருத்தல் வேண்டும். பள்ளிக்கூடம் பெருமைபெற்றதாயிருக்க வேண்டின் சமூகம் நன்கு கல்வியூட்டுவதாக இருத்தல் வேண்டும்; ஒழுங்கான முதிர்ந்தோர் கல்வி உயர்ந்த மட்டத்தில் இல்லாவிட்டால் அத்



தகைய கல்வியூட்டும் சமூகமும் இல்லையாம். யோன்துவாட்டுமில் என்பார் 'கல்வியூட்டும் செல்வாக்குக்கள்' என்பது பற்றி விழுமிய விரிவுரை யொன்று நிகழ்த்திய போது பின்வருமாறு கூறினர் 17

"எமது இயற்கையின் முழு நிறைவு நிலையை எட்டிப்பிடிக்கும் பொருட்டு நாம் எமக்குச் செய்வனவற்றையும் பிறர் எமக்குச் செய்வனவற்றையும் கல்வி தன்னகத்து அடக்கி நிற்கின்றது; அம் மட்டுமா? அஃது அப்பாலும் விரிந்துள்ளது; அதன் மிக விரிந்த பொருளில் அஃது எமது குணவியல்பிலும், புலனறிவிலும், மனவாற்றலிலும் (முற்றிலும் வேறான நேர் நோக்கங்களைக் கொண்டவையான) சட்டங்கள் அரசாங்கங்கள் தனிப்பட்ட கலைகள் சமூக வாழ்க்கை முறைகள் ஆகிய சடப் பொருள்களும் — இவையேயல்லாமல் எமது இச்சையில் தங்கியிராத காலநிலை, மண், உள்ளூர் நிலைமை போன்றபௌதிக உண்மைகளும் உண்டாக்கும் மறைமுகமான விளைவுகளையும் அடக்கி நிற்கின்றது."

முதிர்ந்தோர் கல்வியின் ஏனைச் சிறப்புக் கூறுகளைச் செயற்படுத்துதற்கு உயர்ந்த எழுத்தறிவு நிலை உண்டாகும் வரை காத்திருப்போமேல் நாம் கல்வியூட்டும் சமூகம் உருவாகும் நாளைப் பின்போட்டவராவோம். முதிர்ந்தோர் கல்வியென்பது முதிர்ந்தோருக்கு முதன்மையாக எழுத்தறிவு கற்பிப்பது என்றோ, குறையக் கற்றவர்க்குரிய கல்வி யென்றோ இகழ்வாகக் கருதும் மனநிலையிலிருந்து நாம் விடுதலை பெறல் வேண்டும்; மற்று, அதற்கு மாருக நாடு முழுவதும் தழுவும் முதிர்ந்தோர் கல்வித் திட்டங்களைத் தொடங்கி நடாத்துதல் வேண்டும். அவ்வாற்றல் ஒவ்வொருவரும் தாமே விரும்பி வாழ்நாள் முழுவதும் மேற் கொள்ளுமொரு முயற்சியினுல் தாந்தாம் எய்தக்கூடிய மிகவுயர்ந்த ஆன்மவளர்ச்சியை அடைதற் பொருட்டுக் கூடிய சிறந்த கல்வியைப் பெறுபவராவார்.

17. சென் அண்டுரூப் பல்கலைக் கழகத்தின் தலைவராகச் சென்ற போது நிகழ்த்திய தொடக்கப் பேருரை, 1867.

## இக்கட்டுரையில் வரும் கலைச்சொற்கள் சில

| | | |
|---|---|---|
| முரணுறு தருக்கம் | — | Dialectic |
| மெய்யுணர்வியல் | — | Philosophy |
| குடிமைப் பொறுப்பு | — | Civic Responsibility |
| உயிரினவியல் | — | Biology |
| பாடவிதானம் | — | Curriculam |
| இளந்தலைப்பருவம் | — | Adolescence |
| குடிமக்கட் சமத்துவக் கோட்பாடு | — | Egalitarian Doctrine |
| மக்கட் பேதகர் | — | Demogogue |
| வேதகாலம் | — | Vedic Age |
| அழகியல் | | Aesthetic |
| விருப்பு முயற்சி | — | Hobby |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் 1

# * யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம்

வ. மகாதேவன் அவர்கள்

யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணாம்புக் கற் பிரதேசமாகவும், சம நிலப் பிரதேசமாகவும் இருப்பதால் நதிகள் இல்லாமலிருக்கின்றது. மழைக் காலம் புரட்டாதி தொடக்கம் மார்கழி வரையாகையால் வறண்ட நிலப் பிரதேசமாகவும் இருக்கின்றது. வருடச் சராசரி மழை வீழ்ச்சி ஏறக்குறைய 50 அங்குலம். மழை பெய்யும் போது சுண்ணாம்புக் கற்களிலிருக்கும் நுண்டுளைகள் வழியாக உட்புகும் நீர், தரையின் கீழுள்ள குகைகளிலும் குன்றுகளிலும் தங்கி விடுகின்றது. இதனால் கிணறுகள் வெட்டி இந் நீரை தேவைகளுக்கு உபயோகிக்கக் கூடியதாக இருக்கின்றது. புத்தூரிலுள்ள நிலாவரை எனப்படும் வற்றாத கிணற்றிலிருந்து ஏறத்தாழ 100 ஏக்கர் தோட்டக் காணிக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக இருக்கின்றது.

**கடலேரிகள்:**

குடாநாட்டில் கடல் மட்டத்தின் கீழ் ஆழ்த்தப்பட்டிருக்கும் பாகங்கள் கடலேரிகளாய் இருக்கின்றன. குடாநாட்டினுள் இரண்டு பிரதான கடலேரிகளும், குடாநாட்டிற்குத் தெற்கே இரண்டு கடலேரிகளும் இருக்கின்றன. அவற்றின் பெயர்களும் நிலையங்களும் பின்வருமாறு:-

1. வடக்கே காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் மத்தியிலிருந்து தென் கிழக்கு நோக்கி ஆனையிறவு வரை வடமராட்சிக் கடலேரி பரந்திருக்கின்றது. கடலுடன் இணையும் இதன் வடபாகம் தொண்டைமானாறு எனப்படுகின்றது.

2. யாழ்ப்பாண நகருக்குக் கிழக்கே ஏறத்தாழ நான்கு மைல் தூரத்திலிருந்து வட கிழக்கு நோக்கி உப்பாறு எனப்படும் கடலேரி பரந்திருக்கின்றது. இது கடலுடன் இணையும் பாகத்தில் அரியாலை மோட்டார் வீதிப் பாலமும் புகையிரத வீதிப் பாலமும் இருக்கின்றன. (இப் பாலங்கள் முறையே செம்மணிப் பாலம் என்றும் நாவற்குழிப் பாலம் என்றும் அழைக்கப்படுவதுண்டு.)

[1945இல் வெளி வந்த யாழ்ப்பாணக் கடலேரித் திட்ட அறிக்கையில் (Webb Report on the Jaffna Peninsula Lagoon Scheme) தொண்டைமானாறு வட கடலேரி என்றும் உப்பாறு தென்

* The Jaffna Lagoon Scheme
by V. Mahadevan, B. A., Dip-in-Ed., (Ceylon)
Geography Teacher - Hindu College, Jaffna.



கடலேரி என்றும், வடமராட்சிக் கடலேரி கிழக்குக் கடலேரி என்றும் வேறு பெயர்கள் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.]

குடாநாட்டுக்குத் தெற்கேயிருக்கும் இரண்டு கடலேரிகளின் பெயர்களும் அவற்றின் நிலையமும் பின்வருமாறு:-

1. ஆனையிறவுப் பாலத்திற்கு மேற்கே இருப்பது யாழ்ப்பாணக் கடலேரி.

2. ஆனையிறவுப் பாலத்திற்குக் கிழக்கே இருப்பது ஆனையிறவுக் கடலேரி.

இக் கடலேரிகளிலிருக்கும் உப்பு நீரை நன்னீராக்கி நீர்ப்பாசனத்திற்கு ஏற்றதாகச் செய்வதும், கடலேரிகளைச் சூழ்ந்திருக்கும் உவர் நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதுமே யாழ்ப்பாணக் கடலேரித் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

**துவைனம் அறிக்கை:**

இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன் 1879இல் வட மாகாண அதிபதியாக இருந்த சேர் வில்லியம் துவைனம் என்பவரே யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம் சம்பந்தப்பட்ட முதல் அறிக்கையைச் சமர்ப்பித்தார். கடலேரிகளாக இருக்கும் பிரதேசங்கள் முன்பு விளை நிலங்களாக இருந்தபடியால் அணைகள் கட்டிக் கடல் நீர் உட் புகாமல் தடுத்து மீண்டும் அவற்றை விளை நிலங்களாக்கலாம் எனத் துவைனம் தமது அறிக்கையில் எழுதியிருந்தார்.

யாழ்ப்பாணத்திலே 16-10-1884இல் சூறவளி காரணமாகப் பெரு வெள்ளம் ஏற்பட்டுப் பெருஞ் சேதத்தையும் நஷ்டத்தையும் இழைத்தது. கடற்கரையில் நின்ற கப்பல் கடலின் கொந்தளிப்பினாலும் சூறவளியினாலும் இரண்டு அல்லது மூன்று மைல் உள்நாடு நோக்கி வீசியெறியப் பட்டனவாம்! இந்தப் பெருவெள்ளத்தை அவதானித்த 'துவைனம்' தமது அபிப்பிராயத்தை மாற்றி இத் திட்டத்தை மேற்கொள்வதனால் யாழ்ப்பாணம் வெள்ளக் காடாக மாறும் என்றும், வெள்ள அபாயம் அதிகரிக்கும் என்றும் காரணங்கள் காட்டிக் கடலேரித் திட்டத்தைக் கைவிட வேண்டும் எனச் சிபார்சு செய்தார்.

1884இல் நிகழ்ந்த வெள்ளப் பெருக்குக்குரிய காரணங்களை ஆராய்ந்திருந்தால் 'துவைனம்' இம் முடிவுக்கு வந்திருக்க மாட்டார். அவ் வெள்ளப் பெருக்குக்குச் சில அசாதாரண நிலைமைகள் காரணமாக இருந்தன. இவ் வெள்ளப் பெருக்கிற்கு முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் 1883 ஓகஸ்ட் மாதத்தில் சண்டா தொடுகடலில் (Sunda Strait) இருந்த கிராக்கட்டோவா (Krakatoa) என்னும் எரிமலை வெடித்துக் கக்கியதாலும் அதன் அதிர்ச்சியினலும் உண்டான தரைத் தோற்ற மாற்றங்கள், கடல்மட்டச் சீர்குலைவுகள் முதலியன வாம். எனவே, இரு நூற்ருண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது ஒரு நூற்ருண்டுக்கு ஒரு முறையோ ஏற்படக்கூடிய பெரு வெள்ளப் பெருக்கு காரணமாக யாழ்ப்பாணக் கடலேரித் திட்டத்தைக் கைவிடுமாறு 'துவைனம்' சிபார்சு செய்தது அவசரபுத்திபோல் தெரிகின்றது.

**ஹோர்ஸ்பேக் அறிக்கை:**

1913இல் வட.மாகாண அதிபதியாக இருந்த திரு. பெஸ்டிங் என்பவருக்கு இத் திட்டம் பற்றிய ஆலோசனைகள் கிடைத்ததும் 'துவைனம்' கூறிய காரணத்திற்காகவும், முதலாவது மகாயுத்தம் மூண்டதாலும் இவற்றை நிராகரித்தார்.

1916இல் மாகாண அதிபதியாக இருந்த திரு. ஹோர்ஸ்பேக் தமது அறிக்கையில் கடலேரித் திட்டத்துக்குப் பாதகமாக இன்னெரு காரணத்தை எடுத்துரைத்தார். கடலேரித் திட்டத்தை நிறைவேற்றினல் யாழ்ப்பாணத்தின் உப்பு எடுக்குந் தொழில் பாதிக்கப்படும் என்றும் இதனல் அரசாங்கத்தின் வருமானம் குறையும் என்றும் கூறியிருந்தார். இந்தக்காரணமும் விசித்திரமானதாகவே இருக்கின்றது. அக்காலத்தில் இலங்கையில் வருடந்தோறும் எடுக்கப்பட்டுவந்த 1,50,000 அந்தர் உப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து 70,000 அந்தரே பெறப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள உப்பளங்களை மூடவேண்டியேற்பட்டால் வேறு உப்பளங்களை விஸ்தரித்துத் தேவையான உப்பைப் பெற்றிருக்கலாம். மூடும் உப்பளத்தில் கூலிவேலை செய்வோருக்குக் கடலேரித்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வேறு வேலைகள் கிடைத்திருக்கும். இதனல் அரசாங்க வருமானம் குறையும் என்று கருதி கடலேரித் திட்டத்தை நிராகரிக்குமாறு ஆலோசனை கூறியது பொருத்தமான ஒரு காரணமாகத் தெரியவில்லை.

**வடமராட்சியில் மாதிரித் திட்டம்:**

இந்தக் காரணத்துக்காகக் கடலேரித் திட்டத்தை முற்ருகக் கைவிடவேண்டும் எனத் திரு. ஹோர்ஸ்பேக் சிபார்சு செய்யாமல் வடமராட்சிக் கடலேரியில் ஒருமாதிரித் திட்டம் அமைத்துப் பரீட்சித்துப் பார்க்கலாம் என 30-3-1916இல் பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அறிக்கை அனுப்பினர். இதனல்



முடிக்குரிய 8,500 ஏக்கர் நிலமும் தனிப்பட்டவருக்குரிய 3,000 ஏக்கர் நிலமும் நன்மையடையுமெனக் கூறியிருந்தார்.

சாவகச்சேரி — பருத்தித்துறை வீதியிலிருக்கும் மதகுகளைப் பலகைகளால் அடைக்கக்கூடிய முறையில் அமைத்து இம் மாதிரித் திட்டத்தை ஆரம்பிக்கலாமென ஆலோசனை கூறினர். வெள்ளக் காலங்களில் இப் பலகைகளை எடுக்கவேண்டியதவசியம்.

நீர்ப்பாசனப்பகுதியினர் 5,300 ரூபாய் செலவில் தேவையான வேலைகளைச் செய்து முடித்ததும் 1920இல் வடமராட்சிக் கடலேரி மாதிரித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பலகைகளைப் பொருத்துவதற்கும் கழற்றுவதற்கும் ஓர் ஓவசியர் (மேற்பார்வையாளர்) நியமிக்கப்பட்டார். சில காலத்திற்குப்பின் இவ்வேலை கிராம விதானையிடம் ஒப்படைக்கப்பட்டது. மழை காலங்களில் இப் பலகைகள் ஊதிவிடுவதால் கழற்ற முடியாமற் பலமுறை கஷ்டங்களைக் கொடுத்தன.


1920இல் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம் கடலேரித்திட்டம்தான் என்று விவசாயிகள் முறையிட்டனர். ஆனல் உண்மையான காரணம் அவ்வருடத்திற் பெய்த அதிக மழையேயன்றி வேறில்லை. 1921, 1922, 1923 ஆகிய வருடங்களில் வெள்ளச்சேதம் இன்றிஇத் திட்டம் திருப்திகரமாக இயங்கியதும் விவசாயிகள் தம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டனர். கோடைகாலத்தில் உலர்ந்த கடலேரி வழியாகப் போக்குவரத்துச் செய்வதற்கு (நீர் இருப்பதால்) முடியாமலிருப்பதனல் வீதிகள் அமைத்துத் தரவேண்டும் என்று விண்ணப்பம் செய்தனர்.

வடமராட்சி மாதிரிக் கடலேரித்திட்டம் நடைமுறையில் இருந்து நான்கு வருடங்களானதும், 1923இல் கேள்விக்கொத்து மூலம் அபிப்பிராயம் திரட்டப்பட்டது. திட்டத்தை ஆதரிப்பவரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. கரவெட்டி கிழக்கு, துன்னலை தெற்கு, போன்ற பகுதிகளில் பல புதிய இடங்கள் நெல் வயல்களாக்கப்பட்டன. விளைச்சலின் அளவு பல இடம்களில் அதிகரித்திருந்தது. கோடைகாலத்தில் ஆடு மாடுகள் கடலேரி நீரைக் குடிக்கக்கூடியதாக இருந்தது. கடற்கரையோரப் புல் வெளிகளில் புல் செழித்துவளரத் தொடங்கியது. சிலர் தமது கிணற்றுநீர் நன்நீராகிவிட்டதெனவும் கூறினர்.

இத் திட்டத்தினல் பல நன்மைகள் ஏற்பட்டமையால் ஏனைய கடலேரிகளிலும் இத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்ற கொள்கை உறுதியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ஆம் வருட மளவில் யாழ்ப்பாணக் கடலேரிகளை நன்னீ ரேரிகளாக்கும் திட்டம் கட்டாயமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும் எனச் சட்டநிருபண சபையில் உறுப்பினராக இருந்தவரும் பருத்தித்துறைப் பிரமுகருமான காலஞ்சென்ற திரு. கே. பாலசிங்கம் வற்புறுத்தினர்.




'வெப்' அறிக்கை:

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடலேரித் திட்டத்தை விபரமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட பெரும் பிரிவு நீர்பாசன எஞ்சினியரான திரு. எவ். ஆர். ஜி. வெப் 1945இல் தமது விரிவான அறிக்கையை வெளியிட்டார். இதன் பின்பு யாழ்ப்பாணக் கடலேரித் திட்டத்துக்கு "பாலசிங்கம்—வெப் திட்டம்" என்ற பெயருங் கிடைத்தது.

'வெப்' அறிக்கையில் யாழ்ப்பாணக் கடலேரிகள்பற்றிக் கொடுக்கப்பட்டிருந்த சில புள்ளி விபரங்கள் பின்வருமாறு:

**கடலேரிகளின் பரப்பளவு:**

வடமராட்சிக் கடலேரி: 30 சதுரமைல்.
உப்பாறு: 10 சதுரமைல்.

**நீரேந்து பரப்பின் அளவு:**

வடமராட்சிக் கடலேரி: 115 சதுரமைல்.
உப்பாறு: 85 சதுரமைல்.



கடலேரியைச் சூழ்ந்திருக்கும் பயிரிடப்படாத நிலத்தின் பரப்பு: 17.15 சதுரமைல் அல்லது 10,967 ஏக்கர்.

நீரேந்து பரப்பில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு. 30.03 சதுரமைல் அல்லது 20,500 ஏக்கர்.

**நில உபயோக விபரம்:**

1, ஏறத்தாழ 25,000 ஏக்கர் பிரதேசத்தில், வருடத்தில் அதிகமாதகாலத்திற்கு உப்பு நீர் பரந்திருப்பதால் உப்பு எடுப் பதற்கும் குறைந்ததர மீன்பிடித் தொழிலுக்குமே பயன் தரக் கூடியதாக இருக்கின்றது.

2. சுமார் 11,000 ஏக்கர் பிரதேசம் காலத்துக்குக் காலம் உப்பு நீரால் ஆழ்த்தப்படுவதால் எவ்வித உபயோகமும் இன்றி இருக்கின்றது.

3. சுமார் 20,000 ஏக்கர் பிரதேசம் நெல்விளை நிலமாக இருக்கிற போதிலும், உப்பு நீரால் பாதிக்கப்படுவதாயும், விளைச்சல் குறை வானதாயும் இருக்கின்றது.

கடல்நீர் கடலேரிக்குள் புகாமல் அணைகள் கட்டப்பட்டால் மேலே 1இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் நன்னீரேரியாகவும், 2இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் விளை நிலமாகவும், 3இல் குறிப் பிடப்பட்டுள்ள நிலம் உப்பு நீரால் பாதிக்கப்படாத நிலமாகவும் கூடிய விளைச்சலைக் கொடுக்கும் நிலமாகவும் மாறிவிடும் எனத் திரு. வெப் தமது அறிக்கையில் கூறினர்.

**குடாநாட்டில் திட்ட வேலைகள்**

வடமராட்சிக் கடலேரியை நன்னீரேரியாக மாற்றுவதற்கு அணைகள் கட்டும் வேலைகள் 1947 இல் ஆரம்பமாகி 1953 இல் முடிவடைந்தன. தொண்டைமானுற்றில் கட்டப்பட்டுள்ள 613 அடி நீளமான அணைக்கட்டில் 200 அடி கொங்கிறீற்றினல் கட்டப்பட் டுள்ள மேலதிக நீர் வடியும் அணையாகவும் (Spillway Dam) எஞ் சிய 413 அடி நீளமான பாகத்தில் 18 மதகுக் கதவுகளும் பொருத் தப்பட்டிருக்கின்றன. வடமராட்சிக் கடலேரித் திட்டத்தினல் சுமார் 15,000 ஏக்கர் விளைநிலமாக்கப்படும்.

உப்பாற்றை நன்னீரேரியாக்குவதற்கு அரியாலைப் பாலத்தின் கீழும் கடல் நீர் புகாமல் ஒரு அணை கட்டப்பட்டிருக்கின்றது.

**ஆனையிறவுக் கடலேரித் திட்டம்**

பிரதி நீர்ப்பாசன அதிபதியாக இருக்கும் திரு. எஸ். ஆறுமுகம் 1954 ஒக்டோபரில் எழுதிய ஒரு கட்டுரையில் ஆனையிறவுக் கட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேரித் திட்டம் பற்றிய விபரங்களை வெளியிட்டார். சுமார் 14,400 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஆனையிறவுக் கடலேரியினுள் கனகராயன் ஆறு, நெதலி ஆறு, தெரேவில் ஆறு போன்ற நதிகள் பாய்கின்றன. ஆனையிறவுப் பாலத்தின் கீழும், கிழக்கே சுண்டிக் குளத்துக்கு அண்மையிலும் அணைகள் கட்டிக் கடல்நீரைத் தடை செய்து ஆனையிறவுக் கடலேரியை நன்னீரேரியாக்கலாம். கிழக்கே அமைக்கப்படும் அணை ஒன்றேகால் மைல் நீளமானதாகவும் மேற் பாகத்தில் ஒரு மோட்டார் வீதியை உடையதாகவும் இருக்கும்.

அதன் பின்பு ஆனையிறவுக் கடலேரியை வடமராட்சிக் கடலேரியோடு ஒரு கால்வாய்மூலம் இணைக்கலாம். இக் கால்வாய் மான்தலைப் பிள்ளையார் கோவில் அண்மையாக முள்ளியான்வரை செல்லும். இது ஆனையிறவுக் கடலேரியை நன்னீரேரியாக்குவதற்குப் பயன்படும். கனகராயன் நதியின் பெருக்கு நீர் வடமராட்சிக் கடலேரியின் நீரை நன்னீராக்குவதற்கும் உதவும். இப்படியாக இணைக்கப்பட்டதும் கனகராயன் ஆற்றுநீர் தொண்டைமானாறுவழியாகவும், அரியாலைவழியாகவும் கடலை அடையும். இத் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறதென்பது தெரியவில்லை.

**மகாவலிகங்கையை இணைத்தால்!**

வடமாகாணத்தின் பிரதான நதியாகிய கனகராயன் ஆறு வவனியாவில் உற்பத்தியாகி, புளியங்குளம், மாங்குளம் வழியாகச் சென்று, இரணைமடுக் குளத்தை நிரப்பியபின் ஆனையிறவுக் கடலேரியை அடைகின்றது. இந் நதி கோடைகாலத்தில் வற்றிவிடுகின்றது. மகாவலிகங்கையைக் கால்வாய்மூலம் கனகராயன் நதி உற்பத்தியாகும் இடத்துக்குத் திருப்பினால் போதிய நீர் எல்லா இடங்களுக்கும் கிடைத்து வடமாகாணமும் யாழ்ப்பாணக்குடா நாடும் செல்வங் கொழிக்கும் பிரதேசமாக மாறிவிடுமென்பதைக் கூறவும் வேண்டுமா!

மகாவலிகங்கையை இப்படியாக வடமாகாணத்துக்குக் கால்வாய் வெட்டித் திருப்புவது சாத்தியமற்றது எனச் சிலர் கூறுகின்றனர். இவர்கள் இலங்கையின் தென்மேற் பகுதியில் ஒல்லாந்தர் வெட்டிய கால்வாய்களையோ அல்லது பிரான்சு, ஜெர்மனி, ருஷ்யா ஆகிய நாடுகளில் நதிகளை இணைப்பதற்கு வெட்டப்பட்டிருக்கும் கால்வாய்களையோ அவதானிப்பார்களேயானால் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதை யார் நிறைவேற்றுவார்கள் என்பதுதான் இப்போதைய சிக்கல்.

("ஈழநாடு" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.)

புவியியல் 2

# *இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி

— செ. மனோகரன் அவர்கள் —

**கைத்தொழில் விருத்தியின் அவசியம்:**

இலங்கை, பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடாகவே இருக்கின்றது. இன்னும் நாட்டின் இயற்கை வளங்கள் இக்காலத் தொழில்நுட்ப முறைகளை அனுசரித்து விருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தை நம்பிச் சீவனம் நடத்திவருதலால் விவசாய நிலத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. நாட்டுப்புறங்களில் வாழும் மக்களுள் மூன்றில் இரண்டிற்கு அதிகமானவர் விளைநிலங்களுள் மூன்றிலொன்றிலிருந்து தமது உணவைப் பெற்றுக்கொள்பவராய் இருக்கின்றனர். ஏறக்குறைய 40 லட்சம் மக்கள் 15 லட்சம் ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பில் விளையும் நெல்லையும் ஏனைய உணவுப் பொருட்களையும் நம்பியே வாழ்ந்து வருகின்றனர் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. நாட்டின் மொத்த வருமானத்தில் 5% தொடக்கம் 8% வரைதான் கைத்தொழில்களிலிருந்து கிடைக்கின்றதென்ற உண்மை எமது பொருளாதாரத்தில் கைத்தொழில்கள் வகிக்கும் இழிவான நிலையை உணர்த்துகின்றது. செறிந்த பிழைப்பூதியப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலங்கள் நாட்டின் சில பாகங்களில் மட்டும் இருப்பது விவசாயநிலத்தில் குடியடர்த்தி அதிகமாக இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

சனத்தொகை வளர்ச்சி, நிலத்தட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம், உணவுத்தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குப் பயிர்ச்செய்கையை மேலும் பெருக்குவது தான் சாத்தியமான வழியென்று பொதுவாகக் கருதப்படுகிறது. அரசாங்கத்தின் ஆதரவுடன் குடியேற்றத் திட்டங்கள் ஐக்கிய தேசியக்கட்சியினால் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு குடியேற்றப்பட்ட மக்களின் முயற்சியினால் நாட்டுமக்களுக்குத் தேவையான உணவில் சுமார் 14%க்குக் கூடியஅளவு கிடைக்கின்றது என்பது உண்மைதான். இக்குடியேற்றத் திட்டங்கள் பல சிக்கல்கள் நிறைந்த அரசியற், சமுதாயப் பிரச்சினைகளைக் கிளப்பி இருக்கின்றன என்பதை யாவரும் அறிவர். விவசாயவிருத்திக்கு ஓர் எல்லையுண்டு, என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தக்கூடிய சுமார் 25 லட்சம் ஏக்கர்நிலம்

*Industrialisation in Ceylon
by C. Manoharan (Staff) Jaffna College.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. இதில் 600,000 ஏக்கர் நிலம் மாத்திரம் நீர்ப்
பாசனம் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றது. இந்த 600,000
ஏக்கர் நிலத்தில் மக்கள் குடியேற்றப்பட்டதும் குடியேற்றவிவ
சாயத் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதுதான்.
இத்தகைய விருத்தி சுமார் 45 வருடங்களுக்குத்தான் நிலைத்
திருக்கும் என்று உலகவங்கி அறிக்கை கூறுகின்றது. நீர்ப்பா
சன வசதிகளின்றி இருக்கும் மேட்டு நிலங்களில் இத்தகைய
விருத்திக்கேற்ற நிலைமைகள் இல்லை. பி. எச். பாமர் [B. H. Farmer]
"வரண்ட பிரதேசத்திலும் உயர் நிலங்களிலும் சாத்தியமான
தொழில்நுட்ப முறைகளை அனுசரித்து விவசாயக், குடியேற்றத்
திட்டங்களை நிறுவுவதற்கு ஓர் எல்லை இருக்கிறது. நெல்விளையும்
இடங்களிலும் பார்க்க நீர்பாசனமில்லாத இடங்களில் குறைந்த
எண்ணிக்கையுள்ள மக்களையே குடியேற்றலாம்" என்று கூறியி
ருக்கிறார். ஆண்டுதோறும் சனத்தொகை 2,25,000 ஆக ஏறிக்
கொண்டு வருகிறபோதும் சராசரியாக வருடமொன்றுக்கு 25,000
மக்களையே குடியேற்றக்கூடியதாக இருக்கிறது. இலங்கையின்
பத்தாண்டுத் திட்டக்கர்த்தாக்களும் "விவசாய விருத்திக்கு எஞ்சி
யிருக்கும் வசதிகள் பெருகிவரும் சனத்தொகைக்கு நிரந்தரமான
ஒரு தீர்வை அளிக்கமாட்டாது", என்ற முடிவிற்கு வந்திருக்
கின்றனர். ஆகவே கைத்தொழில் விருத்திதான் பெருகும் சனத்
தொகைக்கு வேலைபெறும் வசதிகளை அளிக்கும்.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வுகாண்பதற்கு மாத்
திரமன்றி, நாட்டுமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்
கும் கைத்தொழில் விருத்தி அவசியம். பலதரப்பட்ட இயற்கை
வளங்களைத் திறப்படப் பயன்படுத்துவதற்குக் கைத்தொழில்
விருத்திதான் வகைசெய்யும். போதிய மூலதனமில்லாத இலங்கை
போன்ற நாடுகளில் இயற்கை வளங்களைச் சிக்கனமானமுறைக
ளிற் பயன்படுத்த வேண்டியது அவசியம். சிக்கனமான வழிக
ளில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கும், மிகக் கூடிய
நன்மைகளைப் பெறுவதற்கும் இயற்கைவளங்களைக் கவனமாக
ஆராய்ந்து அளவீடு செய்ய வேண்டும். வளங்களில் கனிப்பொருட்
கள், விவசாய மூலப்பொருட்கள், காடுகள் கால்நடைகள், கட
லிலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்கள், எரிபொருட்கள் முத
லியன அடங்கும். மக்களின் தேவைகளுக்கமைய இவ்வளங்களைப்
பயன் படுத்தவேண்டும். திறமைமிக்க தொழிலாளர்களையும், உத
விப் பொருட்களை வாங்குபவர்கள் மக்களாக இருக்கின்றபடியால்,
சனத்தொகை விபரங்களையும் நன்கு கணக்கிட வேண்டும். பரந்த
அடிப்படையில் நாட்டின் வளங்களை அளவீடு செய்யாவிட்டால்
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் திட்டங்க



ளைத் தீட்டுவது மிகவும் கஷ்டமான காரியம். "நாட்டின் வளங்
களை அளவீடு செய்து கணக்கிடுவது அவசியமானது என்று
கருதி அதற்கு இடமளிப்பதற்குப் பத்தாண்டுத் திட்டக்கர்த்தாக்
கள் தவறிவிட்டனர்" என்று பேராசிரியர் குலரத்தினம் கூறுகி
றார். 881-ம் ஆண்டளவில் 37 லட்சம் மக்களுக்குப் படிப்படியாக
வேலைகளை உதவுவதே நோக்கமாகக்கொண்டு பத்தாண்டுத்திட்டம்
வரையப்பட்டுள்ளதென்றும், இந்தவடிப்படையில் திட்டமிடுவது
நாடு முழுவதினதும் பொருளாதார விருத்திக்கு நெடுங்கால அளவில்
பயனளிக்க மாட்டாது என்றும் அவர் அபிப்பிராயப்படுகின்றார்.
கவனமாகத் தீட்டப்பட்ட கைத்தொழில் விருத்தித் திட்டம் மக்
களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படும் என்
பதை எவரும் மறுக்க முடியாது.

கைத்தொழில் விருத்தி யென்பது விவசாயத்திற்கும் கைத்
தொழிலுக்கும் உள்ள சம நிலையைக், கைத்தொழில் சார்பாக
மாற்றியமைப்பது என்று மாத்திரம் நாம் விளங்கிக் கொள்ளக்
கூடாது. இக் காலச் சூழ்நிலையில் கைத்தொழில் விருத்தி நடை
பெற்றுக் கொண்டிருக்கும் போது விவசாயமும் தொடர்ந்து நிலைத்
திருக்கத்தான் வேண்டும். ஆரம்ப கட்டங்களில் கைத்தொழில்
விருத்திக்குத் தடைகள் ஏற்படாமல் இருப்பதற்காக விவசாயத்
திற்கும் கைத்தொழிலுக்கும் ஒரு சம நிலையை ஏற்படுத்த வேண்
டும். கைத்தொழில் விருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படு
மாயின் விவசாயம் உதாசீனம் செய்யப்பட்டு நாம் உணவுப்
பொருட்களைக் கூடிய அளவில் இறக்குமதி செய்ய வேண்டி நேரிட
லாம். இந்த நிலை ஏற்படாதவாறு தடை செய்தால் உணவு
இறக்குமதி செய்வதற்குச் செலவாகும் பணத்திற்குப் பிற நாடு
களில் இருந்து கைத் தொழிலுக்குத் தேவையான மூலதனப்
பொருட்களை வாங்கலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்
தில் இத்தகைய நிலைமை இந்தியாவில் ஏற்பட்டு உணவுப் பொருட்
கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. எனவே, பரந்த பயிர்ச்
செய்கை முறைக்கு இடமில்லாவிட்டால் செறிவான பயிர்ச் செய்கை
மூலம் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது
அவசியம். கைத்தொழிலுக்குத் தேவையான மூலதனப் பொருட்
களைப் பெறுவதற்கும் விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டும்.
விவசாய மூலப் பொருட்கள் சம்பந்தமான பல கைத்தொழில்
நிலையங்களை நம் நாட்டில் நிறுவலாம். உ-ம்:- தெங்குப் பொருட்
கள், றப்பர், புல்வகை, புகையிலை, கொக்கோ, நெய் விதைகள்
(Oil Seeds) பருத்தி, கரும்பு, தோல் வகை, மரம், உப்பு, பழ
வகை, காய்கறி வகை, மீன் முதலியன. ஆரம்ப காலங்களில் நுகர்
பொருட்களின் உற்பத்தி அவசியமென்று கருதப்படுமாயின் விவ
சாயத்தைப் பெருக்குவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் விவசாய விருத்தி அவசியமாகின்றது. கைத்தொழில் விருத்தியினால் சராசரியாகத் தனி மனிதனின் வருமானம் அதிகரித்து அவனுடைய கொள்வனவு வலுவும் (Purchasing Power) அதிகரிக்கும். உள்நாட்டு வியாபாரம் பெருக்கம் அடைவதற்கும், சராசரியாக ஏக்கரொன்றிற்கு விளையும் விளைச்சலின் அளவு ஏற்றமடைவதற்கும் கைத்தொழில் விருத்தி வகை செய்யும். நாட்டிற்குத் தேவையான அரிசியைப் பெற வேண்டுமானால் செறிவான பயிர்ச் செய்கைப்படி நெல் விளைவிக்க வேண்டும். (ஏனைய உணவுப் பொருட்களுக்கும் இம்முறையமையும்) மரம், முற்று நிலக்கரி (Peat) போன்ற மூலப் பொருட்களில் இருந்து நம் நாட்டிலேயே வளமாக்கிகளை (Fertilizers) தயாரிக்கலாம். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்திய அரசாங்கம் விவசாயிகளுக்கு வளமாக்கிகளை விநியோகித்திருக்குமானால் உணவு உற்பத்தி பன்மடங்கு அதிகரித்திருக்கும். நீர்ப்பாசன அணைகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் சீமெந்தைப் பெறுவதற்குக் கைத்தொழில் விருத்தி உதவும். விவசாய விருத்திக்குத் தேவையான ஆயுதங்களையும் இயந்திர சாதனங்களையும் இலங்கையிலே தொகுக்கும் வேலைக்கும் கைத்தொழில் வகை செய்யும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அல்ல இலங்கையில் கைத்தொழில் விருத்தி ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் (1939—45) ஏற்பட்ட பொருட்களின் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் பெரும் பங்கு பணத்தை முதலீடு செய்து பலவகையான தொழிற்சாலைகளை நிறுவியது. ஒரு வகையான திட்டமும் வகுக்கப்படாமல் தோற் பொருட்கள், ஒட்டுப் பலகை (Plywood), அசெற்றிக் திராவகம் (Acetic Acid), குயினைன், கழிவுப் பொருட்களிலிருந்து எஃகு, வனை பொருட்கள் (Ceramics), கண்ணடி, கடுதாசி ஆகியவை செய்வதற்கும் தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. தோல் தொழிற்சாலை, ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை நீங்கலாக ஏனைய தொழிற்சாலைகள் அனைத்தும் யுத்தத்திற்குப் பின் வெளி நாடுகளின் போட்டியால் பாதிக்கப்பட்டு மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குக் காரணங்கள் ஒழுங்கற்ற வரவு செலவுக் கணக்கு முறை, திறமையற்ற விற்பனவு முறை, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் குறைவான தரம் ஆகியவையென்று 1950இல் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையினர் தம் அறிக்கையில் கூறியிருக்கின்றனர். 1952இல் இலங்கையில் 53,500 பேர் வேலை செய்யும்



692 தொழிற்சாலைகள் இருந்தன என வெளியிடப்பட்ட புள்ளி விபர அறிக்கையிலிருந்து கைத்தொழில் விருத்தி அடைந்த தோல்வியை நாம் தெரிந்து கொள்ளலாம். மொத்தத் தேசிய வருமானத்தில் 5% கைத்தொழிலிலிருந்து பெறப் பட்டது. கடந்த எட்டு வருடங்களில் இந் நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை. மொத்தத் தேசிய வருமானத்தில் 8% கைத்தொழில்களிலிருந்து கிடைப்பதாகக் கிராமாபிவிருத்திக் குடிசைக்கைத் தொழிற் பகுதி அதிகாரி கூறுகிறார். கைத்தொழில் விருத்தியின் ஆரம்பக் கட்டங்களில் சில மாற்றங்கள் செய்யப்படாவிட்டால் சிறிதளவு முன்னேற்றம் தான் ஏற்படும்.

**ஆரம்ப காலத்தில் கைத்தொழில் விருத்தி செய்வதற்கேற்ற வழிவகைகள்:**

இலங்கையில் மூலதனம் குறைவாக இருப்பதாலும் தொழிலாளர் ஏராளமாகக் கிடைப்பதாலும், குறைந்த அளவில் முதலீடு செய்து ஆரம்பிக்கக் கூடிய தொழிற் சாலைகளையே முதன் முதலாகத் தொடங்க வேண்டும். சிறிய கைத்தொழில்களை நிறுவ வேண்டுமென உலக வங்கிக் குழுவினர் சிபாரிசு செய்திருக்கின்றனர். குடிசைக் கைத்தொழில்கள் உட்பட சிறிய கைத்தொழில்களில் தற்போது சுமார் 1,15,000 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனரென்று மதிப்பிடப்படுகிறது. பத்தாண்டுத் திட்டத்தை ஆராயும் போது 1,35,000க்கு மேற்பட்ட மக்களுக்கு சிறிய கைத்தொழில்கள் வேலை வழங்குமென்றும் பெரிய கைத்தொழில்கள் 1 லட்சம் மக்களுக்கு மட்டுமே வேலை வழங்கு மென்றும் தெரிய வருகிறது. கூடிய மக்களுக்கு இச் சிறிய கைத்தொழில்கள் வேலை வழங்குவதுமல்லாமல் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவைப்படும் சுமார் 270 கோடி ரூபாவில் ஐந்திலொரு பங்கிற்குக் குறைவான அளவு பணமே இவற்றின் விருத்திக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே பெரிய கைத்தொழில் நிலையங்களை அமைப்பதற்கு முன்னதாகச் சிறிய கைத் தொழில்களின் விருத்தியே இலங்கை போன்ற பின் தங்கிய நாடுகளுக்கு உகந்தது. இந்தியாவின் கைத்தொழில் விருத்தி குறித்துப் பேராசிரியர் ஸ்பேற் (Prof. Spate) விமர்சனம் செய்யும் போது நிலத் தட்டுப்பாட்டால் அவதியுறும் மேலதிகமான விவசாயிகளில் ஒரு பகுதிக்கு மட்டுமே பெரிய கைத்தொழில்கள் பயன் படும்; ஆதலால் இலங்கையில் மக்களின் சேமிப்புக் குறைவாக இருப்பதாலும், குறைந்த வருமானம் கிடைப்பதாலும், விவசாயத்திலும் கைத்தொழிலிலும் முதலீடு செய்வதற்குப் போட்டி இருப்பதாலும் சிறிய மூலதனங்கள் தேவைப்படும் கைத்தொழில் நிலையங்களையே நாம் நிறுவவேண்டும். பல மேற்கு நாடுகளிலும் இந்தியா, ஜப்பான் போன்ற கிழக்கு நாடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் சிறிய கைத்தொழில்கள் பொருளாதார விருத்தியில் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

இரண்டாவதாகச் சுலபமான தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு செய்யக்கூடிய சிறிய கைத்தொழில்களையே ஆரம்ப கட்டங்களில் நாம் இலங்கையில் தாபிக்க வேண்டும். தொழிலாளர்கள் வினையாண்மையற்றவர்களாக (unskilled) இருப்பதால் இது அவசியம்.

மூன்றாவதாக, நம் நாட்டில், நிலக்கரி, மண்ணெய் போன்ற எரிபொருட்கள் இல்லாதபடியாலும் ஒரு குறித்த அளவு நீர் மின் வலுவே (Hydro Electric Power) கிடைப்பதாலும் ஆரம்ப கட்டங்களில் சிறிதளவு வலுவினால் இயங்கக்கூடிய தொழிற்சாலைகளையே நாம் தாபிக்க வேண்டும்.

நான்காவதாக, இலங்கையில் கிடைக்கும் விவசாய, கனிப்பொருள் மூலப் பொருட்களை ஆதாரமாகக் கொண்டே சிறிய கைத்தொழில்களை நிறுவ வேண்டும். நுகர் பொருட்களை (Consumer goods) உற்பத்தி செய்வதோடு மூலப் பொருட்களைச் சீர் செய்யும் தொழில்களையும் (உ-ம் உலோகப் பொருட்களைத் தூய்மைப்படுத்தல்) செய்வதில் ஈடுபடவேண்டும். இலங்கையின் கனிப் பொருட்கள் இரும்பு, பென்சிற்கரி (Graphite) வெண்களி, களிவகை, சுண்ணும்புக்கல், படிகம், (quartz) மைக்கா (mica) ஆகியன. இரும்புப் படிவுகள் நீங்கலாக ஏனைய கனிப்பொருட்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இந்தியா போன்ற வெளிநாடுகளின் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருப்பதோடு பெரிய தொகுக்கப்பட்ட இயந்திரங்கள் இரும்பு எஃகு தொழிலுக்குத் தேவைப்படுவதால் ஏனைய கனிப்பொருட்களைச் சிறிய தொழில் நிலையங்களில் சீர் செய்து ஏற்றுமதி செய்யலாம். ஆனால் இல்மனைற்று (Ilmenite) தோறியம் (Thorium) மொனசைற்று (Monazite) போன்ற அபூர்வ கனிப்பொருட்களை இப்போது ஏற்றுமதி செய்யத்தான் வேண்டும்.

இறுதியாகப் பின் தங்கிய நாடுகளில் விற்பனை வசதி குறைவாக இருப்பதால் கைத்தொழில்களும் சிறிய அளவில்தான் இருக்க வேண்டும். கொள்வனவு வலு இலங்கையில் குறைவானதாகவே இருக்கிறது. இலங்கையில் நெசவுப் பொருள்களின் நுகர்ச்சி ஏனைய கைத் தொழில் விருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க, மூன்றிலொன்றாகவே இருக்கிறதென்று கூறுகின்றனர். எனவே ஆரம்ப கட்டங்களில் இலங்கையில் கைத்தறிகளையும் இயந்திரம் இணைக்கப்பட்டிருக்கும் சிறிய தறிகளையும் உபயோகித்தே நெசவு செய்ய வேண்டும். மேலும் இலங்கையில் பெருமளவில் உபயோகிக்கப்படும் நுகர் பொருட்களை உற்பத்தி செய்வதிலேயே நாம் ஆரம்பத்தில் கவனம் செலுத்த வேண்டும். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் விற்பனவு செய்யக் கூடிய சில பொருட்களை இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கலாமென்று சிலர் கூறுகின்றனர். சப்பாத்துகள், சேட்டுகள், ஆகியவற்றை இலங்கை பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யலாம்; (இப்போது பர்மா இப் பொருட்களை இங்கிலாந்திலிருந்து இறக்குமதிசெய்கின்றது.)



நன்கு திட்டமிட்டு இத்தகைய சிறிய கைத்தொழில்களை இலங்கையில் நிறுவினால் விரைவாக நல்ல பயன் கிடைக்கும். இத்தகைய சிறிய கைத்தொழில்களை நாடு முழுவதும் பன்முகப்படுத்துவது (Decentralise) அவ்வளவு கஷ்டமான காரியமன்று. வழமையான கைப்பணித் திறனும் (Craftmanship) வினையாண்மையும் (Skill) உள்ள இடங்களிலே இத்தகைய தொழில்களை நிறிவிக் கொள்ளலாம். இச் சிறிய கைத் தொழில்கள் நாட்டுப் புறங்களை விருத்தி செய்வதற்குப் பயன்படுமென்பதைக் கூறத் தேவையில்லை. நாட்டுப் புறங்களில் சிறிய கைத்தொழில்கள் பரவும் போது இத்தொழில்களில் முதலீடு செய்வதற்குப் பல உள்ளூர் முயற்சியாளர்கள் (Local entrepreneurs) முன் வருவர்.

நாடு முழுவதும் சிறிய கைத்தொழில்கள் விருத்தி செய்யப்பட்டால் எதிர் காலத்தில் பெரிய கைத்தொழில்களை நிறுவுவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் பல தொழில் நுட்பத் திறனும் நிர்வாகத் திறனும் உள்ள தொழிலாளர்களைப் பயிற்றுவிக்க முடியும். வினையாண்மைத் தொழிலாளர்களின் உதவியின்றி இலங்கை போன்ற நாடுகளில் விரைவாகக் கைத்தொழில் விருத்தி செய்ய முடியாது. இதற்கு இப்போதிருக்கும் கைத்தொழில் நிலையங்களை நவீன முறையில் அமைக்க வேண்டும். சாத்தியமான இடங்களில் புதிய சிறிய கைத்தொழில்களைத் தாபிக்க வேண்டும்.

இத்தகைய சிறிய கைத்தொழில்களை நிறுவினால் நுகர் பொருட்களின் இறக்குமதியைக் குறைக்கலாம். கைத்தொழில் விருத்திக்குத் தேவையான மூலதனப் பொருட்களின் இறக்குமதியை அதிகரிக்கலாம்.

சிறிய கைத்தொழில் நிலையங்களில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்வதால் கிடைக்கும் வருமானத்தை உபயோகித்துக் கைத்தொழில் விருத்தியை மேலும் பெருக்குவதற்குத் தேவைப்படும் மூலப் பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து வாங்கலாம். இந்தியாவின் வியாபாரம் இம் மாதிரி மாற்றமடைவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவதானிக்கலாம். ஆகவே, இலங்கையில் பெருமளவில் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு முன்னதாக அரம்பக் கட்டங்களிற் சிறிய கைத்தொழில்களை விருத்தி செய்வதே அவசியம். பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எமக்குத் தேவைப்படுவதால் இலங்கையில் தேவையான எல்லாக் கைத்தொழிற் பொருட்களையும் உற்பத்தி செய்தல் சாத்தியமான காரியமன்று என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

**இலங்கையில் விருத்தி செய்யப்பட வேண்டிய சிறுகைத்தொழில்களும் பத்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முயற்சிகளும்:-**

சிறிய கைத்தொழில்களுள் வழமையான கைப் பணிகளும் குடிசைக் கைத்தொழில்களுள் அடங்கும். தனித்து வாழ்ந்து வந்த பல சமூகத்தினருக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதே குடிசைக் கைத் தொழில்களின் நோக்கமாக இருந்தது. மட்பாண்டம் வனைதல், தச்சுவேலை, கைத்தறி நெசவு, பாய் இழைத்தல், கயிறு முதலியன திரித்தல், பதனீரிலிருந்து பனங்கட்டி முதலியன செய்தல் போன்ற பலவகைப்பட்ட தொழில்கள் குடிசைக் கைத்தொழில்களாக இருக்கின்றன. கலைத்திறன் சிற்பத்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சில பொருட்கள் பித்தளை, வெள்ளி ஆகிய உலோகங்களினல் செய்யப்பட்டன. களி, பிரம்பு, மூங்கில் புல்வகை, சிரெட்டை போன்ற பல பொருட்களும் இவ் வேலைகளுக்கு உபயோகிக்கப்பட்டன.

கிராமப்புற மக்களுள் பெரும்பான்மையோருக்குக் குடிசைக் கைத்தொழில்களிலிருந்து வருமானம் கிடைக்கிறது. இக் கைத்தொழில்கள் நவீன முறையில் புதுக்கி அமைக்கப்படுமாயின் தேசிய வருமானமும் பெருகுவதற்கு வகையேற்படும். தொழிலாளரின் உதவியைக் குறைப்பதற்குச் சுலபமான இயந்திர சாதனைகளை உபயோகித்தல், நிர்வாகத்தைச் சீர் செய்தல், பொருள்களின் தரத்தை உயர்த்துதல், ஒழுங்காக உற்பத்திப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி வகுத்தல் போன்ற விஷயங்களில் அக்கறை காட்ட வேண்டும். ஆரம்ப கட்டங்களில் உள்நாட்டிலும் வெளி நாட்டிலுமுள்ள பெரிய கைத் தொழில்களினல் ஏற்படக் கூடிய போட்டியைச் சமாளிக்கக் கூடிய வகையில் இவற்றை அமைக்க வேண்டும்.

பத்தாண்டுத் திட்டத்தின் கர்த்தாக்கள் சிறிய கைத்தொழில்களை நிறுவவேண்டியதன் அவசியத்தையும் இப்பொழுதுள்ளவற்றைப் புனரமைப்புச் செய்து சீர்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கின்றனர். இப்படியாகப் புதிய தொழில்களை நிறுவுவதற்கும், இருப்பனவற்றைச் சீர்செய்து புதுப்பிப்பதற்கும் போதிய வசதிகள் இருக்கின்றன.



முதலாவதாக நெசவுத்தொழிலை சீர்செய்து நிறுவுவதில் நாம் கவனம் செலுத்தவேண்டும். கைத்தொழில் விருத்தியை மேற்கொள்ளும் எந்த நாடும் முதன் முதலாக உள்நாட்டில் நெசவு நிலையங்களை நிறுவுதல் சரித்திரம் கண்ட உண்மை. நெசவுத் தொழிலின் நுட்பத்தையும் வினையாண்மையையும் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். பத்தாண்டுத் திட்டத்தில் இதற்கு வகை செய்யப் பட்டிருக்கிற போதிலும், மேலும் இதைவிருத்தி செய்யலாம். எதிர்காலத்திற் பெரியஅளவில் நெசவுத் தொழிலை மேற்கொள்வதற்கு முதற்படியாகக் கைத்தறி நெசவும் பன்முகமுறையில் நிறுவப்பட்ட இயந்திரத்தறி நெசவும் நடைபெறுவதற்குப் பத்தாண்டுத் திட்டம் இடமளித்திருக்கிறது. ஏறக்குறைய 18,000 மக்களை வேலையில் ஈடுபடுத்தும் சுமார் 3 கோடியார் சீலை நெசவு செய்யப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது. 1963 அளவில் இலங்கை மக்களின் தேவைக்குச் சுமார் 16 கோடியார் நெசவுப் பொருள்கள் அவசியமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. மக்களின் விருப்பு வெறுப்பிற்கிணங்கப் பல்வகையான நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது.

தென்னந் தும்பிலிருந்து கயிறுதிரித்தல், தச்சுவேலை, கட்டிட வேலைகளுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் வேலை முதலியன விருத்திசெய்வதற்குரிய ஏனைய தொழில்களாகும். இயந்திரங்களை உபயோகித்துக் கயிறு திரிப்பதற்கும், தும்புப் பாய்களைத் (Matting) தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பத்தாண்டுத் திட்டம் செங்கற்கள் செய்வதைப் பெருக்குவதற்கும் சிபாரிசு செய்திருக்கிறது. இப்போது சுமார் 30 கோடி செங்கற்கள் செய்யப்படுகின்றன, 1961 இறுதியில் இதை மும்மடங்கு அதிகரிப்பதற்குப் பத்தாண்டுத் திட்டம் எத்தனிக்கிறது. இயந்திர சாதனங்கள் தச்சுவேலையிலும் புகுத்தப்பட இருக்கின்றன. கட்டிடங்களுக்குத் தேவையான பலவகைப்பட்ட உலோகப் பொருட்களைத் தயாரிப்பதற்குப் பலவகையான தொழில் நிலையங்களை (Work Shops) நிறுவுவதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பெருமளவிற்கு உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களை உபயோகித்துத் தீப்பெட்டிகள், சவர்க்காரங்கள், இனிப்பான தீன் பண்டங்கள் ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலாளிகள் செய்கின்றனர். இவற்றையும் புனரமைப்புச் செய்து விருத்தி செய்யலாம். சொக்களேற்றுகள், குளிர்ந்தபானங்கள், பியர் (Beer) சிகரெட்டுகள், பழவகைகளைத் தகரங்களில் அடைத்தல், கண்ணடிப் பாத்திரங்கள், பன்னியன்கள், பருத்தி நெசவு ஆடைகள், பாத அணிகள், தீந்தைகள், றப்பர் பொருட்கள் அடைக்கும் பெட்டிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்வகை வடித்தல் போன்ற பல பொருட்களின் உற்பத்தி தனிப்பட்டவர்களின் கையில் இருக்கின்றது. உயர்ந்த தரமான பீங்கான் பாண்டங்களையும் செய்யலாம், செயற்கைப் பட்டுப்பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், விஞ்ஞான கண்ணுடிப் பொருட்கள் போன்றவற்றையும் செய்யலாம். இக்கால நிலைமையில் நாட்டில் பரந்த அளவில் உபயோகிக்கப்படும் நுகர் பொருட்களை உற்பத்திசெய்யக்கூடிய சிறிய கைத்தொழில்களை விருத்தி செய்வதே சிறந்த முறையென்று உலக வங்கிக் குழுவினரும் கூறியிருக்கின்றனர்.

சிறிய கைத்தொழில்கள் ஈட்டக்கூடிய நன்மைகள், எல்லாச் சிக்கல்களையும் ஆராய்ந்து அவற்றைத் தொடர்புபடுத்தி நிருவகித்து வருவதில் தங்கியிருக்கிறது. திறமையான நிருவாக அமைப்பின்கீழ் இச்சிறிய கைத்தொழில்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுமென்பதைக் கூறத்தேவையில்லை பத்தாண்டுத் திட்டம் ஒரு குடிசைக் கைத்தொழில் நிருவாகசபை தாபிக்கப்படவேண்டுமென சிபாரிசு செய்திருக்கிறது. நிருவாகத் திறனும் வேலைத்திறனும் கைத்தொழில் விருத்திக்கு மிகவும் முக்கியமானவை.

SPORT WEAR AND FLANNELS

Retain their Original Smart Appearance

We Give Quick Service

QUEEN'S LAUNDRY

— DYERS AND DRY CLEANERS —

No. 2, Torrington Road, KANDY.

★

OUTSTATION ORDERS EXECUTED PER V. P. P.

புவியியல் 3

# வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டம் - புதிய விளக்கம்

இக்கட்டுரையின் ஆசிரியர்
கலாநிதி ஜி. ஜி. ஆர். தம்பையாப்பிள்ளை
( Lecturer in Geography, University of Ceylon )

ராதிருக்கின்றனர். மத்திய கோட்டுக் கீழ்க்காற்று (தடக்காற்று), பூமியின் மேற்பரப்பையடுத்து வீசும் மேலைக்காற்று (தென்மேற்கு முரண்தடக்காற்று), முனைவுக் கீழ்க்காற்று எனப் பொதுவாகக் கொள்ளப்படும் பிரதான காற்றுத்தொகுதிகள் வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டத்தோடு தொடர்புடையன. ஆயின், உலகம் எங்கணும் பரந்துள்ள காற்றோட்டங்களுக்கும் தரைக்காற்று கடற்காற்று முதலியவற்றிற்கும் உள்ளதெடர்பு; பருவக்காற்றுக்கும் இடைவிடாது தொடர்பாக நிகழும் சுறுவளிகள், இவைபோன்று வளிமண்டலத்தில் ஏற்படும் ஏனைய வானிலைத் தன்மைகள் என்பவற்றிற்குமுள்ள தொடர்பு முதலியவற்றை அறிவது கடினமாகும். வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டம் தனிபபட்ட பகுதிகளில் சிறிய அளவில் உண்டாகும் காற்றோட்டத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுக் காற்றுச் சுற்றோட்டம் நிலையாகத்தொடர்ந்து ஏற்படுவதற்குத் தனிப்பட்ட இடங்களிலுள்ள சிறிய காற்றோட்டங்களே காரணமாக விருக்கின்றன. வளிமண்டலத்தில் நிகழும் காற்றோட்டத்தின் உண்மையான தன்மை தெளிவாகப் புலனாகாததால் 'பொதுக் காற்றுச் சுற்றோட்டம்பற்றிய கொள்கையை' அடிப்படையாகக்கொண்டு ஆராய்தல் நன்று. சராசரிமுறையைக் கையாண்டு வளிமண்டலத் தன்மைகள் தேவைக்கேற்ப வேறுபடுத்தப்படுகின்றது. பொதுச்சுற்றோட்டம் பற்றிய கொள்கை பூமியின் மேற்பரப்பில் நிகழும் காற்றோட்டம் அதற்குமேலே (Upper air) நிகழும் காற்றோட்டம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும். சராசரித் தன்மைகளைக் காண்பதன் மூலமே சராசரி அமுக்க அமைப்புக்களையும் அதனல் விளையும் காற்றோட்டத்தொகுதிகளையும் அறியமுடியும். இந்த 'அமைப்புக்கள்' (Patterns) சாதாரண வானிலைப்பார்வைப் படங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றிற்கு ஒவ்வாதனவாய் இருப்பினும் அவை பொதுச் சுற்றோட்டத்தின் இயல்புகளை அறிவதற்குத் துணையாகவுள்ளன.

*The General Circulation of the atmosphere — The new perspective
Dr. George Thambyahpillay, M. A, (Calif), Ph. D. (Cantab), F. R. Met. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய கைத்தொழில்கள் ஈட்டக்கூடிய நன்மைகள், எல்லாச் சிக்கல்களையும் ஆராய்ந்து அவற்றைத் தொடர்புபடுத்தி நிருவகித்து வருவதில் தங்கியிருக்கிறது. திறமையான நிருவாக அமைப்பின்கீழ் இச்சிறிய கைத்தொழில்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுமென்பதைக் கூறத்தேவையில்லை பத்தாண்டுத் திட்டம் ஒரு குடிசைக் கைத்தொழில் நிருவாகசபை தாபிக்கப்படவேண்டுமென சிபாரிசு செய்திருக்கிறது. நிருவாகத் திறனும் வேலைத்திறனும் கைத்தொழில் விருத்திக்கு மிகவும் முக்கியமானவை.


SPORT WEAR AND FLANNELS

Retain their Original Smart Appearance

*We Give Quick Service*

QUEEN'S LAUNDRY

— DYERS AND DRY CLEANERS —

**No. 2, Torrington Road, KANDY.**

★

*OUTSTATION ORDERS EXECUTED PER V. P. P.*


# வளிமண்டலத்தின் பொதுக்காற்றுச் சுற்றோட்டம் புதிய விளக்கம் *

குறிப்பிட்ட சில இடங்களில் நிகழும் வானிலைத்தன்மைகள் அந்த அந்த இடங்களிலுள்ள காற்றோட்டங்களின் விளைவாகவே உண்டாகின்றன எனக் கருதப்படினும் இவையாவும் பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தில் நிகழும் காற்றோட்டத்தொகுதியோடு நெருங்கிய தொடர்புடையன. இதனைப் பொதுவாகப் பலர் உணராதிருக்கின்றனர். மத்திய கோட்டுக் கீழ்க்காற்று (தடக் காற்று), பூமியின் மேற்பரப்பையடுத்து வீசும் மேலைக்காற்று (தென்மேற்கு முரண் தடக்காற்று), முனைவுக் கீழ்க்காற்று எனப் பொதுவாகக் கொள்ளப்படும் பிரதான காற்றுத்தொகுதிகள் வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டத்தோடு தொடர்புடையன. ஆயின், உலகம் எங்கணும் பரந்துள்ள காற்றோட்டங்களுக்கும் தரைக்காற்று கடற்காற்று முதலியவற்றிற்கும் உள்ளதொடர்பு; பருவக்காற்றுக்கும் இடைவிடாது தொடர்பாக நிகழும் சுழல்வளிகள், இவைபோன்று வளிமண்டலத்தில் ஏற்படும் ஏனைய வானிலைத் தன்மைகள் என்பவற்றிற்குமுள்ள தொடர்பு முதலியவற்றை அறிவது கடினமாகும். வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டம் தனிபபட்ட பகுதிகளில் சிறிய அளவில் உண்டாகும் காற்றோட்டத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுக் காற்றுச் சுற்றோட்டம் நிலையாகத்தொடர்ந்து ஏற்படுவதற்குத் தனிப்பட்ட இடங்களிலுள்ள சிறிய காற்றோட்டங்களே காரணமாக விருக்கின்றன. வளிமண்டலத்தில் நிகழும் காற்றோட்டத்தின் உண்மையான தன்மை தெளிவாகப் புலனாகாததால் 'பொதுக் காற்றுச் சுற்றோட்டம்பற்றிய கொள்கையை' அடிப்படையாகக்கொண்டு ஆராய்தல் நன்று. சராசரிமுறையைக் கையாண்டு வளிமண்டலத் தன்மைகள் தேவைக்கேற்ப வேறுபடுத்தப்படுகின்றது. பொதுச்சுற்றோட்டம் பற்றிய கொள்கை பூமியின் மேற்பரப்பில் நிகழும் காற்றோட்டம் அதற்குமேலே (Upper air) நிகழும் காற்றோட்டம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும். சராசரித் தன்மைகளைக் காண்பதன் மூலமே சராசரி அமுக்க அமைப்புக்களையும் அதனால் விளையும் காற்றோட்டத்தொகுதிகளையும் அறியமுடியும். இந்த 'அமைப்புக்கள்' (Patterns) சாதாரண வானிலைப்பார்வைப் படங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றிற்கு ஒவ்வாதனவாய் இருப்பினும் அவை பொதுச் சுற்றோட்டத்தின் இயல்புகளை அறிவதற்குத் துணையாகவுள்ளன.

---

*The General Circulation of the atmosphere — The new perspective
Dr. George Thambyahpillay, M. A, (Calif), Ph. D. (Cantab), F. R. Met. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டத்திற்கு சூரியனிலிருந்து பெறப்படும் வெப்பத்தின் ஏற்றத்தாழ்வே காரணமாகும். சூரியனிலிருந்தும், பூமியிலிருந்தும் இடைவிடாது பெறப்படும் கதிர்வீச்சுச் சக்திக்கும் இடைவிடாது தொடர்பாக வெளியேறும் கதிர்வீச்சுச் சக்திக்கும் இடையே இயல்பாகவுள்ள சமநிலைத்தன்மை காரணமாகவே காற்றுச்சுற்றோட்டம் நிகழுகின்றது. இச் சமநிலைத்தன்மை வெப்பத்தின் வரவுசெலவினால் இயல்பாகத் தொடர்ந்து நடைபெறும் ஒரு தன்மை எனக்கருதுவது தவறு. இச் சமநிலைத்தன்மை பொதுவாக பிறழ்ந்து விடுவதும் இயல்பு. இவ்வாறு பிறழ்ந்து விடுங்கால் காற்றினது பொதுவான சுற்றோட்டத்தன்மையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. பொதுவான சுற்றோட்டத் தன்மைக்கு இந்த ஏற்றத் தாழ்வுகள் இன்றியமையாதன. பூமியின் மேற்பரப்பில் நிகழும் சுற்றோட்டத் தன்மைகளை அவதானிக்குமிடத்து நாள் வேறுபாடுகள், மாதவேறுபாடுகள், பருவகால வேறுபாடுகள் என்பன ஏற்படுகின்றன. இந்த வேறுபாடுகள் பொதுவான சராசரித் தன்மையினின்று பிறழ்ந்த நிலையையே காட்டுகின்றன.

## பொதுக்காற்றுச் சுற்றோட்டம் பற்றிய பழைய கொள்கைகள்

அயன மண்டலப் பகுதிகளில் பிரயாணம் செய்த கடலோடிகள், வடஅரைக் கோளத்தில் வடகீழ்க்காற்று தொடர்ந்து முறையாக வீசுவதற்கும் தென் அரைக்கோளத்தில் தென்கீழ்க்காற்றுத் தொடர்ந்து வீசுவதற்கும் உரிய காரணம் பற்றிச்சில கருத்துக்களை வெளியிட்டனர். பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுற்றுவதனால் அயனமண்டலத்தில் காற்று இத்திசைகளில் வீசுகின்றன என அவர்கள் கருதினர். இக் கருத்தில் காணப்பட்ட குறைபாடுகளை ஆங்கிலேய வானியல் அறிஞரான கலி[1] (Halley) 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் (1686) எடுத்துக்காட்டினார். மேற்கூறிய கருத்துப்படி மத்தியகோட்டைச் சார்ந்து காணப்படும் அமைதி வலயம், கினிக் கடற்கரைப் பகுதியில் வீசும் தென் மேற்குக் காற்று, இந்து சமுத்திரத்தில் வீசும் பருவக்காற்று முதலியவற்றிற்கு விளக்கம் காண முடியாது எனக் கலி எடுத்துக் காட்டினார். அயன மண்டலத்தில் நாடோறும் ஏற்படும் வெப்பமே இவற்றிற்குக் காரணம் என இவர் கருதினார். நாடோறும் ஏற்படும் வெப்பத்தினால் மத்திய கோட்டையடுத்துக் காணப்படும் மேற்காவுகை ஓட்டம் சூரியன் நாடோறும் சுற்றும் திசையில் (சுற்றுவதுபோலத் தென்படும் கிழக்கு-மேற்குத் திசையில்) வளி மண்டலத்தின் காற்றுச் சுற்றோட்டத்தைத் தொடர்பாக இட்டுச் செல்லும் என இவர் கொண்டார். அரை நூற்றாண்டின் பின்பு (1735) கலியின் கொள்கை, வேறொரு ஆங்கில வானியல் நிபுணரான ஆட்லியினால்[2]



(Hadley) முறியடிக்கப்பட்டது. முற் கூறிய கொள்கைக்கு முரணாக, நாடோறும் ஏற்படும் வெப்பத்தினால் வெப்பமான இடத்தை நோக்கிக் காற்று வீசும் என இவர் கருதினார். மேலும், வெப்பமான இடத்தை நோக்கிக் காற்று எல்லாத் திசைகளிலிருந்தும் வீசும் எனவும் குறிப்பிட்ட வட கிழக்கு, தென் கிழக்கு ஆகிய திசைகளில் மட்டும் இருந்து வீச வேண்டிய அவசியமில்லை எனவும் இவர் கண்டார். குளிரான உயர் அகலக் கோட்டுப் பகுதிகளிலிருந்து வெப்பமான அயனப் பகுதிகளுக்குக் காற்று வீச வேண்டும் எனவும் இவர் கருதினார். இவ்வாறு உயர் அகலக் கோட்டுப் பகுதிகளிலிருந்து அயனப் பகுதியை நோக்கிப் பூமியின் மேற் பரப்பைச் சார்ந்து பெரும்பாலும் கிழக்குத் திசையாக வீசும் காற்று பூமியின் நாட் சுற்றுதலால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்குத் திசையாக மாற்றமடைகின்றது.

ஆட்லியின் கருத்துப்படி அயனமண்டலத்திலுள்ள வெப்பமான காற்று மேலெழும்பி (மேற்காவுகையாக) விரிவு காரணமாகக் குளிர்ச்சியடைந்து முனைவுப்பகுதிகளை நோக்கி மேற்காற்றாக வீசும் (Upper air) அதேநேரத்தில் முனைவுப் பகுதிகளிலிருந்து மத்திய கோட்டை நோக்கி பூமியின் மேற்பரப்பைச் சார்ந்து காற்றுவீசும். மேற்காற்றாக வீசும் காற்று கடைசியில் குளிரான முனைவுப் பகுதிகளில் கீழிறங்கும். பூமியின் மேற்பரப்பில் வீசும்காற்று மாற்றமடைவதுபோன்று மேற்காற்றும் மாற்றமடைகின்றது. முனைவுப் பகுதிகளை நோக்கிவீசும் மேற்காற்று அதிகதூரம் வீசுவதனால் கிழக்குத்திசையில் வீசும் அதன்வேகம் படிப்படியாகக் குறைவடைகின்றது. இதனால் பூமியின் நாட் சுற்றுதலுக்கு முன்னாக இக்காற்று வீசுகின்றது. இவ்வாறு மேற்காற்றானது மேலும் கிழக்குத்திசையாகத் திருப்பப்பட்டு மேலைக்காற்றாகத் (தென் மேலைக்காற்று) வீசுகின்றது. பூமியின் சுற்றுகை காரணமாக உண்டாகும் திருப்புவிசை (கோறியோலிஸ் விசை) செங்கோணத்தில் ஏற்படுவது என்பதையும், ஆகவே காற்றினது வேகத்தைக் குறைக்கவோ கூட்டவோ அதற்குச் சக்தியில்லை என்பதையும் ஆட்லி அப்பொழுது அறியாதிருந்தார். பூமியின் சுற்றுகை காரணமாகக் காற்றுப் பல திசைகளிலும் திருப்பப்படுகின்றது என்பதையும் அவர் அறியாதிருந்தார். மத்திய கோட்டிற்கு அண்மையில் கோறியோலிஸ் விசை இல்லாதிருப்பதால் இத்தகைய விளைவு ஏற்படுவதில்லை. எனினும் ஆட்லியின் ஆராய்ச்சியிலிருந்து இரண்டு நிலையான உண்மைகள் பெறப்பட்டன. இவை இக்காலம் வரை உண்மையென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அமுக்கம் ஏற்றத் தாழ்வான முறையில் பரந்திருப்பதனாலேயே காற்றுப்புடை பெயர்ச்சி ஏற்படுகின்றது. அமுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளுக்கும் புவிமேற் பரப்பில் ஏற்படும் வெப்ப வேறுபாடே காரணமாகும்.

(ஆ) பூமியின் சுற்றுகையினுல் உண்டாகும் திருப்பவிசை (கோறியோவிஸ் விசை) காரணமாகக் காற்று வீசும் திசை பெரிதும் மாறுதலடைகின்றது.

வளி மண்டலத்தின் பொதுக் காற்றுச் சுற்றோட்டம் பற்றிய ஆட்லியின் கொள்கை படிப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக் கொள்கை வெளியிடப்பட்டு நூறு வருட காலத்திற்கு இக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. 19-ம் நூற்றூண்டின் நடுப் பகுதியில் (1855) மவுரி3 (Maury) என்பார் வெளியிட்ட காற்றுப் பற்றிய விளக்கப் படம் ஆட்லியின் கொள்கையையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒரு சில மாற்றங்கள் மட்டுமே இதிற் காணப்பட்டன. அந்த விளக்கப் படத்தில் (இங்கு கொடுக்கப்படவில்லை) வட்டத்தினுள் காட்டப்பட்டுள்ள காற்று அம்புக் குறிகள் பல வருடச் சாராசரியைக் கொண்டு இன்று அவதானிக்கப்பட்டுள்ள பூமியின் மேற் பரப்பில் வீசும் காற்றை ஏறத்தாள ஒத்துள்ளன. காற்றோட்டத்தின் குறுக்கமைப்பு (நேர்குத்தான காற்றோட்டமைப்பு) தெளிவாக விளக்கப்படவில்லை. மத்திய கோட்டை நோக்கி வீசும் முனைவுக் காற்று முனைவை நோக்கி வீசும் காற்றை 30° — 35° அகலக் கோட்டுப் பகுதியில் சந்திக்கின்றது. அதாவது கடகக் கோடு, மகரக் கோடு என்பன அமைந்துள்ள இடங்களில் இக் காற்றுக்கள் சந்திக்கின்றன. இந்த இரண்டு காற்றுத் தொகுதிகளும் இதுவரை விளக்கப்படாத சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற் பகுதியில் வீசுகின்றன.

" சரியாக இதுவரை விளக்கப்படாத சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முனைவுப் பகுதியிலிருந்து புறப்படும் இக்காற்றுத் தொகுதியானது முனைவுப் பகுதியிலிருந்து மத்திய கோட்டுப் பகுதிவரை மேற் பரப்பை அடுத்து வீசாது 30° — 35° அகலக் கோட்டுப் பகுதியை அடையும் வரை வளி மண்டலத்தின் மேற் பகுதியில் வீசுகின்றது — இங்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் போவதாகக் கருதப்படும் காற்றுத் தொகுதியை முகிற் கூட்டங்களிடை சந்திக்கின்றது"

30° — 35° அகலக் கோட்டுப் பகுதியில் (வடக்கில்) மேற் கூறிய இரண்டு காற்றுத் தொகுதிகளும் அவற்றின் சக்தி முழுவதையும் சேர்த்து ஒன்றோடொன்று உராய்ந்து கொள்ளுகின்றன. இதனுல், இந்த வளி மண்டலப் பகுதி திரட்சி பெறுவதோடு அமைதியான நிலையையும் அடைகின்றது. வடக்கிலும் தெற்கிலும்



இருந்து வருங் காற்றுத் தொகுதிகளைச் சமநிலைப்படுத்தக் கூடிய சக்தி திரட்சி பெற்ற இவ்வளி மண்டலப் பகுதிக்கு உண்டு பரியகலக் கோட்டுப் பகுதி எனக் கப்பலோட்டிகள் கருதும் அமைதிப் பகுதியிலிருந்து இரண்டு காற்றுத் தொகுதிகள் மேற் பரப்பை அடுத்து வீசுகின்றன. மத்திய கோட்டை நோக்கி வீசும் காற்றுத் தொகுதி வட கிழக்குத் தடக்காற்று எனவும், முனைவுப் பகுதியை நோக்கி வீசும் காற்றுத் தொகுதி முரண் தடக்காற்று எனவும் வழங்கும். முற் கூறிய அமைதிப் பகுதியின் கீழ்ப் பரப்பிலிருந்து மேற் கூறிய காற்றுத் தொகுதிகள் புறப்பட்டதும், அப் பகுதியின் மேற் பரப்பிலுள்ள காற்று வந்து கீழுள்ள காற்றற்ற பகுதியை நிரப்புகின்றன என்பதை நாம் ஓரளவு அனுமானிக்க முடியும். 4

மவுரியின் வெளியீட்டிற்குப் பின்னுள்ள அரை நூற்றூண்டுக் காலத்தில் பல சிக்கலான கொள்கைகள் வெளியிடப்பட்டன பொதுவான காற்றுச் சுற்றோட்டத்தை விளக்கும் முகமாகவே இவை வெளியிடப்பட்டன. அப்பே, பிறிலூயின் 5 (Abbe and Brillouin) என்பார் ஓரளவு தெளிவாக விளக்கிக்கொள்ளக்கூடிய முறையில் தமது கொள்கைகளை வெளியிட்டனர். கீழ்ப் பகுதியிலுள்ள மேல் கீழான காற்றோட்டத்திற்கு மேலேயும் அதனையொத்த மேல்கீழ்க் காற்றோட்டம் ஒன்று உண்டு எனச் சில கொள்கைகள் வலியுறுத்தின. நெடுங்கோட்டையடுத்த பகுதியில் இது ஓரளவு பொருத்தமாயிருக்கக்கூடும். உவில்லியம் பெரல் 6 (William Ferrel) என்பார் மவுரியின் கொள்கையைக் கண்டிக்கு முகமாக வேறொரு புதிய கொள்கையை வெளியிட்டுள்ளார்கள். இக் கொள்கைக்கு அடிப்படையாக இரண்டு உண்மைகளை எடுத்துக்கொண்டார். 1. பூமியானது உராய்வற்ற நிலையில் இருக்கின்றது. 2. மத்திய கோட்டிலிருந்து முனைவுப் பகுதியையடுத்து வெப்பநிலை வீழ்ச்சியடைகின்றது. அகலக் கோட்டையடுத்தும் வெப்பநிலை வீழ்ச்சி உண்டு என்பதை அவர் எடுத்துக்கொள்ளவில்லை. இவரது பின்னைய விளக்கத்தில்[7], சமுத்திரங்கள் கண்டங்கள் என்பவற்றிற்கிடையேயுள்ள வெப்ப வேறுபாடுகள் பற்றியும் இதனுல் அகலக்கோட்டையடுத்து மிகப்பெரிய பகுதிகளே வெப்பநிலை வீழ்ச்சிக்கு உள்ளாகின்றன என்பது பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார். பெரலின் கொள்கையை விளக்கும் விளக்கப்படங்களை நோக்குமிடத்து மேற் பரப்புச் சுற்றோட்டம் ஏறத்தாழ அவதானிக்கப்பட்ட உண்மைகளுக்கு அமையக் காணப்படுகின்றது. ஆயின், மேற்பகுதியில் நிகழும் காற்றோட்டம் பொதுவாகப் பொருத்தமானதாயில்லை. அப்பொழுது, மேற்பகுதியில் நிகழும் காற்றோட்ட விளைவுகள் நன்கு அவதானிக்கப்படவில்லை. மிக அண்மைக் காலத்திலிருந்தே இத் தன்மைகள் அவதானிக்கப்பட்டு வருகின்றன. 1888இல் உவொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்மோல்ற்ஸ் 8 (Von Helmholtz) என்பார் இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். பொதுவான காற்றுச் சுற்றோட்டம் பற்றி இக்காலத்தில் நாம் கருதுவதற்கு அமைய இவற்றில் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. இவரது கொள்கையின்படி பூமியின் அச்சைச்சுற்றி காற்றுக்கள், வெவ்வேறு அகலக் கோடுகளில், வட்டமான சில்லு வடிவில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேற் கூறியவாறு சில்லுவடிவில் காற்றுச் சுற்றுவதற்கு நெடுங்கோட்டையடுத்து நிகழும் சுற்றோட்டமே காரணம் எனக் கொண்டார். நெடுங்கோட்டையடுத்து நிகழும் சுற்றோட்டத்திற்கு உயர் அகலக் கோட்டுப் பகுதிக்கும் தாழ் அகலக் கோட்டுப் பகுதிக்குமிடையேயுள்ள வெப்ப வேறுபாடே காரணமாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து மத்திய கோட்டுப்பகுதியும் முனைவுப் பகுதிகளும் வேறுபட்ட அமுக்கங்களைக் கொண்டனவாக இருக்கின்றன. 30° அகலக் கோட்டுப் பகுதியில் அமுக்கம் அதிகமாக இருப்பதற்கு முனைவுப் பகுதியிலிருந்து மத்திய கோட்டை நோக்கி வீசும் காற்றுத் தொகுதியும், மத்திய கோட்டுப் பகுதியிலிருந்து முனைவுகளை நோக்கி வீசும் காற்றுத் தொகுதிகளும் மோதிக் கொள்வதே காரணமாகும். 1868, 1889 ஆகிய வருடங்களில் புக்கானும் (Buchan) 1893 இல் தீசெறென்ஸ் டீ போட்டும் (Teisserenc de Bort) கடல்மட்ட வெப்ப நிலை, அமுக்கம், காற்று என்பவற்றை விளக்கும் படங்களை வெளியிட்டனர். 1893 இல் சிக்காகோவில் நடைபெற்ற சர்வதேச வளிமண்டலவியல் சங்கத்தில் உயரமுக்க தாழமுக்க வலயங்கள் பொதுவான காற்றுச் சுற்றோட்டத்தை எங்ஙனம் கட்டுப்படுத்துகின்றன என்பதை டீ போட் என்பார் எடுத்து விளக்கினர். இந்த உயரமுக்க தாழமுக்க மையங்களை டீ போட் 1881 இல் " தாக்க மையங்கள் " (Centres of Action) என்னும் பெயரால் வழங்கினர்.

வளி மண்டலத்தில் நிகழும் பொதுவான காற்றுச் சுற்றோட்டத்திற்கு அடிப்படையாக மூன்று உண்மைகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

(1) மத்திய கோட்டுப் பகுதிக்கும் முனைவுப் பகுதிகளுக்கும் இடையேயுள்ள வெப்ப வேறுபாடு.

(2) பூமியின் சுற்றுகையினுல் ஏற்படும் திருப்புவிசை அல்லது கோறியோலிஸ் விசை. காற்றுப்புடைப் பெயர்ச்சிக்கு இது காரணமாகவிருக்கிறது.

(3) காற்றுச் சுற்ரோட்டத்திற்குக் காரணமான உயரமுக்க தாழமுக்க மையங்கள். உதாரணமாக அசோர்ஸ் உயரமுக்கம், ஐசுலாந்துத் தாழமுக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். வெவ்வேறு தன்மையவான காற்ரோட்டங்களுக்கு இவையே காரணமாக அமைகின்றன.

மேற் கூறிய அடிப்படைக் காரணங்களோடு வட அரைக் கோளம், தென் அரைக் கோளம் ஆகிய பகுதிகளில் காற்றுக்கள் சூறுவளி, முரண் சூறுவளி என்பவற்ருல் பாதிக்கப்படுவதும் கொள்ளப்பட்டுள்ளது.

(அடுத்த இதழில் முடியும்)

# வருந்துகிறோம்

சென்ற இதழிற் கூறியபடி திரு. செல்வநாயகம் அவர்கள் எழுதிய "இலங்கையின் அமைப்பும் புவி வரலாறும்" என்ற கட்டுரையும் திரு. கே. ஏ. டி. பெரேரா அவர்கள் எழுதிய "கலாச்சாரம் என்ருல் என்ன?" என்ற கட்டுரையும், திரு. எம். எவ். ஜயசிங்கா அவர்களின் கட்டுரையும், தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்விதழில் வெளி வரவில்லை. நாம் இதற்காக வருந்துகின்ருேம்; வாசகர்களிடம் நாம் மன்னிப்புக் கோருகின்ருேம்.

பல வாசகர்கள் சந்தாதாரராகச் சேர விரும்புகின்றனர். எமது விற்பனை ஒழுங்குகள் இன்னும் செவ்வனே அமையாதபடியால் இப்போது சந்தாக்கள் ஏற்க முடியாததற்கு வருந்துகின்ருேம். கூடிய விரைவில் சந்தாக்கள் ஏற்போம் என்று உறுதி கூறுகின்ருேம்.

இன்னும் இவ்விதழில் இருக்கக் கூடிய பிழைகளுக்கு வருந்துகிருேம். அப் பிழைகளைக் காட்டினுல் அவற்றை இனிமேல் தவிர்ப்போம். அவ்வாறு காட்டுவோர்க்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டவர்களாவோம்.

## பிழை திருத்தம்

இவ்விதழில் விடப்பட்ட கீழ்க்காணும் பிழைகளுக்காக வருந்துகின்ருேம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 49 | 4 | சில குழுவாட்சி | சில் குழுவாட்சி |
| 55 | 20 | மந்திரி முறை | மந்திர முறை |
| 62 | குறிப்பு 4 | குறள் 367 | குறள் 397 |
| 3 | 9 | மேல்க் கட்டிடத்தை | மேற்கட்டிடத்தை |
| 9 | 31 | அறிவேம் | அறிவோம் |
| 12 | 6 | விருதுக்கள் | விருதுகள் |
| 13 | 27 | மே கூறிய | மேற்கூறிய |
| 36 | 3 | ப துகாப்பை | பாதுகாப்பை |
| 87 | 5 | 881-ம் | 1981-ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இந்த இதழைச் சிறப்பிக்கும் கட்டுரைகளை எழுதித்தந்த அறிஞர்களுக்குத் தமிழ்வாசகர்கள் சார்பில் நன்றி கூறுகிறோம். கலாநிதி தனிநாயக அடிகளாரின் கட்டுரையை மொழிபெயர்த்துதவிய இலங்கை அரசகரும மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த செ. வேலாயுதபிள்ளை அவர்கள் தொடர்ந்து எமக்குத் துணை புரிவதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இவ்விதழை உருவாக்கும் பணியில் பெரும்பங்கேற்ற திருவாளர்கள் எஸ். எம். ஜிப்றி, ஜெ. ஜெ. அற்புதராஜா, ஆகியோரும், ஆசிரியர் கே. எம். யோசப் அவர்களும் எமது நன்றிக்கு உரியவர்கள்..

செல்விகள் கே. சோமசுந்தரம், எஸ். வல்லிபுரம், எஸ். செல்லத்துரை, பி. வைரமுத்து, எஸ். தம்பிநாயகம், செல்வர்கள் வ. பாலகிருஷ்ணன், எம். எஸ். அமீர், ந. குமாரதாசன், எம். முருகவேல், எஸ். சிவலிங்கம், எஸ். ஈஸ்வரதாசன், அ. காசிநாதன் எம். எஸ். எம். பரூக் ஆகியோரும், இன்னும் எண்ணற்ற பல ஆசிரியத் திலகங்களும் எமது விற்பனவு முயற்சிக்குத்துணை நின்றமை மறத்தற்பாலதன்று.

கொடுக்கப்பட்ட காலம் குறுகியதேயானாலும், தம் பணியைச் சிறப்பாகச் செய்துதவிய 'ஈழநாடு' அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரியதாகுக. எமது இதழ்களைத் தொடர்ந்து படித்துவரும் வாசகர்களுக்கும் நன்றிகூறி விடைபெறுகிறோம். வணக்கம்.

ஆசிரியர் குழுவினர்


பவுண், வைர, ஆபரணங்களுக்கு

**தங்க மாளிகை**

எல். கே. எஸ்.

ஜுவெல்லர்ஸ்

[இலங்கை-இந்தியாவின் மிகப்பெரிய நகை வியாபாரிகள்]

**யாழ்ப்பாணம்.**

போன்: 281 தந்தி: ஜுவெல்லர்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணற்ற ரசிகர்களின் உள்ளத்தை உவகையூட்டும்
புதுமையான கதைகளை ஏற்ற திறமையான
திரைச்சித்திரங்களை வெளியிடும்

**சினிமாஸ் தாபனத்தார்**

அண்மையில் திரையிட விருக்கும் பல
கன்னிக் காவியங்களில் சில பின்வருமாறு:-

★ **ராஜா தேசிங்கு**
எம். ஜி. ராமச்சந்திரன்
பானுமதி

★ **ராணி சம்யுக்தா**
எம். ஜி. ராமச்சந்திரன்
பத்மினி

★ **ராஜ சேவை**
என். டி. ராமராவ்
பி. கண்ணும்பா

★ **ராஜ மகுடம்**
என். டி. ராமராவ்
ராஜசுலோசன

★ **மீண்ட சொர்க்கம்**
ஜெமினி கணேசன்
பத்மினி

★ **புனர் ஜென்மம்**
சிவாஜி கணேசன்
பத்மினி

★ **பக்த ராவண**
ஏ. நாகேஸ்வரராவ்
ஜமுன

★ **தலைகொடுத்தான் தம்பி**
கே. ஆர். ராமசாமி
மாலினி

★ **அன்புக்கோர் அண்ணி**
ஸகஸ்ரநாமம்
பண்டரிபாய்

★ **அபலை அஞ்சுகம்**
டி. ஆர். மகாலிங்கம்
சௌகார் ஜானகி

★ **ஜீவ பூமி**
எம். ஆர். ராதா
சரோஜா தேவி

★ **பொன் விளையும் பூமி**
ஜெமினி கணேசன்
பத்மினி

★ **எங்கள் குலதேவி**
பாலாஜி
பண்டரிபாய்

★ **மாதவி**
ஆர். எஸ். மனோகர்
தேவிகா



இச்சஞ்சிகை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அ. த. பெனடிக்ற் அவர்களால், யாழ்ப்பாணம் ஈழநாடு லிமிட்டெட் அச்சகத்தில் அச்சேற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org